விலை
ரூபா 20
பக்கங்கள்
28

# உதயன்

சுடர் 31 கதிர் 217 வள்ளுவர் ஆண்டு 2047 ஆனி 16, வியாழக்கிழமை 30.06.2016

மஹஜன சம்பத
இன்றைய சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 21,746,765/-
www.nlb.lk
தேசிய லொத்தர் சபை

## பிள்ளையார் சிலையுடன் சீன வாசிகள் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 30
பிள்ளையார் சிலை உட்பட மூன்று பெறுமதி வாய்ந்த தெய்வச் சிலைகளைச் சீனாவுக்கு கொண்டு செல்ல முற்பட்ட சீன வாசிகள் இருவர் கைது செய்யப்பட்டனர். கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
நேற்று அதிகாலை 12.50 மணியளவில் சீனா செல்லும் விமானத்தில் பயணிப்பதற்காக இரண்டு சீன வாசிகளும் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு வந்த பக்.25

# போர்க்குற்ற விசாரணைகளில் சர்வதேசத்துக்கு இடமேயில்லை

## அரசு மீண்டும் திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 30
இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையில் சர்வதேசத்தின் பங்களிப்பை நிராகரிக்கின்றோம். உள்நாட்டு நீதிக் கட்டமைப்பின் அடிப்படையிலேயே விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இது தொடர்பான அரசின் முன்னைய நிலைப்பாட்டில் மாற்றமில்லை.
இவ்வாறு ஊடகத்துறைப் பிரதி அமைச்சர் கருணாரட்ண பரணவிதாரண மற்றும் இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க ஆகியோர் கூட்டாகத் தெரிவித்தனர்.
அரச தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற பக்.23

"ஏன் எமது நீதித்துறைக் கட்டமைப்பில் பிரச்சினை இல்லையே? இலங்கையின் நீதித்துறை சுயாதீனமானதல்ல என்று எவரும் கூறமுடியாது. இலங்கையின் நீதித்துறை சுயாதீனம் குறித்து கடந்த காலங்களில் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போது தான் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. இப்போது அவ்வாறான நிலைமை இல்லை."

## குற்றத்தை ஏற்றதால் அதிபர், ஆசிரியைகளுக்கு பிணை

தென்மராட்சி, ஜூன் 30
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை ஒன்றில் மாணவியுடன் ஆசிரியர் துர்நடத்தையில் ஈடுபட முற்பட்டார் என்ற சம்பவத்தை மூடி மறைத்த குற்றச்சாட்டை அந்தப் பாடசாலையின் அதிபர், பிரதி அதிபர், இரண்டு ஆசிரியைகளும் ஒத்துக் கொண்டதன் அடிப்படையில் நிபந்தனையில் பிணை வழங்கியது சாவகச்சேரி நீதிவான் மன்றம்.
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலையொன்றில் சிறப்பு வகுப்புக்குச் சென்ற மாணவியிடம் துர்நடத்தையில் ஈடுபட முயன்ற ஆசிரியரின் குற்றத்தை மூடி மறைத்தனர் என்ற குற்றச்சாட்டில் பாடசாலை யின் அதிபர், பிரதி அதிபர் மற்றும் இரண்டு ஆசிரியைகள் கைது பக்.24

## சர்வதேசப் பங்களிப்பை இலங்கை ஒருபோதுமே உதாசீனம் செய்யாது

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமைச்சர் மங்கள உறுதி



ஜெனிவா, ஜூன் 30
போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளின் போது, சர்வதேசப் பக்.24

## பொருளாதார நிலைய சர்ச்சை; ஆராயக்கூடுகிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பது தொடர்பான இறுதி முடிவை எடுப்பதற்காகக் கூட்டமைப்பு ஞாயிறன்று கூடி ஆராயவுள்ளது. சர்ச்சை நீடித்து வருகின்றது. வடக்கு மாகாண சபையின் அமைச்சரவைக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.
வவுனியாவில் பொருளாதார மத்திய நிலையம் அமைப்பதற்கு கொழும்பு அரசு நிதி ஒதுக்கியிருந்தது. நிலையத்தை தாண்டிக் குளத்தில் அமைப்பதற்கு வடக்கு மாகாண சபை தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் வடக்கு மாகாண முதலமைச்சர், தாண்டிக்குளம் காணியை விடுவிக்க இணங்கவில்லை.
இந்த நிலையில் கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், பொருளாதார பக்.23

## வித்தியா படுகொலை வழக்கில் முக்கிய சாட்சி கிடைத்துவிட்டார்

அவரிடம் தீவிர விசாரணை நடக்கிறது என நீதிமன்றில் அறிவித்தது சி.ஐ.டி.

யாழ்ப்பாணம், ஜூன் 30
கூட்டு வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியா வழக்கில், முக்கிய சாட்சி ஒருவர் கிடைத்துள்ளார். அவரிடம் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
இவ்வாறு ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் அறிவித்தனர் குற்றப்புலனாய்வுப் பிரிவினர். பக்.23

## வற் வரி அதிகரிப்பை கண்டித்து போராட்டங்கள்

நேற்று மட்டும் 7 நகரங்களில் கடையடைப்பு, கவனவீர்ப்பு





கொழும்பு, ஜூன் 30
வற் வரி அதிகரிப்புக்கு எதிராக நாட்டின் பல இடங்களிலும் நேற்று கவனவீர்ப்புப் போராட்டங்கள் இடம்பெற்றன.
கடவத்தை, களனி, அனுராதபுரம், பதுளை, பண்டாரவளை, கிரிபத்கொடை மற்றும் கட்டுகஸ்தோட்டை போன்ற நகரங்களில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
இந்த நகரங்களில் நேற்று முழுமையான கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது. கடைகளைப் பூட்டிய வர்த்தகர்கள் நகரங்களில் ஒன்று சேர்ந்து வற்வரி அதிகரிப்புக்கு எதிராகக் கோசங்கள் எழுப்பி பக்.25

## 'வற்' வரியில் திருத்தம் செய்ய மைத்திரி முடிவு

கொழும்பு, ஜூன் 30
பெறுமதி சேர் வரி (வற்) மீது சில திருத்தங்களை மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். பக்.24

## தென்னிலங்கை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் அரசு

நல்லிணக்கத்தின் அவசியம் குறித்து என்கிறார் இமானுவேல் அடிகளார்

ஜெனிவா, ஜூன் 30
நல்லிணக்கத்தின் அவசியம் மற்றும் அரசியல் தீர்வின் முக்கியத்துவம் குறித்து தென்னிலங்கை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியம். இதனை அரசே மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவிடம் எடுத் பக்.24

## நூலிழையில் தப்பினார் சரவணபவன் எம்.பி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பயணம் செய்த பஸ் நேற்று அதிகாலை 3.30 மணியளவில் சிலாபம் பகுதியில் விபத்தில் சிக்கியது. நாடாளுமன்ற உறுப்பினரின் மெய்ப் பாதுகாவலர் காயமடைந்தார். நாடாளுன்ற உறுப்பினர் நூலிழையில் காயங்களின்றித் தப்பினார். பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் உட்படச் சாரதிகளும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.
நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த உபகுழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பஸ்ஸில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் பயணித்தார். இதன்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
(விரிவு 2ஆம் பக்கத்தில்)

# இலங்கை அரசின் செயற்பாடுகள் நம்பிக்கையற்றதாக மாறியுள்ளன

அமெரிக்காவின் அழுத்தம் வேண்டும் என ஜோன் கெரியிடம் அந்த நாட்டு எம்.பிக்கள் வலியுறுத்து

வொஷிங்டன், ஜூன் 30
இலங்கையின் முன்னேற்றங்கள் மிகவும் மெதுவாக – விருப்பமின்றி இடம்பெறுகின்றன. நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான செயல்முறை இப்போது, நம்பிக்கையைப் பலவீனப்படுத்தும் காரணியாக மாறியுள்ளது.
இவ்வாறு அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரிக்கு அமெரிக்க காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 24 பேர் கையெழுத்திட்டு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.
4 பக்கங்களில் அமைந்த அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் தான், அமெரிக்காவின் மேலதிக நிதி உதவி பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலிழையில் தப்பினார் சரவணபவன் எம்.பி.

## அவர் பயணித்த பஸ் விபத்து

யாழ்ப்பாணம், ஜூன் 30

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பயணம் செய்த பஸ் நேற்று அதிகாலை சிலாபம் பகுதியில் விபத்தில் சிக்கியது. நாடாளுமன்ற உறுப்பினரின் மெய்ப் பாதுகாவலர் காயமடைந்தார். நாடாளுன்ற உறுப்பினர் நூலிழையில் காயங்களின்றித் தப்பினார். பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் உள்படச் சாரதிகளும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தனர்.


சரவணபவன் எம்.பி.
பத்திரமாக மீட்கப்படுகிறார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த உபகுழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற தனியார் பஸ்ஸில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனும் பயணித்தார். அதிகாலை 3.30 மணியளவில் பஸ் சிலாபம் பகுதியில் சென்றுகொண்டிருந்தது. திடீரென வீதியின் அருகில் இருந்த கால்வாயினுள் சரிந்தது. மின் கம்பம் ஒன்றுடன் மோதியது.

அதில் பஸ் கடுமையாகச் சேதமடைந்தது. பஸ்ஸில் இருந்தவர்களும் காயங்களுக்கு உள்ளாகினர். சாரதிகளும் காயமடைந்தனர். விபத்தால் பஸ்ஸின் குளிரூட்டி (ஏ.சி) சேதமடைந்தது. அதிலிருந்து வாயு (காஸ்) வெளியேறியது. பஸ்ஸில் இருந்தவர்கள் மூச்சுத் திணறலுக்கு உள்ளாகினர். பஸ்ஸின் சாரதி இருக்கைப் பக்க கதவால் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். காயமடைந்தவர்கள் சிலாபம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். விபத்துத் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ந-5)

# மிதிவெடிகளை விரைந்து அகற்றி இந்திரபுரத்தில் மீள்குடியமர்த்துக

## பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 30

முகமாலை – இந்திரபுரத்தில் மிதிவெடிகள் அகற்றப்படாதுள்ளதால் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியமர முடியாத நிலையில் உள்ளன.

இந்திரபுரம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள 138 ஏக்கர் மக்கள் குடியிருப்புக் காணிகளில் இன்னமும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என்று மீள்குடிமர்வுக்கு அனுமதி வழங்காதுள்ளனர் எனப் பொதுமக்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

'பச்சிலைப்பளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள இந்திரபுரம் கிராமத்தில் 1986 ஆம் ஆண்டு வாழ்ந்த நாம் போர் காரணமாக 1996 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தோம். உறவினர்களுடைய வீடுகளிலும், வாடகை வீடுகளிலும், நலன்புரி நிலையங்களிலும் எங்களுடைய வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றோம்.

எமது பகுதியில் இன்னமும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை என்று கூறுகின்றனர். இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்ட காணிகளில் சில தற்போது சிறிது சிறிதாக விடுவிக்கப்படுகின்றன என அறிகின்றோம். எமது பகுதியிலும் மிதிவெடிகளை அகற்றி மீள்குடியமர அனுமதிக்க வேண்டும்" – என்றனர்.

"போர் நடைபெற்ற வட முனைப் பகுதிகளான முகமாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். கண்ணிவெடிகளை அகற்றும் பணியாளர்களுக்கு வழங்குவதற்கு நிதி போதாமல் உள்ளது. கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக மேலதிகமாக பணியாளர்களை ஈடுபடுத்த முடியாத நிலை காணப்படுகின்றது" – என்று ஹலோரஸ்ற் மனிதாபிமான நிறுவனத்தின் இலங்கைக்கான உதவிப் பணிப்பாளர் றொப் தெரிவித்தார். (ந-9-21,426)

## நேர்முகத் தேர்வில் தெரிவானோருக்கு நாளை நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு நிலவிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நியமனங்கள் நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு, யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வழங்கப்படவுள்ளன என்று கல்வி அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரங்களை உதயன் பத்திரிகையின் முகநூல் பக்கமான https://www.facebook.com/uthayan.print இல் பார்வையிடலாம். உதயன் பத்திரிகை அலுவலகத்துக்கு நேரில் வந்தும் பார்வையிட முடியும். (ந-5)

# முன்னாள் போராளிகளுக்கு வீடுகள் வழங்கத் தீர்மானம்

## ஆணையாளர் ஜானக ரத்நாயக்க தெரிவிப்பு

வவுனியா, ஜூன் 30

வவுனியா – பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் புனர்வாழ்வு வழங்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு அரசால் வீட்டுத் திட்டங்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமில் நேற்று முன்னாள் போராளிகளைச் சமூகத்துடன் இணைக்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெற்ற பின்னர், தங்கள் பிரதேசங்களில் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது அசௌகரியங்களைச் சந்திக்கக் கூடாது. அவர்களுக்குப் புனர்வாழ்வின்போது பலதரப்பட்ட தொழிற்பயிற்சிகள் கற்பிக்கப்படுகின்றன. புனர்வாழ்வு முடியும் போது அவர்களுக்குத் தொழில் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம். இது குறித்து நான் பலருடன் பேசியுள்ளேன். அமைச்சர் சஜித் பிரேமதாசவிடம் பேசியுள்ளேன். முன்னாள் போராளிகளுக்கு ஆயிரம் வீட்டுத் திட்டங்களைத் தந்துதவ வேண்டும் என்றுகேட்டுள்ளேன். அவர் உடன் சம்மதித்தார். விரைவில் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும்" – என்றார்.

நேற்று ஐந்து முன்னாள் போராளிகள் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைந்திருக்கும் 25 முன்னாள் போராளிகளுக்கு தச்சு வேலைக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையப் பணிப்பாளர், சர்வமதக் குருக்கள், பின் இணைவுப் பொறுப்பதிகாரி, முன்னாள் போராளிகளின் பெற்றோர்கள், உறவினர்கள் கலந்து கொண்டனர். (ந-21)

# மன்னாரில் நீர் வழங்கல் தடைப்படும்

மன்னார் நகரப் பகுதிகளுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையால் வழங்கப்படும் நீர் விநியோகம் இன்று நான்கு மணிவரை தடைப்படும் என்று சபையின் பணிப்பாளர் நிமலன் தெரிவித்தார்.

மன்னார் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையால் முன்னெடுக்கப்படும் உலர் வலய நகர் நீர் மற்றும் சுகாதாரத் திட்டத்துக்கு அமைவாக மன்னார் பிரதேசத்தின் பிரதான நீர்க் குழாய்களின் பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் இடம்பெறுகின்றன. காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை மன்னார் நகரப் பகுதிகளில் தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையால் வழங்கப்படும் நீர் விநியோகம் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டது. (ந-415)

# சிமெந்து கலக்கப்பட்ட கசிப்பு காய்ச்சப்பட்ட இடம் முற்றுகை

## சந்தேகநபர்கள் தப்பியோட்டம்; பொருள்கள் பல சிக்கின

யாழ்ப்பாணம், ஜூன் 30

துன்னாலைக் காட்டுப்பகுதியில் உயிராபத்தை எற்படுத்தும் வகையில் சிமெந்து கலந்து காய்ச்சப்பட்டுவந்த கசிப்பு உற்பத்தி நிலையம் மதுவரித் திணைக்கள அதிகாரிகளின் அதிரடி முற்றுகைக்குள் நேற்றுச் சிக்கியது. திடீர் சுற்றிவளைப்பில் 120 லீற்றர் கசிப்பும், 200 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டன என்று மதுவரித் திணைக்களத்தின் பொறுப்பதிகாரி யு.சிறிமான்ன தெரிவித்தார்.



கசிப்புக் காய்ச்சிக்கொண்டிருந்த 3 சந்தேக நபர்கள் தப்பிச்சென்றுள்ளனர் என்றும், அவர்கள் தேடப்படுகின்றனர் என்றும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்கு காய்ச்சப்பட்ட கசிப்பில் உயிர் ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் சிமெந்து கலக்கப்பட்டிருப்பது இனங்காணப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

துன்னாலைக்கும் முள்ளிக்கும் இடைப்பட்ட காட்டுப்பகுதியில் இயங்கி வரும் கசிப்பு உற்பத்தி நிலையத்தை இனங்காண மதுவரித் திணைக்கள அதிகாரிகள் பல முயற்சிகளை எடுத்திருந்தனர். அங்கிருந்து வடமராட்சியின் பல பகுதிகளுக்கும் போத்தல்களில் நிரப்பட்டு கசிப்பு விநியோகம் மேற்கொள்ளப்படுகின்றது என்று தகவல் கிடைத்த நிலையில் நேற்றுத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

உதவி மதுவரி ஆணையாளர். என்.சோதிநாதன் மற்றும் மதுவரி அத்தியட்சகர் மதன், மோகன் ஆகியோரின் ஆலோசனையில், மதுவரிப் பொறுப்பதிகாரி சிறிமான்ன தலைமையில் அமிராஜ, சேனநாயக்க தசநாயக்க, சேனாதிராஜா ரவிச்சந்திரன், மகிழ்ராஜன் தேவகருணன், கமலன் வசிகரன் ஆகிய உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு இந்த நடவடிக்கையில் பங்கெடுத்தது. சுற்றிவளைப்பில் கோடா உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருள்கள், பரல்கள், சுருள் வயர்கள் என்பன கைப்பற்றப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

துன்னாலையில் நேற்றுமுன்தினம் ஒரு போத்தல் கசிப்பை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4,109)

# சிறுமியை துர்நடத்தைக்கு உட்படுத்திய நபருக்கு மறியல்

கிளிநொச்சி, ஜூன் 30

பதின்ம வயதுச் சிறுமிக்கு காதல் வலைவீசி அவரைப் பாலியல் துர்நடத்தைக்கு உட்படுத்திய சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட குடும்பஸ்தரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

தனக்கு இன்னமும் திருமணம் ஆகவில்லை. இவ்வாறு தெரிவித்து சிறுமியைக் காதலித்துள்ளார். இதனைப் பயன்படுத்தி சிறுமியைத் துர்நடத்தைக்குள்ளாக்கியுள்ளார் எனப் பாதிக்கப்பட்ட சிறுமியின் உறவினர்களால் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். சிறுமியால் சந்தேக நபராக அடையாளப்படுத்தப்பட்ட குடும்பஸ்தரைப் பொலிஸார் கைதுசெய்தனர். (ந-5-21-ரி3)

தேசிய போசணை மாதம் – ஜூன் – 2016

- உள்ளூர் உணவுகளை மீள அறிமுகப்படுத்துவோம். பதனிடப்பட்ட உணவுகளை தூர விலக்குவோம்.
- பள்ளிச் சிறார்களுக்கு துரிதமாகத் தயாரிக்கும் உணவுகள், உணவுவேளைகளைத் தவிர்த்தல் என்பன பாரதூரமான போசணைக் குறைபாடுகளை ஏற்படுத்தி மூளையின் திறனை மந்தப்படுத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கிலிருந்து 2017க்குள் இராணுவம் அகற்றப்பட்டுவிடுமாம்

ஜெனிவா, ஜூன் 30
வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை அகற்றும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் நிறைவடையும். இறுதிக் கட்டப் போரில் கொத்துக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருந்தால், அது பாரதூரமான விடயமாக இருக்கும். அது தொடர்பில் விரிவான விசாரணைகளை அரசு முன்னெடுக்கும்.

இவ்வாறு வாக்குறுதிகளை வழங்கினார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

ஜெனிவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத் தொடரின் பக்க நிகழ்வாக, ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தரச் செயலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த உப மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த உப மாநாட்டில், அண்மையில் வெளியாகியுள்ள கொத்துக் குண்டுக் குற்றச்சாட்டுத் தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர், இறுதிக்கட்டப் போரில் கொத்துக்குண்டுகள் பயன் படுத்தப்பட்டிருக்காது என்றே நாங்கள் கருதுகிறோம். ஆனால், கொத்துக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக நிரூபிக்கப்பட்டால், நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பாக விசாரிப்போம் என்று தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்ததாவது:

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகசுயாதீனஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஊடக சுதந்திரத்தை மீள உறுதி செய்யும் வகையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பிலான நிரந்தர அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. காணாமற்போனவர்களுக்கு சான்றிதழ் வழங்குவது தொடர்பிலான பிரேரணைக்கு அடுத்த மாதமளவில் நாடாளுமன்றின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையுடன் இலங்கை அரசு நெருக்கமாகப் பணியாற்றி வருகின்றது. 1972ஆம் மற்றும் 78ஆம் ஆண்டுகளில் கொண்டு வரப்பட்ட அரசமைப்பு நாட்டின் பன்முகத்தன்மை கருத்திற் கொள்ளப்படவில்லை. அந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டு, தனிமனித சுதந்திரம் உறுதிப்படுத்தப்படும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் – என்றார். (வ-5)

# இலங்கை வருகிறார் பான் கீ-மூன்

ஜெனிவா, ஜூன் 30
ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூன் இந்த வருடம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நேற்று இந்தத் தகவலை வெளியிட்டார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் கடந்த பெப்ரவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்தார்.

அதேபோன்று ஐ.நா. பொதுச் செய லாளர் பான் கீ மூன் இந்த வருட இறுதிக்குள் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

அதேபோன்று, இலங்கையின் நல்லிணக்க செயல்முறைகள் தொடர் பில் நியாயமான மற்றும் நியாயமற்ற முறையில் விமர்சிக்கும் அனைவரையும் நேரில் வருகை தருமாறு அரசு அழைக்கின்றது என்றார் அமைச்சர் மங்கள சமரவீர. (வ-5)

# பொறுப்புக்கூறல் செயல்முறையில் சர்வதேசப் பங்களிப்பு அவசியம்

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து

போர்க்குற்றச்சாட்டு தொடர்பான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் போது இலங்கை, சர்வதேச பங்களிப்பை பெற்றுக் கொள்ளுதல் அவசியம்.

இவ்வாறு வலியுறுத்தியது ஐரோப்பிய ஒன்றியம்.

ஐ. நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது அமர்வில் நேற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியாக பங்கேற்ற நெதர்லாந்தின் ஐ.நாவுக்கான தூதுவர் ரோடரிக் வென் செக்ரீவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவித்ததாவது:–

நீண்ட நடவடிக்கை ஒன்றுக்கான நடைமுறையில் இலங்கை இன்னும் ஆரம்பக்கட்டத்திலேயே இருக்கின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் ஏற்றுக் கொண்ட யோசனைகளை இலங்கை நிறைவேற்ற வேண்டும்.

உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை அமைத்து பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மீண்டும் வன்முறைகள் எழாத உறுதியுரையை வழங்கும் வகையில் செயற்படுவதற்கு சர் வதேச பங்களிப்பு அவசியமா னது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வடக்கு, கிழக்கில் இயல்பு வாழ்கையை ஏற்படுத்தி, சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தவேண்டும். இதற்கான முனைப்புக்களை இலங்கை மேற்கொள்ள வேண்டும்.

அரசியல் கைதிகளை விடுவித்தல், படையினரால் மேற்கொள்ளப்பட்டபாலியல்வன்முறைகளை கட்டுப்படுத்தல், பொதுமக்கள் பணிகளில் இராணுவத்தினர் தலையிடுவதை நிறுத்துதல், காணிகளை அவர்களின் உரிமையாளர்களிடம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளில் அரசு துரிதமாக ஈடுபடவேண்டும் – என்றார். (வ-5)

# ஆசிரியர் மீதான மாணவியின் குற்றச்சாட்டில் உண்மையுள்ளது

## துணுக்காய் கல்வி அதிகாரிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30.
துணுக்காய் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர், அங்கு பயிலும் மாணவிகளுடன் துர்நடத்தைக்கு முற்பட்டார் என்ற குற்றச்சாட்டில் உண்மையுள்ளது என விசாரணைகளை மேற்கொண்ட கல்வி அதிகாரிகள் வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

குறித்த பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பாடசாலையின் விடுதியில் தங்கியிருந்தே கல்வி கற்றுவருகின்றார். அங்கு யாழ்ப்பாணத்திலிருந்து சென்று கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரும் ஆசிரியர் விடுதியில் தங்கியுள்ளார்.

இதனால் கடந்த மூன்று மாதமாக தொடர்ந்து குறித்த மாணவியுடன் ஆசிரியர் தவறாக நடந்துகொள்ள முற்பட்டுள்ளார். எனினும் அச்சத்தின் காரணமாக மாணவி வெளியில் சொல்லவில்லை. இந்த நிலையில் கடந்த வாரம் மாணவியை கட்டாயப்படுத்தும் முயற்சியில் ஆசிரியர் ஈடுபட்டுள்ளார்.

இதனால் மாணவி பாடசாலை அதிபருக்கு எழுத்தில் முறையிட்டுள்ளார். அதிபர் கோட்டம் ஊடாக வலயத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார். வலயக்கல்விப் பணிப்பாளர் ஊடாக கல்வித் திணைக்களம் மற்றும் வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதன் பிரகாரம் உடனடியாக ஓர் குழு அமைக்கப்பட்டு ஆரம்ப விசாரணைகள் கடந்த திங்கட்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆசிரியரை கோட்டத்தின் கண்காணிப்பில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

ஆரம்ப விசாரணையின் அறிக்கை இன்றைய தினம் (நேற்று) மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர். (வ -101)

# கஞ்சாவுடன் இளைஞன் கைதானார்

கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் மடம் வீதிப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

மடம் வீதிப் பகுதியில் சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், சந்தேகத்தில் இளைஞர் ஒருவரைச் சோதனையிட்ட போது, அவருடைய காற்சட்டைப் பையில் கஞ்சா இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட இளைஞர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 12ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ-103)

# பாடசாலை அதிபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம் ஜூன், 30
மாணவனொருவனைக் கடுமையாகத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாண கல்வி வலயத்திற் குட்பட்ட பாடசாலை ஒன்றின் அதிபரை எதிர்வரும் 12ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் குறித்த பாடசாலையின் பத்தாம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் முதல் நாள் பாடசாலைக்கு சமுகமளிக்காததால், வரவின்மைக்கான கடிதத்துடன் அதிபரின் அலுவலகத்துக்கு சென்றுள்ளான். அப்போது குறித்த அதிபர் மாணவனைக் கடுமையாகத் தண்டித்ததுடன், கடிதத்தைக் கிழித்து எறிந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இந்தச் சம்பவம் தொடர்பாக அந்தப் பாடசாலையின் ஆசிரியர்களுக்கு மாணவனால் தெரியப்படுத்தப்பட்டது. பின்னர் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட அதிபர் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவர் சார்பில் தோன்றிய சட்டத்தரணி குறித்த முறைப்பாடு பொய்யானது என மன்றில் தெரிவித்தார். எனவே குறித்த அதிபரை பிணையில் விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அண்மைக்காலத்தில் ஆசிரியர்களுக்கு எதிராக இவ்வாறான பல முறைப்பாடுகள் செய்யப்படுவதனால், ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்வதற்கே அஞ்சும் நிலை ஏற்பட்டுள்ள தாகவும் சட்டத்தரணி மன்றில் தெரிவித்தார். எனினும் அவருடைய விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் சி.சதீஸ்தரன் விசாரணை நடவடிக்கைகள் நிறைவடையாததால் அதிபரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-103)

## கண்ணீர் அஞ்சலி



எமது செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.சின்னையா லோகேஸ்வரன் அவர்களின் தந்தை

### நடராசா சின்னையா

28.06.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்தார். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகமும் உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை.

## மரண அறிவித்தல்

### தம்பையா இராசதுரை

(ஓய்வு பெற்ற நீர்ப்பாசன தொழிநுட்ப உத்தியோகத்தர் கிளிநொச்சி)



மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோட்டைக்காடு சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா இராஜதுரை நேற்று (29.06.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பையா-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் விஜயராணி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னரத்தினம், தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜீவா(லண்டன்), ரஞ்சனா(கனடா), பிரதீபா (லண்டன்), தரணிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனுசயதீபா, ரவீந்திரராசா, சதீஸ்குமார், ஜெஸ்லி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வர்ஷா, வருண், தீப்திகா, விஸ்ணு, அஞ்சனா, ஆரணி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2016) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் மல்லாகம் தொந்தனை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோட்டைக்காடு,
சுன்னாகம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 1920403

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் வதை புரியும் ஆசிரியருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை

## விதிக்க முடியும், கவனமாக நடந்து கொள்ளுங்கள் என மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 30

ஆசிரியர்கள் மாணவர்கள் மீது பாலியல் வதை புரிவது மோசமான குற்றம். அவ்வாறு பாடசாலை மாணவர்கள் மீது பாலியல் வதை புரியும் ஆசிரியர்களை 15 வருடங்கள் வரை சிறையில் அடைப்பதற்குச் சட்டம் அனுமதிக்கிறது. ஆசிரியர்களும் கவனம்.

இவ்வாறு யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் எச்சரிக்கை செய்தார்.

குற்றச்செயல் ஒன்று நடைபெற்றுள்ளது எனத் தகவல் அல்லது முறைப்பாடு கிடைத்தவுடன் அதுபற்றி, பொலிஸாருக்கு அறிவிக்காமல், அந்த ஆசிரியர் குற்றம் புரிந்தார் என்று கருதி, ஒழுக்காற்று விசாரணை நடத்துகின்ற அனைத்து உயர் அதிகாரிகளுக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். குற்றச் செயல் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறிய குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றின் மூலம் சட்டப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

யாழ். மேல் நீதிமன்றத்தில் செவ்வாயன்று விசாரணைக்கு



எடுத்துக்கொள்ளப்பட்ட பிணை மனு ஒன்று சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்றில் சமூக விரோதக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி மேல் நீதிமன்ற நீதிபதி குறிப்பிட்டார். அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பதினாறு வயதுக்குக் குறைந்த மாணவிகள், பாடசாலை வளாகத்தில் அரச கடமையில் உள்ள ஆசிரியர்களின் அதிகாரபூர்வமான கட்டுப்பாட்டில் இருக்கும்போது அவர்கள் மீது பாலியல் வதை புரிவது பாரதூரமான குற்றம். இத்தகைய குற்றம்புரியும் ஆசிரியர்களுக்கு தண்டனைச் சட்டக் கோவையின் விதிகளுக்கு அமைவாக, 7 ஆண்டுகளில் இருந்து 15 ஆண்டுகள்வரைகடூழியசிறைத் தண்டனை விதிக்கப்படும்.

### ஈவிரக்கம் இராது

மாணவிகள் அல்லது பதின்ம வயதுடைய சிறுமிகள் மீதான பாலியல் வதை குற்ற வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படும் வழக்குகளாகும். மாணவிகள் மீது குற்றம் புரிந்ததாகக் குற்றஞ் சுமத்தப்படும் ஆசிரியர்கள் விசாரணைகளில் குற்றவாளிகளாகக் காணப்பட்டால், அவர்களுக்கு ஈவிரக்கம் பார்க்கப் படாது.

### வக்காலத்து வேண்டாம்

பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் வதை குற்றம் புரிந்த ஆசிரியரைக் காப்பாற்றுவதும் குற்றச் செயலாகவே கருதப் படும். சாட்சிகள், பாதிக்கப்பட்ட நபர்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டமானது, பாலியல் குற்றம் புரிந்தவர்களைக் காப்பாற்றும் நோக்கத்துடன் செயற்படுகின்ற அதிபர் ஆசியர்களை, தண்டிக்கப்படக் கூடிய குற்றத்தைப் புரிந்தவர்களாகவே கருதுகின்றது.

### நீதிபதிகளால் முடியாது

பாலியல் வதை குற்றச் செயல்களை நீதிமன்றத்தில் நீதிபதிகளாலேயே சமாதானமாக இணங்கி வைக்க முடியாத குற்றச் செயல் என சட்டம் பரிந்துரைக்கின்றது. மாணவிகள் மீது பாடசாலை வளாகத்தில் பாலியல் வதை செய்யும் ஆசிரியர்களை சட்டத்தின் முன் நிறுத்தாமல், சிறைத் தண்டனைக்குரிய குற்றம் புரியப் பட்டிருக்கின்றது என்று தெரிந்து கொண்டும், பொலிஸார் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிக்காமல், அதிபர், ஆசிரியர், பழைய மாணவர் சங்கம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் என்பன ஒன்றிணைந்து சமாதானமாக இணங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது, குற்றச் செயல்களுக்கு உதவியாக உடந்தையாக இருந்த குற்றச்சாட்டை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். குற்றச்செயல்களை மறைப்பதற்கு உதவியாக – உடந்தையாக இருந்தமை என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

### முதலில் பொலிஸ்

காலை 7 மணியில் இருந்து பிற்பகல் 2 மணிவரையும், பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் அதிகார எல்லைக்குட்பட்ட, பாடசாலையின் பாதுகாவலில் இருந்து வருகின்றார்கள் மாணவிகள். அத்தகைய நேரத்தில் பாலியல் வதை குற்றம் ஒன்று ஆசிரியரால் புரியப்பட்டால், அந்த மாணவி எந்த ஆசிரியரிடம் அல்லது எந்த அதிபரிடம் முறைப்பாடு செய்கின்றாரோ, அவர், அந்த மாணவியின் பெற்றோருக்கு அதுபற்றி உடனடியாக அறிவித்து, அந்த மாணவியை பெற்றோருடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று, முறைப்பாடு செய்ய வேண்டியது சட்டத்தின் முதற் தேவையாகும்.

கல்வித்துறை உயரதிகாரிகளுக்கு பாலியல் வதை குற்றம்சம்பந்தமாகதகவல்கிடைத்தவுடன், பாதிக்கப்பட்ட மாணவியை, பொலிஸ்நிலையத்துக்கு அழைத்துச் சென்று முறைப்பாடு செய்யுமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபருக்கு அறிவுறுத்த வேண்டியது, உயரதிகாரிகளின் கடமையாகும்.

இந்தச்செயற்பாடுகள் செய்ததன் பின்பே, குற்றஞ்சுமத்தப்பட்ட ஆசிரியருக்கு எதிராக நிர்வாக ரீதியான ஒழுக்காற்று நடவடிக்கை பற்றி அறிவிக்கப் பட வேண்டும்.

### அதிகாரிகளுக்கு சட்டநடவடிக்கை

சட்டரீதியான பொலிஸ் விசாரணைகள், நீதிமன்ற விசாரணைகளைத் தவிர்த்து, ஒழுக்காற்று விசாரணை நடத்துகின்ற அனைத்து அதிகாரிகள் மீதும், பாலியல் வதை குற்றச் சம்பவத்தை அல்லது குற்றச் செயலை, பொலிஸாருக்கு அறிவிக்கத் தவறிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும்.

பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் வதை குற்றச் செயலானது இரண்டு விதமான விசாரணைகளைக் கொண்டிருக்கின்றது. ஒன்று பொலிஸ் நீதிமன்ற விசாரணையின் மூலம் குற்றம் புரிந்த ஆசிரியர் சிறையில் அடைக்கப்படுவது, இரண்டாவது நிர்வாக ஒழுக்காற்று விசாரணையின் மூலம் வேலையில் இருந்து இடை நிறுத்தப்படுவது. ஒழுக்காற்று விசாரணை என்ற போர்வையில், குற்றச் செயலில் ஈடுபட்ட ஆசிரியரை வேறு பாடசாலைக்கு இடம் மாற்றம் செய்து, பாலியல் வதை குற்றச் செயலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் கல்வித்துறை உயர் அதிகாரிகள், தண்டனைக் குரியவர்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

யாழ். குடாநாட்டு மாணவர்களின் ஒழுக்கம் பற்றி பேசிக் கொண்டிருக்கும் இன்றைய சூழ்நிலையில், பாடசாலை மாணவிகள் மீதான ஆசிரியர்களின் ஒழுக்கக் கேடான செயற்பாடுகள் சகிக்க முடியாதவை. மன்னிக்கப்படவும் முடியாதவை. மாணவிகள் மீதான ஆசிரியர்களின் பாலியல் வதை செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி இடவேண்டுமானால், பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை வழங்கி தண்டிப்பதுதான் அதற்குரிய ஒரே மருந்தாகும்.

### அனைவர் மீதும் நடவடிக்கை

நிலைமைகளைப் பார்க்கும் போது, யாழ். குடாநாட்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை இயங்குகின்றதா? அவர்களின் பணிகள் என்ன? சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கடமை புரிகின்றார்களா? குடும்ப நல அதிகாரிகள் கடமையாற்றுகின்றார்களா? சிறுவர் பாதுகாப்பு அரச மட்ட திணைக்களங்கள் இயங்குகின்றனவா? என்ற சந்தேகம் எழுகின்றது.

மாணவர்கள் போராட்டம் நடத்தினால்தான், மாணவிகள் மீதான பாலியல் வதை குற்றச் சாட்டுக்கு உள்ளாகிய ஆசிரியர்கள் கைது செய்யப்படுவார்கள் என்ற நிலமை யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் போராட்டம் நடத்தாமல் விட்டிருந்தால், கைதுகள் நடைபெறமாட்டாது என்ற நிலமையும் உருவாக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டிய அரசதிணைக்களங்கள், ஒழுங்கு முறையாகக் கடமையாற்றியிருந்தால், போராட்டங்கள் நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கமாட்டாது. குற்றச் செயல்கள் அதிகரித்துள்ள சூழ்நிலையில் உரிய முறையில் கடமை புரியாத அனைத்து அரச அதிகாரிகளும் நீதிமன்றத்தில் நிறுத்தப் படுவார்கள்– என்றார். (ற-4)

விற்பனையாளர் தேவை
கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் சகல பிரதேசங்களிலும் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்வதற்கு விற்பனையாளர் தேவை.
தகைமைகள்:
லொத்தர் சீட்டுக்கள் தொடர்பான முன் அனுபவம் விரும்பத்தக்கது.
முகவர் நிலையம்:
தேசிய லொத்தர் சபை ( Saji Motors)
209, Kandy Road, Kilinochchi.
077 666 0178

அழகுக் கலை பயிற்சி வகுப்புக்கள்
ஆஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்திருக்கும் பிரபல அழகுக்கலை நிபுணர்
திருமதி தர்சினி றஞ்சன் அவர்களால்
மணப்பெண் அலங்காரம்,
சிகை அலங்காரம்
முக அலங்காரம்
போன்ற அலங்கார வகுப்புக்கள் (Workshop) நடத்தப்படவுள்ளன.
வகுப்புக்கள்
03.07.2016 ஞாயிறு தொடக்கம்
08.07.2016 வெள்ளி வரை
இலவச அறிமுக வகுப்புக்களும் அதனைத் தொடர்ந்து குறைந்த கட்டணத்தில் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள்.
தொடர்புகளுக்கு:
திருமதி தர்சினி றஞ்சன்
தொ.பே.இல: 0711103612 / 021 222 5158
e-Mail: harishi09@gmail.com
179/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.



வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை
ஆதனப் பெயர்மாற்ற அறிவித்தல்

வட்டாரம் : 10
ஆதன இலக்கம் : 71 (புதிய இலக்கம்)
நவாலிறோட் (பாடசாலை ஒழுங்கை)
கிராமசேவையாளர் பிரிவு : J/134 நவாலி வடக்கு

வட்டாரம் 10, நவாலிறோட்(பாடசாலை ஒழுங்கை), ஆதன இலக்கம் 71 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்குப் பகுதி, மானிப்பாய் கோவிற்பற்று நவாலியிறை "தெம்பிலும் வல்லவராசியும் " என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 குளி 0.73 கொண்ட) இவ்வாதனமானது ஆஸ்பத்திரி வீதி, சங்கானை மேற்கைச்சேர்ந்த பாலகிருஸ்ணன் பெண் சாரதாதேவி ஆகிய இவர்களால் நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் சக்தி வடிவேல் பெண் கணேஸ்வரி என்பவருக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.வசந்தசேனன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 9312 ஆம் இலக்க 13.02.2012 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தமென தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நிலஅளவையாளர் திரு.ரி.பாலசுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 190/2016 ஆம் இலக்க 2016.03.24 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " தெம்பிலும் வல்லவராசியும் " நிலப்பரப்பு 03 குளி 2.73 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாதவிடத்து குறித்த ஆதனமானது ஆறுமுகம் சக்திவடிவேல் பெண் கணேஸ்வரி என்பவர் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னந் தோப்புக்களை உருவாக்க அதிகாரிகள் உதவி செய்ய வேண்டும்

## வினாசியோடைக் கிராம மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 30

ஆயிரம் ஏக்கர் தென்னந் தோப்புக்களுடன் வாழ்ந்த கிராமங்களில் இன்று ஒரு தென்னையும் இன்றி வாழவழியின்றித் தவிக்கின்றோம். எமக்கு மீண்டும் அந்த நிலையை உருவாக்க உரியவர்கள் ஆவன செய்ய முன்வர வேண்டும்.

இவ்வாறு வினாசியோடை மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

"போரால் கிராமத்தின் அடையாளங்கள் அழிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ளோம். நாம் அடுத்தவர் தயவை எதிர்பார்க்கும் பரம்பரை ஒட்டாண்டிகள் அல்ல. 1991ஆம் ஆண்டுவரை எமது கிராமத்தில் ஆயிரம் ஏக்கர் வரையில் தென்னந் தோப்புக்கள் இருந்தன. இன்று நாம் ஒரு நேரமாவது கூலிவேலை கிடைக்காதா என அலைகின்றோம். அன்று எமது தென்னந் தோப்புக்களில் வேலைக்கு ஆக்களை அமர்த்தி அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியிருந்தோம். ஆனால் இன்று நாம் பலருக்கு பணிந்து வாழ்கின்றோம். 1991ஆம் ஆண்டு பூநகரியில் இராணுவம் தரையிறக்கப்பட்டு இராணுவ நடவடிக்கை இடம் பெற்றபோது இடம்பெயர்ந்தோம். தற்போது சொந்த ஊருக்கு வந்தும் சொந்த சுடுகாட்டில் இருப்பதுபோன்று சகல வாழ்வாதாரமும் அழிக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றோம். எமது பிரதேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப நாம் தென்னந் தோப்புகளை உருவாக்க விரும்புகின்றோம். நாம் மீண்டும் தென்னந் தோட்டங்களை உருவாக்குவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உதவ வேண்டும்"– என்று தெரிவித்தனர்.

"குறித்த பகுதிகளில் ஏற்கனவே தென்னந்தோப்பு இருந்து அழிக்கப்பட்டது என்பதை உறுதி செய்து மீண்டும் அதனை உருவாக்க முயல்பவர்கள். அதற்கு ஆவண செய்யுமாறு கோரி எமக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிப்பவர்களுக்கு சொந்த நிலம் இருப்பதனை கிராம அலுவரகர் உறுதிப்படுத்த வேண்டும். நாம் நேரில் ஆய்வு செய்து ஏக்கருக்கு அதிக பட்சமாக 50 ஆயிரம் ரூபா வரையில் இலகு கடனை பெற்றுக் கொடுக்க முடியும்"– இவ்வாறுவடமாகாணதெங்குஅபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் வைகுந்தன் தெரிவித்தார். (ற–101)

# மாணவன் இறந்த விபத்து காரணமான சாரதி கைது

படிவாகனம் மோதி மாணவன் விபத்துக்குள்ளாகி உயிரிழந்த போதும் அந்த விபத்து ஏற்படுவதற்கு முதற் காரணம் வீதியோரம் நின்றிருந்த ஹைஏஸ் ரக வாகனக் கதவு திறக்கப்பட்டமை என்பதுசிசிரிவிகமரா மூலமாகத் தெரியவந்தது. அதன் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். சிவன்கோவிலடியில் 23 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் யாழ்.நகரப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காதுஉயிரிழந்தான். ஏற்கனவே படி வாகன சாரதி கைது செய் யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

விபத்து நிகழ்ந்த இடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவில் விபத்துச் சம்பவம் பதிவாகியிருந்தது. குறித்த மாணவனை படி வாகனம் மோதியபோதும் அவ்வாறு மோதுவதற்கு முதற் காரணம் வீதியோரம் நின்றிருந்த ஹைஏஸ் வாகனத்தின் கதவு திடீரெனத் திறக்கப்பட்டமை தான் எனக் கண்டறியப்பட்டது. அவ்வாறு திடீரெனக் கதவு திறக்கப்பட்டதால் சைக்கிளில்சென்ற மாணவன் ஹைஏஸ் வாகனக் கதவுடன் மோதுண்டு நிலத்தில் விழுகிறான். மாணவனுக்குப் பின்னால் சென்ற படிவாகனம் திடீரென மாணவனை மோதியது.

விபத்துக்கு முதற் காரணம் ஹைஏஸ் வாகன சாரதி என்று பொலிஸார் தெரிவித்தனர். விபத்தையடுத்துக் குறித்த ஹைஏஸ் வாகன சாரதி அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றிருந்த நிலையில் தகவல் மற்றும் விசாரணை மூலமாக கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பகுதியைச் சேர்ந்த சகோதர இனத்தவர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார். (ற–4,101)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்பட்டோருக்கு விலக்களிப்பு

## வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் அரசின் கொள்கை திட்டமிடலின் கீழ், இதுவரையும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்பட்டவர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சைகளில் விலக்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வடமாகாண அரச சேவை பட்டதாரி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் செயலாளர் என்.ஐங்கரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடமாகாண பிரதிப் பிரதம செயலாளரால் (நிர்வாகம்) 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் தரம் 111 பதவி நிலையில் உள்ளீர்க்கப்பட்டவர்கள், முதலாவது மற்றும் இரண்டாவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சைகளில் தோற்றுவர்.

இவர்கள் சித்தியடைந்திருப்பின் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்குள் உள்ளீர்க்கப்படும் சந்தர்ப்பத்தில், இந்த பதவி நிலையிலுள்ள தரம் 11 இல் தோற்ற வேண்டிய தடை தாண்டல் பரீட்சைகளில் தோற்ற வேண்டிய தேவையில்லை. அந்த பரீட்சையில் இருந்து அவர்கள் விலக்களிப்பு பெறுகின்றனர்.

இதேபோன்று வடமாகாண பிரதிப் பிரதம செயலாளரால் (நிர்வாகம்) 2016 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நிலையிலுள்ளோர் முதலாவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்தும், தமது சேவைக் காலத்தை 10 வருடங்களாக பூர்த்தி செய்தும், அந்த சேவைக் காலப் பகுதிக்குரிய வேதன ஏற்றங்களை உரிய முறையிலே பெற்றுக் கொண்டும், பதவி உயர்வுக்குத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின், அவர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி நிலையின் தரம் 11 இற்கு உயர்வு பெற்றுச் செல்ல முடியும்.

இந்த பதவி உயர்வுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கத் தகுதியுடையோர், எதிர்வரும் ஜூலை மாதம் 30 திகதிக்கு முன்னதாக தத்தமது திணைக்கள தலைவரின் உறுதியுரையுடன், பிரதிப் பிரதம செயலாளருக்கு (நிர்வாகம்) விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். தரம் 11 க்கான பதவி உயர்வைப் பெற்றதன் பின்னர் தரம் 11 இல் சித்தியடைய வேண்டிய வினைத் திறமை காண் தடைப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

அரச கொள்கையின் அடிப்படையிலே வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ், வித்தியாசமான வெவ்வேறு பதவிப் பெயர்களில் உள்ளீர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரிகளுக்கு தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணிகள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அமர்த்தப்பட்ட அலுவலர்களுக்கான வினைத் திறமை காண் தடைப்பரீட்சை மற்றும் தரம் 11 க்கான பதவி உயர்வு தொடர்பில் இருந்து வந்த குழப்ப நிலைகளுக்கு தீர்வுகளை முன்வைக்கும் படி கோரிக்கை விடுக்கப்பட்டது.

தற்போது வட மாகாண பொது நிர்வாக அமைச்சு இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.– என்றார். (ற–ஐ–ரி2)


பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர்

திரு. தர்மலிங்கம் நவீந்திரன்

அவர்கள் அதிபர் சேவை தரம் III இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைவதோடு அவர் மேலும் பல பதவிகளைப் பெற்று உயர்வடைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நல்லுறவுக்கழகம்


யா/ புனித சாள்ஸ் மகாவித்தியாலயம்





பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் அயராத ஆசிரியப் பணிபுரிந்து அதிபர் சேவை தரம் -III பதவியினைப் பெற்றுக் கொண்ட எமது சக ஆசிரியர்கள்


திரு.க.நித்தியானந்தன்
SLPS - III
B.A(Hons),
PGDE,MED(Hons)





திரு.செ.சதீஸ்குமார்
SLPS - III
B.B.A(Fm spl),
PGDE,PGD in Spl.Ed,MEd





திரு.சு.சுயதீப்
SLPS - III
Maths Trained,
B.A, PGDE.

இவர்களை அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம். இவர்கள் மேன்மேலும் உயர்வுகள் பல பெற்று உன்னத நிலையினை அடைய உவகையுடன் வாழ்த்துகின்றோம்.

நலன்புரிகழகம்

யா/கோப்பாய் கிறிஸ்தவகல்லூரி


## இலவச கணினி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

வலிகாமம் வலயக் கல்வி அலுவலக முறைசாராக் கல்விப் பிரிவின் அனுசரணையுடன் பாடசாலையை விட்டு வெளியேறியோருக்கான இலவச கணினி வகுப்பு ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெறுகிறது. ஆர்வமுடைய மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு பாடசாலை அதிபர் வி.உதயமோகன் தெரிவித்தார். (ற–ரி)

## பொதுக் கூட்டம்

காரைநகர், ஜூன் 30

காரைநகர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் பொதுக் கூட்டமும், நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் 2ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி தே.பாவு தலைமையில் மு.ப. 9 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. (ற–250)

## பரணி உற்சவம்

அளவெட்டி கேணிக்கரை ஞானவைரவர் ஆலய பரணி உற்சவம் இன்று மு.ப. 11 மணிக்கு விசேடபூசை அபிசேகங்களுடன் ஆரம்பமாகி நடைபெற்று வைரவப் பெருமான் வெளி வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். (ற–36)


ருது ஷோபன அழைப்பு

நிகழும் மங்கலகரமான துர்முகி வருடம் ஆனித்திங்கள் 16 ஆம் நாள் (30.06.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 11.00 மணிவரையுள்ள சிம்ம லக்கினமும் பரணி நட்சத்திரமும் ஏகாதசி சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

பிரம்மஸ்ரீ. ப. அமிர்தலிங்கசர்மா – சொர்ணலட்சுமி அம்மா தம்பதிகளின் பௌத்திரியும்
பிரம்மஸ்ரீ – கு இராமச்சந்திரசர்மா – இராசலட்சுமி அம்மா தம்பதிகளின் தௌகித்திரியுமாகிய

எமது ஏகபுத்திரி செல்வி ப. சங்கவி அவர்கட்கு

ருது ஷோபன நீராட்டு விழா செய்வதாக முத்துமாரி அம்மனும், துணைவி கொட்டுடை முருகப்பெருமானின் திருவருளுடனும் பெரியார்களது ஆசியுடனும் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர பந்துக்களுடன் குடும்ப சமேதராக வருகைதந்து சபையைச் சிறப்பித்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(C 2528) (12,17,18)

வரவேற்பாளர்கள்
பெரியப்பா, பெரியம்மாமார்
சித்தப்பா, சித்திமார்,
மாமா, மாமிமார்

திருநகர் முத்துமாரியம்மன் கோயில் கிளிநொச்சி.

சிவஸ்ரீ. அ. பத்மநாதகுருக்கள்
ஸ்ரீமதி. ப. விஜிதாம்பாள்
அண்ணா ப. பிரணவசர்மா
077 949 0173


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் வருமான மேற்பார்வையாளர்களுக்கு பதவி உயர்வு கடிதம் வழங்கக் கோரிக்கை

அம்பாறை, ஜூன் 30

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பதில் வருமான மேற்பார்வையாளர்களாக, நீண்ட காலமாகக் கடமையாற்றும் ஊழியர்களுக்கு முறையான பதவி உயர்வுக் கடிதம் (நிரந்தர) வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி, வடமாகாண முதலமைச்சருக்கும், வடமாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவின் தலைவருக்கும் மனு அனுப்பியுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடமாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் அவசியத் தேவை கருதி நீண்டகாலமாகப் பல ஊழியர்கள் பதில் அடிப்படையில் வருமானமேற்பார்வையாளர்களாகக்கடமைபுரிந்துவருகின்றனர். பதில் அடிப்படையில் வருமான மேற்பார்வையாளர்களாகக் கடமை புரிந்து வரும் ஊழியர்களுக்கு, நிரந்தர உரிய முறையான பதவி உயர்வுக்கடிதம் அல்லது நியமன அதிகாரியால் முறையாக பதவி நியமனக்கடிதம் முன் கூட்டி வழங்கப்படாமையால் பல ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பதில் வருமான மேற்பார்வையாளர்களாக உள்ளூராட்சி சபைகளால் நியமிக்கப்பட்டு நீண்ட காலமாக நேர்மை, கடமை, உணர்வுடன் (சபை நிறுவனத் தலைவர்களின் அனுமதியுடன்) கடமை புரியும் ஊழியர்கள், பொதுச்சந்தைகளில் வரி வசூலித்தல், கடைகளுக்குரிய வாடகை அறவீடு செய்தல் உட்பட மற்றும் வரி அறவிடும் கடமைக்காகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான ஊழியர்களின் பதவிப்பெயர், சுகாதாரத் தொழிலாளி, வேலைத் தொழிலாளி, காவலாளி என்பனவாகும். பதவிப் பெயர்களால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதை எமது தொழிற்சங்கத்தின் கவனத்துக்கும் கொண்டு வந்தனர்.

இவ்வாறு நீண்டகாலமாக கடமை புரியும் பதில் வருமான மேற்பார்வையாளர்கள், சந்தைக் காப்பாளர்கள்(வரி அறவிடுதல்) பணிக்காக சபைகளால் நியமிக்கப்பட்ட ஊழியர்கள் வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை மூலமாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சுற்றறிக்கைக்குள் உள்வாங்கப்படாது அவர்களது நீண்ட சேவைக்காலத்தை கவனத்தில் கொண்டும், ஆளுநர் அனுமதியுடன்வெளியிடப்பட்ட அட்டவணைப் படுத்தப்படாத ஊழியர்களது சேவைப் பிரமாணம் மற்றும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரது சுற்றறிக்கை கவனத்தில் கொள்ளப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும்.

இந்தப் பதவி உயர்வு சேவைப் பிரமாணத்துக்கு அமைவாக பதவிப் பெயர் குறிப்பிட்டு வழங்கப் படல் வேண்டும்.

குறிப்பிடப்படுகின்ற கல்வித் தகைமையை நீண்ட காலமாகக் கடமை புரியும் இந்த ஊழியர்கள் விடயத்தில், கவனம் எடுத்தும் தாங்கள் உதவ வேண்டும். பாதிக்கப்பட்டுள்ள ஊழியர்கள் வடமாகாணத்திலுள்ள பல உள்ளூராட்சி மன்றங்களிலும் கடமை புரிகின்றனர். பதில் வருமான மேற்பார்வையாளர்களுக்கு உரிய முறையான நிரந்தரப் பதவி உயர்வுக் கடிதம் வழங்கப்பட ஆவன செய்யுமாறு கோருகின்றோம் – என்றுள்ளது.

(ற-ஐ-30)

# நகை திருடிய குற்றச்சாட்டில் கைதான இருவருக்கு மறியல்

வவுனியா, ஜூன் 30

வவுனியாவில் 75 பவுணுக்கு மேற்பட்ட தங்க நகைகளைக் கொள்ளை அடித்தனர் என்று குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் மாலை சந்தேக நபர்கள் இருவரும் மன்றில் முற்படுத்தப்பட்ட போது இவ்வாறு உத்தரவிடப்பட்டது.



வவுனியாவில் குட்செட்வீதி, கற்குழி, தோணிக்கல்போன்ற பகுதிகளில் கடந்த இரண்டு வருடங்களாக வீடுகள், அலுவலகங்களி கொள்ளையடித்தார்கள் என்று கூறப்படும் இருவர் கடந்த திங்கட் கிழமை வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர். வவுனியா பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் இருந்து சிறியளவிலான நகைகள் மீட்கப்பட்டன.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் மாற்றுவலுவுடைய நபர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் மற்றைய நபர் கொழும்பு செட்டித் தெருவில் கைது செய்யப்பட்டார்.

மாற்றுவலுவுடையவர் 2014 ஆம் ஆண்டு தோணிக்கல் சிவன்கோயில் பகுதியில் வீடொன்றில் திருடி வீட்டின் மதிலால் குதித்தபோது மதில் சரிந்து வீழ்ந்ததில் காயமடைந்தே மாற்றுவலுவுடையவராக ஆனார் எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். (ற-21,402)

## மரண அறிவித்தல்

### மடுத்தீன் கீதபொன்கலன் (கீதர்)



மண்டைதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.8, அடப்பன்வீதி, குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட மடுத்தீன் கீதபொன்கலன் 27.06.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மடுத்தீன் - அக்கினேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சீமோன் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லில்லி கிறேசின் (புஸ்பம்) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வில்லியம், இரத்தினம், யேசுமரியாம் பிள்ளை, யாகப்பு, பிலோமினம்மா, ஐயாத்துரை, மக்கிறீற்றம்மா மற்றும் அல்பிறேற்றம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அரசன், றோஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், றெஜினோன், கலா ஆகியோரின் சகலனும், காலஞ்சென்ற கில்லறிதுரை மற்றும் குணபால், தனபால் (லண்டன்), கனிபால் (லண்டன்), மாலதி (இத்தாலி), தயாளதி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜான்சி, வசந்தி (லண்டன்), உயிலா (லண்டன்), எட்மன் (இத்தாலி),யூட் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், குயின்ரன், கியூட்சன், கிறிசியா, லுகிர்தன், லுகிர்தா, லுட்சன், டியூலின்,கீர்த்திகா, அலெக்ஸ், அலெக்சியா, திலெக்சியா, யூலியானா, கெவின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல8, அடப்பன் வீதி, குருநகரில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (01.07.2016) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் மண்டைதீவிலுள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் முற்பகல் 10 மணியளவில் மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் மண்டைதீவு பேதுருவானவர் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.8, அடப்பன் வீதி,
குருநகர். (J/2519) (11,17,18)

தகவல்:
பிள்ளைகள்.

021 490 6528, 076 980 7634

# இணைத் தலைவர்கள் வரமுடியாததால் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நிறுத்தம்

## சிவமோகன் எம்.பி தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜூன் 30

இணைத்தலைவர்களுக்கு நேரம் இல்லை என்பதற்காகவே முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட இணைத்தலைவர்களில் ஒருவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி. சிவமோகன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் பிரதேச செயலங்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெறுவதில்லை. அதனால் பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பல விடயங்கள் பற்றியும் பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றியும் பேசப்படாதுள்ளது.

இவ்வாறு கடந்த மாதம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது இணைத்தலைவர்களால் தெரிவிக்கப்பட்டது.

மாவட்டத்துக்குட்பட்ட 6 பிரதேச செயலகங்களதும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் விரைவில் நடைபெறவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று இணைத் தலைவர்கள் பிரதேசசபை செயலாளர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

இணைத் தலைவர்களுடைய வேண்டுகோளுக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்ட பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

நேற்றுப் புதன்கிழமை ஒட்டுசுட்டான், கரைதுறைப்பற்று, வெலிஓயா பிரதேச செயலகங்களுக்கான கூட்டமும் இன்று வியாழக் கிழமை புதுக்குடியிருப்பு, துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச செயலகங்களுக்கான கூட்டமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

நேற்று மாலை பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் இடைநிறுத்தப்பட்டன என்று பிரதேச செயலாளர்களால் திடீரென அறிவிக்கப்பட்டது.

இணைத் தலைவர்களுக்கு நேரம் இல்லாததன் காரணமாகவே பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

"இன்றும் (நேற்று) நாளையும் (இன்று) நடைபெறும் என்று அறிவிக்கப்பட்ட கூட்டங்கள் நடைபெறாது. அவை இன்னும் இரண்டு வாரங்களில் நடைபெறும்" – என இணைத் தலைவர்களில் ஒருவரான சி. சிவமோகன் தெரிவித்தார். (21,ரி7)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



சத்தியதேவி
முத்துக்குமாரு

தோற்றம் 05.02.1931
மறைவு 29.05.2016

அம்மாவும் நீயே அப்பா நீயே
எம்மை அன்புடனே ஆதரிக்கும்
தெய்வமும் நீயே

குடும்பத்தினர்.
186/2, சேர் பொன். இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

(சி/21367)(12,18)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அரியரட்ணம்
பரந்தாமன்
(உரும்பிராய் முத்துமாரி அம்மன் கோயில் தர்ம கத்தா)



தோற்றம் 04.06.1956
மறைவு 12.07.2015

அன்பின் திருவுருவாய் பாசத்தின் சிகரமாய்
அன்பு மழை பொழிந்து நல்வழிகாட்டியாய் வாழ்ந்து
பிரிவெனும் கடலில் மூழ்க வைத்தீரே
உம் நினைவுகள் எம் நினைவில் என்றும்
கண்ணின் ஓரம் கண்ணீர்த் துளிகளாய்க் கசிய
இன்றென நினைத்திடும் வேளையில்
ஓராண்டு கடந்தனவாம் யாமறியோம்
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை
நாம் பிரார்த்திக்கின்றோம்.

லோகா வேலி,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

மனைவி மற்றும்
உறவினர்கள்.

(சி/21377)(12,18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவம் போட்ட மண் அணையை அகற்றி விவசாயத்துக்கு உதவுங்கள்

## வயல்குடியிருப்பு கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 30

"ஜெயசிக்குறு" இராணுவ நடவடிக்கையின் போது ஒட்டு சுட்டான்-தச்சடம்பன் கிராம அலுவலர் பிரிவின் கீழுள்ள வயல் குடியிருப்பு கிராமத்தின் விவசாய நிலங்களில் போடப் பட்ட மண் அணைகளை அகற் றித் தர வேண்டும்.

இவ்வாறு அந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்த தாவது:

1997 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் "ஜெய சிக்குறு" இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. ஒட்டுசுட்டான் பிரதேச செய லாளர் பிரிவில் தச்சடம்பன் கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ளது வயல்குடியிருப்பு கிராமம். அங்கு வயல் நிலங் களை ஊடறுத்து சுமார் மூன்று கிலோ மீற்றர் தூரம் இராணுவம் மண் அணை அமைத்தது.



வயல் நிலங்களில் ஆட்லறி தளத்துக்காக வட்ட வடிவிலான மண் அணைகளும் போடப்பட் டுள்ளன. இந்த மண் அணை கள் வயல் நிலங்களில் குளக் கட்டு போன்ற அமைப்பில் போடப்பட்டுள்ளன. இராணுவ நடவடிக்கைகள் முடிவுற்று 19 வருடம் முடிந்தபோதும், அந்த அணைக்கட்டுக்கள் அப் படியே உள்ளன. குறித்த வயல் நிலங்களில் விவ சாயத்தை மேற்கொள் வதில் ஒவ்வொரு போகங் களின் போதும் நாளாந்தம் பாதிக்கப்படுகின்றோம். வயல் களுக்கு உழவு இயந் திரங்கள் கொண்டு செல்வது தொடக்கம் நெல் அறுவடை செய்யும் இயந்திரங்களைக் கொண்டு செல்வது வரை பெரும் பிரச் சினையை எதிர்கொள்கின் றோம். சம்பந்தப்பட்டவர்கள் இந்த அணைகளை எமது வயல்களில் இருந்து அப்புறப் படுத்தி விவசாய நடவடிக் கைகளுக்கு வழியமைத்துத் தரவேண்டும் - என்றனர்.

மண் அணைகளை அகற்று வதற்குத் தேவையான நிதி எம் மிடம் இல்லை, இது தொடர்பாக விவசாய திணைக்களத்திடமும் தெரிவித்துள்ளேன். இந்த மண் அணைகளை வயல்களில் இருந்து அகற்ற வேண்டும் என் றால் அதற்குத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முன் வந்து உதவ வேண்டும். அவர்க ளுடைய நிதிப் பங்களிப்பின் மூலமே இந்த மண் அணை களை வயல்களில் இருந்து அகற்ற முடியும் - என்று ஒட்டு சுட்டான் பிரதேசசெயலாளர் அனிருத்தனன் தெரிவித்தார்.

(ற-21,102)

### அலங்கார உற்சவம்

காரைநகர், ஜூன் 30

காரைநகர்-பத்தர்கேணி அருள் மிகு வன்மீக விநாயகர் ஆலய அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்ப மானது.10 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் மு.ப. 10.30 மணி தொடக்கம் விசேட அபிசேக ஆராதனைகளும், இரவு 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திரு வீதியுலாவும் நடைபெறும். (ற-250)

### பெருந்திருவிழா

காரைநகர்-களபூமி திக்கரை முருகமூர்த்தி கோயில் வருடாந்த பெருந்திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமா கியது.

10 தினங்கள் நடைபெறவுள்ள திருவிழாவில் எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடை பெறவுள்ளன.

(ற-250)

# தனியார் காணியில் நிரந்தரக் கட்டடம் அமைக்கத் தெற்கு மீனவர்கள் முயற்சி

## கொக்குத்தொடுவாய், நாயாறுப் பகுதி மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 30

கொக்குத்தொடுவாய் , நாயாறுப் பகுதிகளில் தங்கியிருந்து தென்னிலங்கை மீனவர்கள் தொழில் செய்கின்றனர். அவர் கள் தனியாருக்குச் சொந்த மான காணிகளை அபகரித்து நிரந்தரக் கட்டடங்கள் அமைக்க முயல்கின்றனர்.

இவ்வாறு பிரதேச மக்களும் மீனவர் அமைப்புக்களும் குற்றஞ்சாட்டினர். இது குறித்து மீனவர் அமைப்பின் பிரதிநிதி களுக்குச் சுட்டிக்காட்டப்பட் டது என்றும் அவர்கள் தெரி வித்தனர்.

அந்தப் பகுதியில் தொழில் செய்யும் மீனவர்கள் அந்தப் பகுதியில் மலசலகூடம் அமைப்பதற்கு அனுமதி கோரியிருந்தனர். அந்தப் பகுதி தனியாருக்குச் சொந்த மானது. அதனால் அங்கு மல சலகூடம் அமைப்பதற்கு பிரதேச செயலகம் அனுமதி வழங்கவில்லை - என்று கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் குணபாலன் தெரிவித்தார்.

(ற-101)

# விபத்தில் சிக்கிய ஓட்டோ தீப்பற்றி எரிந்து நாசம்



வவுனியா, ஜூன் 30

வவுனியாவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் ஓட்டோ ஒன்று முற்றாக எரிந்துள்ளது. ஓட்டோச் சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நண் பகல் வவுனியா-தாண்டிக் குளத்தில் நடந்தது.

வவுனியா-தாண்டிக் குளத்தி லிருந்து புதுக்குளம் செல்லும் பிரதான வீதியில் பயணித்து கொண்டிருந்த ஓட்டோ வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதகுக் குள் விழுந்து தீப்பற்றி எரிந் தது - என்று பொலிஸார் தெரி வித்தனர்.

காயமடைந்த முச்சக்கரவண் டியின் சாரதி அங்கிருந்தவர் களால் உடனடியாக வவு னியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இது தொடர்பான விசார ணைகளை வவுனியா பொலி ஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (ற-5-21)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## ஆடித் திருவிழா

கொழும்புத்துறை, ஜூன் 30
மடுத்திருப்பதி திருவிழாவையொட்டிய ஆடித்திருவிழா கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.
இன்றும், நாளையும் மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் திருப்பலி ஆராதனைகளும் நடைபெற்று 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும்.
மருதமடு மடுத்திருப்பதிக்குச் செல்ல முடியாத யாத்திரிகர்களின் வசதி கருதி இந்தத் திருவிழா இங்கு கொண்டாடப்படுகின்றது. (ற-135)

## பெறுபேற்று மூல சான்றிதழை பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் 2016/2017 கல்வியாண்டு ஆசிரியர்களின் பெறுபேற்று மூலச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளலாம் என கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தெரிவித்தார்.
சான்றிதழ்கள் கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகப் பிரிவில் இருந்து எமது கலாசாலைக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. உரியவர்கள் தங்களது ஆளடையாளத்தை சமர்ப்பித்து சான்றிதழ்களை கலாசாலை கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம் - என்று அவர் தெரிவித்தார். (ற-ரி)

## தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூன் 30
அத்தியார் இந்துக் கல்லூரியின் தமிழ் விழா நாளை முதலாம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது என்று பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளனர்.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கௌரி முகுந்தனும் சிறப்பு விருந்தினராக யாழ். வலயக் கல்வி தமிழ் உதவிக் கல்விப் பணிப்பாளர் தி.தயாபரனும் கலந்து கொள்வர்.
(ற-ரி)



கச்சாய் அ.த.க.பாடசாலையில் 7ஆம் தரத்தில் கற்கும் மாணவர்களின் மாணவர் சந்தை நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தில் நடத்தப்பட்டது. (ற-9)

# சித்திரவதைக்கு எதிரான விழிப்புணர்வுப் பேரணி

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இன்று யாழில்

கொழும்பு, ஜூன் 30
“சித்திரவதைகளுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து பொது மக்களுக்கு உரிய விழிப்புணர்வு இல்லை. சித்திரவதைகள் தொடர்பான முறைப்பாடுகள் மேற்கொள்வதற்கு பொது மக்கள் அச்சமடைகின்றார்கள். மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் வகையில் இன்று கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்படவுள்ளது”
இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
“சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி என்னும் தொனிப் பொருளில் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் பேரணி நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் 3ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாகக் காலை 9 மணிக்குப் பேரணி ஆரம்பமாகும். வேம்படி வீதி வழியாக, யாழ். பொலிஸ் நிலையத்தைச் சென்றடைந்து அங்கிருந்து வைத்தியசாலைவீதியின்ஊடாகக் காங்கேசன்துறை வீதியைச் சென்றடைந்து முற்றவெளிச் சந்தியில் நிறைவடையும்.
அங்கு சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி எனும் தொனிப்பொருளில் நாடக நிகழ்வுகளும், கருத்துரைகளும் இடம்பெறும்.
சித்திரவதையை எதிர்க்கின்ற சகலரும் இதில் கலந்துகொள்ள வேண்டும். மதத் தலைவர்கள், இளைஞர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள், பொலிஸார், அரசியல்வாதிகள், தனியார் நிறுவனங்கள், சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
சித்திரவதையை இல்லாமல் செய்வதற்கு அனைவருக்கும் மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது. பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பொது மக்கள் சித்திரவதைக்கு எதிராக குரல் கொடுக்கவேண்டும். எமது சமூகம் சித்திரவதையை அங்கீகரிக்காத ஒரு சமூகமாக இருக்கவேண்டும்.
இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் சட்ட ஏற்பாட்டில், சித்திரவதைகளுக்கு எதிரான முறைப்பாடுகளை விசாரணை செய்யக்கூடிய தத்துவம் இருக்கின்றது. இலங்கையில் உள்ள அரசமைப்பின் 11ஆவது உறுப்புரையில் சித்திரவதைக்கோ அல்லது மனிதாபிமானமற்ற இழிவான நடந்துகைக்கோ, தண்டனைக்கோ எதிரான உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இலங்கையின் 1998ஆம் ஆண்டின் 22ஆவது இலக்க சட்டத்தில் சித்திரவதை என்பது ஒரு குற்றமாக கருதப்பட்டு வருகின்றது. இவ்வாறான சட்ட ஏற்பாடுகள் இருந்தும் கூட அண்மைக் காலமாக சித்திரவதைகள் அதிகரித்துள்ளன.
இலங்கைமனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அதிகமான முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இந்த மாதம் மாத்திரம் 4 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு கிடைக்கவில்லை என்பதற்காக சித்திரவதைகள் நடைபெறவில்லை என்ற முடிவுக்கு வர முடியாது.
பொது மக்களுக்குத் தெளிவான விழிப்புணர்வு இன்மையால், சித்திரவதைகள் குறித்து அறிக்கைகள் இடப்படுவதில்லை. தமக்கு எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படுமோ என்ற பயத்தால் பொது மக்கள் முறைப்பாடுகளை பதிவு செய்வதைத் தவிர்க்கின்றார்கள்.
அனைவரும் ஒன்றுகூடி சித்திரவதையை எதிர்ப்போம் என்ற கோசத்துடன் சமூகத்தில் இருந்து சித்திரவதைகளை ஒழிப்போம்” - என்றார். (ற-5-106)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 30
வயாவிளான் மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிப் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் ஆ.சி.நடராஜா மண்டபத்தில் நடைபெற உள்ளது.
முதல்வர் வே.த.ஜயந்தன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுகளுக்கு விருந்தினர்களாக இந்தியத் துணைத் தூதுவர் ஆ.நடராஜனும், தெல்லிப்பழை கோட்டக் கல்வி அலுவலர் ம.ஆனந்தகுமாரும் கலந்து கொள்வர்.
(ற)

## உடனடியாக தொடர்பு கொள்ள கோரிக்கை

தென்மராட்சி, ஜூன் 30
தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய 12 பேருக்கான உபகரணங்கள் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. பின்வருவோரை உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.
சக்கர நாற்காலிகள்:
பரமசிவம் பூமணி - மந்துவில் மேற்கு, சுந்தர் மீனாட்சி - மட்டுவில் தெற்கு, கணபதிப்பிள்ளை சரவணமுத்து எழுதுமட்டுவாழ் வடக்கு
ஊன்றுகோல்கள் :
பத்தினி சின்னத்தம்பி - மட்டுவில் தெற்கு, விக்னேஸ்வரன் புஷ்பமாலா - கரம்பைக்குறிச்சி வரணி, கணபதிப்பிள்ளை பிரகாஸ் - தட்டான்குளம் மீசாலை வடக்கு, சங்கரப்பிள்ளை யுகராசா - வேம்பிராய், கிட்டினன் தர்மகுலசிங்கம் - கச்சாய் வீதி சாவகச்சேரி, இராசேந்திரம் மல்லிகாதேவி - நாகநாதன் வீதி கொடிகாமம், லோகசிறிரதீஸ்வரி - சந்தை வீதி கொடிகாமம், இரங்கநாதன் தர்சன் - சந்தை வீதி கொடிகாமம், ஆறுமுகம் ஐயாத்துரை - நுணாவில் கிழக்கு. (ற-9)

# சுழற்சி முறைக் கடன் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்துங்கள்

### ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 29
“சுழற்சி முறைக் கடன் வழங்கும் திட்டத்தை ஒட்டுசுட்டான் பிரதேச செயலகம் மீண்டும் நடைமுறைப்படுத்தவேண்டும். முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஒட்டுசுட்டானில் நடைமுறைப்படுத்தப்படாததால் 30 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட நிதி வங்கிகளில் முடங்கியுள்ளது”
இவ்வாறு அந்தப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டினர்.
அவர்கள் தெரிவித்ததாவது:
“மீள் எழுச்சித் திட்டத்தின் மூலம் மக்களுக்குச் சுழற்சி முறையில் கடன் வழங்குவதற்காக அனைத்துப் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. மீள் எழுச்சித் திட்டம் தனது செயற்பாடுகளை முடிவுறுத்திய பின்னர் கடன் வழங்கும் திட்டத்தை பிரதேச செயலகங்கள் கிராமங்களில் சமூக மட்ட அமைப்பினரிடம் கையளித்தன.
சிறந்த முறையில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் கடன் வழங்கப்படுகின்றது. ஆனால் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் இந்தத் திட்டம் முழுமையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
மக்கள் இதன் பயனை அடைய முடியதுள்ளனர். அதிகாரிகள் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழும் சுழற்சி முறை கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆவன செய்ய வேண்டும்”- என்றனர் மக்கள்.
“சுழற்சிமுறைக் கடன் திட்டத்தில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. அதனால் இந்தத் திட்டத்தை மாவட்ட செயலகம் தற்போது நிறுத்தி வைத்துள்ளது. விசாரணைகளை மாவட்ட செயலகம் ஆரம்பித்தது. “விசாரணைகளின் முடிவில் மீண்டும் இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படும்”- என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் அனிருத்தனன் தெரிவித்தார்.
ஆரம்பத்தில் குறித்த சுழற்சி முறைக் கடன் திட்டத்தில் கடனைப்பெற்றுக்கொண்ட சுயாதீன அமைப்புக்கள் பின்னர் அந்தக் கடனைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டவில்லை. பலர் கடன்களைத் திருப்பச் செலுத்தவில்லை.
இந்த விடயங்கள் தொடர்பான பரிசீலனைகள் இடம்பெறுகின்றன.
வேறு ஏதாவது அமைப்புகளின் ஊடாக இந்தக் கடன் திட்டத்தை நடைமுறப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
பரிசீலனைகள் முடிவுற்றதும் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்படும்”- என்று மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.
(ற-21,102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் குழுவிலிருந்த அதிகாரி ஒருவர் நீக்கம்

## திட்டமிட்ட நடவடிக்கை என முல்லை. கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 30

முல்லைத்தீவு மாவட்டத்தினுள் அத்துமீறும் தென்னிலங்கை மீனவர் தொடர்பிலான பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு நியமிக்கப்பட்ட குழுவினருக்கான கலந்துரையாடல் கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலுக்கு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் திட்டமிட்ட ரீதியில் தவிர்க்கப்பட்டு, அவருக்குப் பதிலாக மாவட்ட மேலதிகச் செயலாளர் பங்குபற்ற வைக்கப்பட்டார்.

இவ்வாறு குற்றம்சுமத்தியுள்ளார் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் அந்தோனிப்பிள்ளை மரியராசா .

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தினுள் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறுகின்றனர். அத்துடன் தடைசெய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்தி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

கடந்த ஏப்ரல் மாதம் மீன்பிடி அமைச்சர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வந்திருந்தார். தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் உள்ளிட்ட மீனவர்கள் பிரச்சினை ஆராய்வதற்கு குழு நியமித்திருந்தார். இந்தக் குழு நியமிக்கப்பட்டு பல வாரங்களாகியும் அதன் கூட்டம் இடம்பெறாமல் இருந்தது.

இந்த மாத ஆரம்பத்தில் மீன்பிடி அமைச்சில் இந்தக் குழுவின் கூட்டம் இடம்பெற்றது. அதில் இராணுவத்தினர் பல்வேறு தவறான தரவுகளை முன்வைத்தனர். எமக்கு எதிராக பல்வேறு கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர், சரி யான புள்ளி விவரங்களை அமைச்சரிடத்தில் வெளிப்படுத்தினார். இராணுவத்தினர் முன் வைத்த கருத்துக்கள் பலவற்றை பொய்யானது என்று குறிப்பிட்டிருந்தார்.

> **இந்த மாத ஆரம்பத்தில் மீன்பிடி அமைச்சில் இந்தக் குழுவின் கூட்டம் இடம்பெற்றது. அதில் இராணுவத்தினர் பல்வேறு தவறான தரவுகளை முன்வைத்தனர். எமக்கு எதிராக பல்வேறு கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருந்தன. கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், சரியான புள்ளி விவரங்களை அமைச்சரிடத்தில் வெளிப்படுத்தினார்.**

இந்தக் கருத்துக்களை கேட்டறிந்த அமைச்சர், இன்னுமொரு குழுவைத் தேர்வு செய்து இரண்டு மாத காலத்தினுள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தார். இந்தக் குழுவில் பிரதேச செயலாளரும் உள்ளடக்கப்பட்டிருந்தார்.

புதிய குழுவின் கூட்டம் இன்று (நேற்றுமுன்தினம்) கொழும்பில் நடந்தது. அதில் நாம் கலந்து கொண்டோம். இந்தக் குழுவில் உள்ள கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் கலந்து கொள்ளவில்லை. அவருக்குப் பதிலாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிகச் செயலாளர் கலந்து கொண்டார்.

மேலதிக மாவட்டச் செயலாளர் கடமை உணர்வு உள்ளவர். எமது பிரச்சினை தொடர்பில் முழுமையான தகவல்களை அறிந்திராதவர். கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர், பல விடயங்களை கடந்த கூட்டத்தில் வெளிப்படையாகக் கூறியமையாலேயே, இந்தக் கூட்டத்தில் பங்கெடுக்க அனுமதிக்கப்படவில்லை என்று சந்தேகிக்கின்றோம் – என்றார்.

பிரதேச செயலாளர்தான் அந்தக்குழுவில் இடம்பெற்றிருக்கின்றார்.அதில்எந்தமாற்றமும்இல்லை. கரைதுறைப்பற்று ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை (நேற்று) நடைபெறவுள்ளது. அதனாலேயே மேலதிக மாவட்டச் செயலர் அனுப்பப்பட்டார்.– என்று மாவட்டச் செயலாளர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று நடைபெறவிருந்த கரைதுறைப்பற்று பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ற-வ-5-10)

# வங்காலையில் மக்கள் காணிகளை குறைந்த விலைக்கு வாங்க முயற்சி

## கடற்படை மீது சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், ஜூன் 30

மன்னார்வங்காலைக்கிராமத்தின்கடற்கரைப்பகுதியில் காணி உரிமையாளர்களை அச்சுறுத்தி குறைந்த விலையில் காணிகளை அபகரிக்க முயற்சிக்கின்றனர். இதனை கடற்படையினரின் அத்து மீறிய ஒரு சர்வாதிகாரச் செயலாகவே நான் கருது கின்றேன்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னார் வங்காலைக் கிராமத்தில் கடற்கரைப் பகுதியில் உள்ள நான்கு தனி நபர்களுக்குச் சொந்தமான சுமார் ஓர் ஏக்கர் காணியை கடற்படையினர் அபகரிக்க முயற்சிக்கின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மன்னார் வங்காலை கிராமத்தில் கடற்கரைப் பகுதியில் சுமார் நான்கு பேருக்குச் சொந்தமான சுமார் ஓர் ஏக்கர் காணியை கடற்படையினர் கையகப்படுத்த முயற்சி எடுத்துள்ளனர். கடந்த 22 ஆம் திகதி நில அளவை திணைக்களம் மூலம் அளவை செய்துள்ளனர். பாதிக்கப்பட்டவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு பேசினர். நான் நாடாளுமன்றில் இருந்ததால் நானாட்டான் பிரதேச செயலருக்கும், மன்னார் மாவட்ட செயலருக்கும் இது குறித்து அறிவித்தேன். உடனடியாக அதை நிறுத்துமாறு தெரிவித்தேன். நானாட்டான் பிரதேச செயலர் சம்பவ இடத்துக்குச் சென்று அளவிடும் நடவடிக்கையை நிறுத்தினார்.

நால்வருக்கு சொந்தமான சுமார் ஒரு ஏக்கர் கொண்ட அந்த காணிக்குறிய ஆவணங்கள் காணி உரிமையாளர்களிடம் உள்ளன. கடந்த திங்கட்கிழமை குறைந்த அளவு பணத்தைக் கொடுத்து காணியை வாங்க கடற்படையினர் முயன்றுள்ளனர். வங்காலை ஆலயத்தில் அருட்தந்தை முன்னிலையில் இந்தச் சம்பவம் நடந்தது. மக்கள் அதற்கு எதிர்ப்புத்தெரிவிதனர். எமக்கு பணம் வேண்டாம். காணி வேண்டும் என்றனர்.

அந்த காணியில் மன்னார் மாவட்டத்தின் முன்னாள் மாவட்ட செயலாளர் எஸ்.எம்.குரூஸின் தந்தையின் காணியும் அடங்குகின்றது. நல்லாட்சி அரசு வடக்கில் ஒரு சில இடங்களை விடுவித்துள்ளது. மன்னார் மாவட்டத்தில் பல்வேறு காணிகளை படையினர் கையகப்படுத்தியுள்ள போதும் இது வரை ஒரு ஏக்கர் நிலம்கூட விடுவிக்கப்படவில்லை.

முள்ளிக்குளம் பிரதேசத்தில் மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்த இடங்கள் தற்போது கடற்படை முகாமாகவே இருக்கின்றது. அவர்கள் மீள் குடியமர முடியாத நிலையில் தொடர்ந்தும் காடுகளுக்குள் வாழ்ந்து வருகின்றனர். அந்த மக்களுக்கு தற்போது வீட்டுத்திட்டம் கிடைத்துள்ளது. குறித்த வீட்டுத்திட்டத்தை பெற்றுக்கொள்ளுமாறும் இதனை விட்டால் இனிமேல் உங்களுக்கு எவ்வித விட்டுத்திட்ங்களும் கிடைக்காது என திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் வாழ்வதற்கு சாதகமற்ற இடத்தில் வாழ வேண்டும் என்ற சூழ்நிலையை அதிகாரிகளும், அரசும் மக்கள் மீது திணித்துள்ளது. மக்களிடம் அபகரித்துள்ள காணிகளை தக்கவைத்துக் கொள்ளும் நோக்குடன் படையினர் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் – என்றார். (ற-21,56)

# பொய் சொல்கிறார் சுரேஷ்

## மாகாண சபை உறுப்பினர்கள் நால்வர் சம்பந்தனுக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

அரசியல் இயாலாமைகளை மறைக்கவும், அரசியல் ரீதியாக குழப்ப நிலைகள் இருப்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்குமே, மாகாண சபையில் குழப்பம் விளைவிக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இதனை முற்றாக மறுதலிக்கின்றோம். எதுவித அடிப்படைகளும் இல்லாது உண்மைகளையும், ஆதாரங்களையும் கொண்டிராத விடயமே இதுவென்பதையும் தெரிவிக்கின்றோம்.

இவ்வாறு வடக்கு மாகாண சபையின் நான்கு உறுப்பினர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா ஊடாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுடனான கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபையில் ஆனோல்ட், சயந்தன், சுகிர்தன், அஸ்மின், பரஞ்சோதி ஆகியோர் குழப்பம் விளைவிக்கின்றனர், இவர்களை நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பின்னணியில் இருந்து இயக்குகின்றார் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி 4 மாகாண சபை உறுப்பினர்களும் கடிதம் அனுப்பியுள்ளனர்.

அதில் தெரிவித்துள்ளதாவது:

இந்தக் குற்றச்சாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்துடன் முற்றாக நிராகரிக்கின்றோம். இதனுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரையும் தொடர்புபடுத்தியுள்ளனர். கடந்த காலங்களில் கூட்டமைப்புக்குள் குழப்பங்களை உருவாக்கி, கூட்டமைப்பு குறித்து மக்களிடையே இரண்டுபட்ட கருத்துக்களை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தவர்களை மக்கள் அடையாளம் கண்டனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தக்கபாடம் புகட்டியிருந்தனர். ஜனநாயக ரீதியாக மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களின் ஆற்றாமையாகவே மேற்படி குற்றச் சுமத்தல்கள் அமைந்திருக்கின்றன. அவை உண்மைகள் எதனையும் சுட்டி நிற்கவில்லை.

மக்கள் எமக்கு வழங்கிய ஆணையைவைத்துக்கொண்டு, கொள்கை வழி நின்று மாகாண சபையில் விடயங்களை விவாதிக்கின்றோம். அவற்றுக்கு எதிரான கருத்துக்களை மக்களிடையே விதைக்கும் விதத்தில் துரோகம், காட்டிக் கொடுப்பு, சதி, விலைபோதல் போன்ற சொல்லாடல்களைப் போன்று குழப்புதல் என்ற சொல்லாடலும் தற்போது அரசியல் இயாலாமைகளை மறைக்கவும், அரசியல் ரீதியாக குழப்ப நிலைகள் இருப்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுவதாகவே நாம் இதனைக் கருத வேண்டியுள்ளது

மாகாண சபையைக் குழப்புகிறார்கள் என்ற குற்றச் சாட்டும் எதுவிதமான அடிப்படைகளும் இல்லாது, உண்மைகளையும், ஆதாரங்களையும் கொண்டிராத விடயம். தமிழ் மக்களின் அரசியல் விடுதலை, அந்த மக்களின் அபிவிருத்தி அல்லது வாழ்வை மேம்படுத்தல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுதல் என்கின்றனவே மக்கள் ஆணை தந்த தேர்தல் அறிக்கையின் அடிப்படைகளாகும். அந்த அடிப்படைகளை மாகாண சபையில் நடைமுறைப்படுத்துவதாகவே எமது செயற்பாடுகள் எல்லாம் அமைந்திருந்தன.

அமைச்சரவையின் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக மாற்றியமைத்தல், அரசியல் ரீதியான நிலைப்பாடுகளை தேசிய மற்றும் பன்னாட்டு சமூகத்தின் முன்னால் முன்வைக்கின்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை நிலைப்பாட்டை முன்னிறுத்தி அதனை மேற்கொள்ளுதல், வேறு அரசியல் கட்சிகள் – தனிநபர்களின் நிகழ்ச்சி நிரலுக்குள் உள் நுழைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் ஆணையை துஷ்பிரயோகம் செய்யாது தடுத்தல்.

தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைக்க வேண்டிய முழுமையான மக்கள் ஆணையை திசை திருப்பி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவ வாய்ப்புகளை பலவீனப்படுத்தலைத் தடுத்தல், மாகாண சபையின் வினைத்திறனான செயற்பாடுகளை உறுதி செய்தல், நியதிச் சட்டங்களை உருவாக்குதல், செயற்குழுக்களை உருவாக்குதல், மக்கள் நலன்களுக்கு முன்னுரிமையளித்தல், மக்களின் பிரச்சினைகளை மாகாண சபைப் பொறிமுறைகளினூடாக தீர்த்து வைத்தல், ஊழல் மோசடிகளுக்கு எதிராக செயற்படுதல், முறைகேடுகளுக்கு எதிராகச் செயற்படுதல் என்பனவற்றையே நாம் வடக்கு மாகாண சபையில் வலியுறுத்தி வருகிறோம்.

இவற்றைக் குழப்புதல் என்று அடையாளம் செய்பவர்கள், எமது மக்களுக்காக எதனை அரசியல் ரீதியாகப் பெற்றுத் தரப்போகின்றார்கள் என்ற கேள்வி எமக்கு முன்னால் எழுகின்றது. இவ்விடயத்தில் குறிப்பிட்ட ஒருசில உறுப்பினர்களின் பெயர்களை மாத்திரம் குறிப்பிட்டு மாகாணசபையைக் குழப்புகின்றார்கள் என்று அடையாளப்படுத்த முற்பட்டிருப்பது ஏனைய மாகாணசபை உறுப்பினர்களில் இருந்து பிரித்தாளுகின்ற ஒரு முயற்சியாகும்.

எம்முடைய எந்தச் செயற்பாடும் தான் தோன்றித்தனமானது அல்ல என்பதே உண்மை என்பதை இங்கு வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். மேற்படி குற்றச்சாட்டில் எந்தவித உண்மையும் இல்லை. அதனை முற்றாக மறுப்பதோடு இது முற்று முழுதாக அரசியல் காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடே என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம் – என்றுள்ளது.

(வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூர் மின் நிலையத்தை அமைக்க தயார் நிலையிலுள்ளது இந்தியா

## இந்திய எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

சம்பூர் அனல்மின் நிலையத்தை அமைப்பதில் இந்தியா தயார் நிலையிலேயே உள்ளது. இலங்கையின் இறுதித் தீர்மானம் தெரிவிக்கப்படும் நிலையில் உடனடியாக அடுத்த கட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்போம்.

இவ்வாறு இந்திய எரிசக்தி மற்றும்அனல்மின்அமைச்சின்செயலாளர் பி.கே.பூஜாரி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

திருகோணமலையின் சம்பூரில் அனல்மின் நிலையம் ஒன்றை உருவாக்குவது தொடர்பில் இலங்கையின் சூழலியல் சிக்கல்கள் மற்றும் மக்களின் பாதுகாப்பு தொடர்பிலும் கடந்த காலத்தில் இருந்து ஆராயப்பட்டு வந்துள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி இலங்கையின் சுற்றுச்சூழல் மத்திய அவதான நிலையம் எமக்கு அறிக்கையொன்றை முன்வைத்திருந்தது. சம்பூர் அனல்மின் நிலையம் அமைக்கப்பட சாதகமான நிலமைகளை அதில் சுட்டிக்காட்டியுள்ள போதிலும் சில நிபந்தனைகளையும் அவர்கள் முன்வைத்துள்ளனர். இலங்கை தரப்பு முன்வைத்துள்ள நிபந்தனைகள் எம்மால் ஏற்றுக் கொள்ள க்கூடிய வகையிலேயே உள்ளது. சம்பூர் அனல்மின் நிலையம் அமைப்பது தொடர்பில் இந்தியாவின் பக்கம் இருந்த அனைத்துச் செயற்பாடுகளும் சரியாக நிறைவடைந்துள்ளன. இலங்கையின் இறுதித் தீர்மானம் இன்னும் எமக்கு வராததால் நாம் காத்திருக்கின்றோம்.

> **இலங்கையின் முடிவுகள் எமக்குக் கிடைத்தவுடன் அடித்த 9 தொடக்கம் 12 மாதங்களுக்குள் சம்பூர் அனல் மின்நிலையம் அமைப் பது தொடர்பிலான உரிய நிறுவனங்களுக்கான விலைமனுக் கோரல் விடப்படும். அதன் பின்னர் அடுத்த 3 தொடக்கம் 5 ஆண்டுகளுக்குள் அனல்மின் நிலையம் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.**

இலங்கையின் முடிவுகள் எமக்குக் கிடைத்தவுடன் அடுத்த 9 தொடக்கம் 12 மாதங்களுக்குள் சம்பூர் அனல் மின் நிலையம் அமைப்பது தொடர்பிலான உரிய நிறுவனங்களுக்கான விலைமனுக் கோரல் விடப்படும். அதன் பின்னர் அடுத்த 3 தொடக்கம் 5 ஆண்டுகளுக்குள் அனல்மின் நிலையம் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இந்த சம்பூர் அனல்மின் நிலையம் அமைக்கப்பட்டால் 25 ஆண்டுகளுக்கு அதற்கான பயனைப் பெற்றுக்கொள்ள முடியும். அதன் பின்னர் மீளவும் புனரமைக்கப்படவேண்டும்.

கடந்த முறை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி சந்திப்பின்போது சம்பூர் அனல் மின் நிலையம் அமைக்கப்படும் நிலையில் அதற்காகத் திரவ இயற்கை எரிவாயுவை பயன்படுத்துவது தொடர்பில் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதனால் இந்தியாவுக்கு எந்தச் சிக்கலும் இல்லை.

நிலக்கரிக்குப் பதிலாக இயற்கை எரிவாயு பயன்படுத்தப்படுவது அதிகளவிலான செலவையும் காலத்தையும் எடுக்கும். இப்போது ஆரம்பிக்கப்படவிருக்கும் திட்டத்தில் இயற்கை திரவ எரிவாயுவை பயன்படுத்துவதாயின் இன்னும் பத்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய நிலமை ஏற்படும். ஆகவே திரவ இயற்கை எரிவாயுவை பயன் படுத்துவதை விடவும் நிலக்கரியின் பாவனையே மிகவும் உகந்தது - என்றார். (ற-5)

# உருவாக்கப்படும் அரசமைப்பில் பௌத்த தர்ம சரத்துகள் மாறாது

## பிரதமர் அலுவலகம் கூறுகின்றது

கொழும்பு, ஜூன் 30

புதிய அரசமைப்பு தொடர்பான நகலோ அல்லது அதன் அடிப்படையிலான எழுத்து மூலமான விடயங்களோ இதுவரையில் தயாரிக்கப்படவில்லை. புதிதாக தயாரிக்கப்படும் அரசமைப்பில், பௌத்த தர்மம் தொடர்பில் தற்போதுள்ள எந்தச் சரத்துக்களிலும் மாற்றம் மேற்கொள்ளப்பட மாட்டாது.

இவ்வாறு பிதமர் அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசமைப்புத் தொடர்பில் வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் விளக்கமளித்து பிரதமர் அலுவலகம் செய்திக் குறிப்பு வெளியிட்டுள்ளது. அதிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

புதிய அரசமைப்புத் தொடர்பாக சமூகத்துக்குள் பல்வேறுபட்ட தவறான கருத்துக்களை பரப்பும் அமைப்பு ரீதியான இயக்கங்கள் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன. இது தொடர்பில் எமது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அரசமைப்புத் தொடர்பான நகலோ அல்லது அதன் அடிப்படையிலான எழுத்து மூலமான விடயமொன்றோ இதுவரையில் தயாரிக்கப்படவில்லை.

புதிய அரசமைப்பில் ஒவ்வொரு விதத்திலான சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று வெளியிடப்படும் தகவல்களில் எந்தவிதமான அடிப்படை உண்மையும் கிடையாது. விசேடமாக பௌத்த தர்மம் தொடர்பில் அரசமைப்பில் முன்மொழியப்பட்டுள்ள சரத்துக்களில் திருத்தங்களை மேற்கொள்ளவோ அல்லது மாற்றத்தை ஏற்படுத்தவோ எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு வெளிவரும் தகவல்களில் உண்மையுமில்லை.

'தேரவாத' பௌத்த தர்மத்தை பாதுகாத்து போசிப்பதற்கான பொறுப்பை அரசு எப்போதும் கடைப்பிடிக்கும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசமைப்பு வழிநடத்தல் குழுவால் இதுவரையில் தேர்தல் முறைமை, மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பரவலாக்குதல் தொடர்பான பட்டியல் மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை தொடர்பிலான விடயங்களே கலந்துரையாடப்பட்டன.

புதிய அரசமைப்புத் தொடர்பாக மக்களின் கருத்துக்கள் கேட்டறியப்பட்டன. இதன் மூலம் அரசமைப்பைத் தயாரிக்கும் போது மக்களின் கருத்துக்களுக்கு பிரதிநிதித்துவத்தை பெற்றுக் கொடுப்பதே நோக்கமாகும். இந்த விடயத்தில் மக்கள் தமது மன விருப்பப்படி பல கருத்துக்களை முன்வைத்தனர். அவ்வாறான கருத்துக்கள் தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளன. இதுவோர் அரசமைப்பு நகல் அல்ல.

மக்கள் முன்வைத்த கருத்துக்கள் வெளிப்படைத் தன்மையாக இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இந்தக் கருத்துக்கள் அரசமைப்பை தயாரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற இணைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும். அந்தந்த இணைக் குழுக்கள் எதிர்காலத்துக்கு ஏற்றவாறு மக்களின் கருத்துக்களை புதிய அரசமைப்பு தயாரிப்பின் போது கவனத்தில் எடுக்கும் - என்றுள்ளது. (ற-ஐ-5)

# கட்சி ஆரம்பித்தால் மகிந்தவே தலைவர்

## விமல் வீரவன்ஸ கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 30

கூட்டு எதிரணியால் புதிய கட்சி ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே தலைமை தாங்குவார்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் த்லைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் ச்ந்திப்பு நடந்தது. அதில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டு எதிரணியினர் புதிய கட்சியை ஆரம்பிக்கப் போகின்றனர், அதன் தேசிய அமைப்பாளராக பசில் ராஜபக்ச நியமிக்கப்படவுள்ளார், என்று வெளியாகும் செய்திகள் தொடர்பாக, விமல் வீரவன்சவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

புதிய கட்சியை ஆரம்பிப்பது தொடர்பாகக் கூட்டு எதிரணி இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை.

புதிய கட்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டால் அதற்கு மகிந்த ராஜபக்சவே தலைமை தாங்குவார். பசில் ராஜபக்ச கட்சியின் உறுப்பினராகவே இருப்பார். அவரை தேசிய அமைப்பாளராக நியமிக்கும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இடியப்பச் சிக்கலான புதிய கட்சியை உருவாக்கும் விவகாரம் சரியான நேரத்தில் இடம்பெறும் - என்று விமல் வீர வன்ஸ தெரிவித்தார். (ற-5)

# இந்தியா, இலங்கை இடையே எட்கா உடன்பாடு விரைவில்

கொழும்பு, ஜூன் 30

இந்தியாவுக்கும் - இலங்கைக்கும் இடையே எட்கா எனப்படும் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு கையெழுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. அதை விரைவுபடுத்துவது தொடர்பாக புதுடில்லியுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது. பன்னாட்டு வர்த்தக மற்றும் மூலோபாய கொள்கைகள் அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவை அரசு இந்த வாரம் இந்தியா அனுப்பவுள்ளது.

கொழும்பில் செய்தியாளர் சந்திப்பின்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளி யேறியுள்ளது. இந்தச் சூழலில் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பு உடன்பாடுகளை விரைவாக செய்துகொள்வதற்கு இலங்கை முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

எட்கா தொடர்பான பேச்சு நடத்துவதற்கு இந்த வாரம் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம புதுடெல்லி செல்லவுள்ளார். இந்த உடன்பாட்டை செய்து கொள்வதற்கு 2014ஆம் ஆண்டு இரண்டு நாடுகளின் அரசியல் உயர்மட்டங்களில் தீர்மானிக்கப்பட்டது - என்றார்.

இந்த உடன்பாட்டுக்கு இலங்கையின் தொழிற்துறையினரும், துறைசார் நிபுணர்களும் எதிர்ப்பு வெளியிட்டு வருகின்றனர். (ற-5)

# ரி.ஐ.டி. முன்னாள் தலைவர் வகிஸ்ராவிடம் விசாரணை

கொழும்பு, ஜூன் 30

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகள் தொடர்பில், ரி.ஐ.டியின் முன்னாள் தலைவரான ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபர் சந்திரா வகிஸ்ராவிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

சந்திரா வகிஸ்ரா மூன்று மணி நேரம் பொலிஸின் சிறப்பு விசாரணைப் பிரிவினால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

முன்னைய ஆட்சிக் காலத்தில், கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் சந்தேகநபர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட, கணக்கில் காட்டப்படாத தங்கம் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள், தொடர்பாகவே இந்த விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க சந்தேகநபருக்கு பறிமுதல் செய்யப்பட்ட வாகனம் ஒன்றை பரிமாற்றம் செய்தது குறித்தும், அவரிடம் விசாரிக்கப்பட்டுள்ளது. (ற-5)

# சூழலைப் பாதுகாக்க வேண்டியது அனைத்து தரப்பினதும் பொறுப்பு

## ஜனாதிபதி மைத்திரிபால தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

சூழலைப் பாதுகாத்து எதிர்காலத் தலைமுறையினருக்கு அதனைப் பாதுகாப்பானதாக கையளிக்க வேண்டும். இதற்கு அரசு முன்னெடுத்துவரும் நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைந்து தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் உரிய முறையில் நிறைவேற்ற வேண்டியது அனைத்து அதிகாரிகளினதும் பொறுப்பாகும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பத்தரமுல்லையிலுள்ள மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கே[illegible] நேற்றுமுன்தினம் பிரதேச சுற்றாடல் அதிகாரிகள் சங்கத்தின் 17ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த யுகம் சுற்றாடலைக் கவனத்தில் கொள்ளாதிருப்போர் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய ஒரு யுகமாகும். சுற்றாடல் பாதுகாப்புக்கு குந்தகமாக அமையும் வகையில் சட்டவிரோதமாக செயற்படு[illegible]த்தை கடுமையாக [illegible]த்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும். ஒரு பிரதேசத்தில் சுற்றாடல் அழிவுகளுக்கு இடமளிக்கப்படுமானால் அது அந்தப் பிரதேச பொலிஸார், பிரதேச செயலாளர் உள்ளிட்ட சுற்றாடல் அதிகாரிகளின் பொறுப்பு குறித்த ஒரு பிரச்சினையாகும்.

சூழல் அழிவுகளுக்கு எதிராக அரசு எடுத்துவரும் நிகழ்ச்சித் திட்டங்களுடன் இணைந்து சூழலைப் பாதுகாப்பதற்காக தமது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு எல்லா அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் - என்றார். (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை விவகாரத்தில் இனிமேல் நேரடியாகத் தலையிடாது இந்தியா

## அந்த நாட்டு கொள்கை வகுப்பாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 30

தமிழ் மக்களைப் பாதுகாக்கவே இந்தியா செயற்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் ஏற்படுத்திக் கொண்ட சமரசத்தின் மூலம் இந்திய அமைதிப் படை அதிகளவான இழப்புக்களைச் சந்தித்தது. இந்தக் கசப்பான அனுபவம் எமக்கு இன்றும் உள்ளது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இனி ஒருபோதும் நேரடியாக இந்தியா தலையிடாது - இவ்வாறு இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தெரிவித்தனர்.

இலங்கையிலிருந்து சென்ற ஊடகவியலாளர்கள் குழுவுக்கும், இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களும் இடையே சந்திப்பு இடம்பெற்றது. திங்கட்கிழமை இடம்பெற்ற இந்தச் சந்திப்பிலேயே இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

1987ஆம் ஆண்டு இந்திய அமைதிப் படையை இலங்கைக்கு அனுப்பியிருந்தோம். அதன் பின் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும், செய்து கொண்ட சமரசம் மூலமும் அதிகளவான இழப்புகளை நாம் சந்தித்தோம். அந்த அனுபவமும், இலங்கை தொடர்பான முப்பது ஆண்டுகால அனுபவமும் எமக்கு அதிகமாகவே உள்ளது.

தமிழ் மக்களை பாதுகாக்கவே நாம் செயற்பட்டோம். இந்த செயற்பாட்டால் வடக்கு - கிழக்கில் மாத்திரம் ஆயிரத்துக்கும் அதிகமான இந்திய படையினர் உயிரிழந்தனர். இந்தக் கசப்பான அனுபவம் எமக்கு இன்றும் உள்ளது. இலங்கைக்கு நாம் ஆதரவை வழங்கவும், ஆலோசனைகளை வழங்கவும் எப்போதும் தயாராகவே உள்ளோம். ஆரம்பத்தில் இருந்து நாம் எம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்கி வந்தோம்.

13ஆவது திருத்தத்தை நாம் முன்வைத்தோம். அதில் தீர்வைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று நாம் தெரிவித்தோம். அப்போதைய அரசு அதை ஏற்றுக் கொண்டாலும் இதுவரையில் 13ஆவது திருத்தத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த விவகாரத்தில் எம்மாலான முயற்சிகளைச் செய்தோம். இறுதியான தீர்வை இலங்கை அரசே நடைமுறைப்படுத்தவேண்டும். அதில் எம்மால் நேரடியாகத் தலையிடமுடியாது. இலங்கையின் நீண்டகால முரண்பாடுகளை தீர்க்க வேண்டுமாயின் அதில் எமது நேரடியான தலையீடுகளால் எதையும் ஏற்படுத்திக் கொடுக்க முடியாது என்று நாம் நம்புகிறோம். அப்படியான நேரடித் தலையீடுகள் எவையும் இருக்கப் போவதில்லை.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர் பாக, இலங்கைத் தமிழர் தரப்பு தெரிவித்த போதிலும் எம்மால் இந்த விவகாரத்தில் தலையிட முடியாது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சமஷ்டி தீர்வு ஒன்றை முன்வைத்தார். இப்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சி அப்போது அதை எதிர்த்தது. சந்திரிகா குமாரதுங்க பல தடவைகள் சமஷ்டி கதைகளை கூறியே தேர்தலிலும் வெற்றி பெற்றார். ஆனால் இன்று சமஷ்டி என்பது ஒரு மோசமான வார்த் தையாக இலங்கையில் மாற்றம் பெற்று விட்டது. மகிந்த ராஜபக்ச அரசு இந்த விவகாரத்தை மாற்றி விட்டது - என்றனர். (ற-5)

# ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகைக்கு விண்ணப்பித்தது இலங்கை

கொழும்பு, ஜூன் 30

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளப் பெறுவதற்கு ஐரோப்பிய ஒன்றியத்திடம் நேற்றுமுன்தினம் மாலை இலங்கை அரசு விண்ணப்பித்தது என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார்.

மனித உரிமைகள் நிலை பற்றிய கரிசனைகளால், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் நிறுத்தியது.

இந்தச் சலுகையை மீளப் பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசு, இந்தச் சலுகையைப் பெறுவதற்கு நேற்று முறைப்படி விண்ணப்பித்தது.

அரசின் சார்பில், பிரசெல்சில் உள்ள இலங்கைத் தூதுவர் மூலம், ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்த விண்ணப்பம் கையளிக்கப்பட்டது. "இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் முடிவெடுப்பதற்கு ஆறு மாதங்கள் செல்லும். ஏனைய நடைமுறைகளை நிறைவு செய்து, மீண்டும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலு கையைப் பெறுவதற்கு 8 மாதங்கள் தேவைப்படும் என்று நாம் நம்புகிறோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகவுள்ள பிரிட்டனுடனும் வர்த்தக உடன்பாடு செய்து கொள்ளப்படும். பிரிட்டனுடன் வர்த்தக உடன்பாடுகளைச் செய்து கொள்வதற்கு ஏனைய நாடுகளும் கடுமையாகப் போட்டியிடும்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை மீளக் கிடைத்தால் அது சுற்றுலாத் துறையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்"- என்று பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்தார். (ற-5)

# இலங்கையில் 23.4 வீதமானோர் புகைக்கும் பழக்கமுடையவர்கள்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்



கொழும்பு, ஜூன் 30

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 23.4 சதவீதமானோர் புகைப் பிடிக்கும் பழக்கம் உடையவர்கள் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பாலித மகிபால தெரிவித்தார்.

'2020இல் புகையிலை யில்லா இலங்கை' என்ற தொனிப்பொருளில் சுகாதார கல்விப் பிரிவால் முன்னெடுக்கப்படும் திட்டம் தொடர்பாக விளக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

20ஆம் நூற்றாண்டின் இறுதி வரை புகையிலையால் உலகில் 100 மில்லியன் மக்கள் வரையில் உயிரிழந்தனர். வெண்சுருட்டில் 700 வகையான இரசாயனங்கள் உள்ளன. அவற்றில் 69 வகையான இரசாயனங்கள் புற்றுநோயை உண்டாக்கக் கூடியவை. 250 இரசாயனங்கள் உடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை.

புற்றுநோயாளர்களில் சுமார் 55 தொடக்கம் 60 வரையானவர்கள் புகைப் பிடிக்கும் பழக்கம் உள்ளவராக இருக்கின்றனர் என்று சுகாதார நிபுணர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி, 23.4 சதவீதமானோர் இலங்கையில் புகைப்பிடிக்கும் பழக்கம் கொண்டவர்களாக உள்ளனர். மாணவர்களில் 3 வீதமானோருக்குப் புகைப் பிடிக்கும் பழக்கம் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது- என்றார். (ஐ-5)



# புதிய அதிபர்களுக்கு உடன் நியமனம் வழங்குங்கள்

## மத்திய கல்வி அமைச்சு முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 30

புதிய அதிபர்களுக்கான நியமனங்களை வழங்குவதற்கு ஏற்படும் தாமதத்தைக் கண்டித்தும், உடனடியாக அவர்களுக்கு பாடசாலைகளை வழங்கக் கோரியும் கொழும்பு இசுறுபாயவிலுள்ள மத்திய கல்வியமைச்சின் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்த இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்ததாவது:

தரம் 3 அதிபர் பரீட்சையில் சித்தியடைந்து போட்டிப் பரீட்சை மூலம் நியமனம் வழங்கப்பட்ட 3 ஆயித்து 856 அதிபர்களுக்கு பாடசாலைகள் வழங்கக் கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கிறோம். இந்த ஆர்ப்பாட்டத்தில் 250 அதிபர்கள் கலந்து கொண்டனர். இதை அடுத்து கல்வி அமைச்சருடன் நடந்த சந்திப்பில் இந்தப் பிரச்சினையை தீர்க்க இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் கல்வி அமைச்சரை சந்தித்தோம். இது தொடர்பாக அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது, பிரதமர் தலைமையில் அமைச்சர்கள் சரத் அமுனுகம, துமிந்த திசாநாயக்க ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது, இரண்டு வாரங்களில் இந்தக் குழுவின் அறிக்கை கிடைத்தவுடன் அனுமதி பெற்று இந்த அதிபர்களுக்குப் பாடசாலைகள் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சர் கூறியிருந்தார்.

பதில் அதிபர்களாகக் கடமை புரியும் ஆசிரியர்கள் - அவர்கள் அதிபர் தரப் பரீட்சையில் சித்தியடையத்தவறியுள்ள நிலையிலும் அவர்கள் தமக்கு அதிபர் பதவி வேண்டும் - அதிபர்களாகத் தாங்கள் நியமிக்கப்படவேண்டும் என்று கோரி வருகின்றனர்.

உரியவர்கள் இல்லாத காலத்தில் பாடசாலைகள் இயங்க வேண்டும் என்பதற்காக அவர்கள் பதில் கடமை புரிந்திருக்கலாம். அதற்காக அதிபர் தரத்துடன் பலர் இருக்கையில் அவர்களை அதிபர்களாக நியமிக்காது அந்தப் பரீட்சையில் சித்தியடையாதவர்களை அதிபர்களாக நியமிக்க வேண்டும் என்று கோருவது என்ன அடிப்படையில் நியாயம்? தாம் சித்தியடைந்திருக்கவில்லை என்பது தெரிந்தும் தகுதியில்லாத ஒன்றைத் தா என்று கேட்பது பாடசாலைகளை முன்னேற்றவா? அல்லது அதற்கு எதிர்மறையான செயற்பாட்டுக்காகவா?

அதனால்தான் அதிபர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை உரிய பாடசாலைகளுக்கு நியமிக்குமாறு கோருகிறோம் - என்றார். (ற-4)

# ஹற்றன் பஸ் நிலையத்தில் மண் சரிவு அபாயம்

கொழும்பு, ஜூன் 30

மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை மூலம் நிர்வகிக்கப்படும் பஸ் தரிப்பு நிலையத்தில் மண்சரிவு அபாயம் காணப்படுகின்றது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு முதல் இந்தப் பகுதியில் மண், கற்கள் சரிந்து விழத் தொடங்கியுள்ளன என்று பஸ் தரிப்பிடத்தின் பொறுப்பதிகாரி காமினி பெரவத்தேகெதர தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஹற்றன் பொலிஸாருக்கும், ஹற்றன்- டிக்கோயா நகரசபை அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ற)

# வங்கி ஊழியர் பதவி உயர்வுக்கு மேன்முறையீட்டு நீதிமன்று தடை

கொழும்பு, ஜூன் 30

மகிந்த ஆட்சிக் காலத்தில் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்ட அரசு வங்கி ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்க அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு வழங்கியது.

இலங்கை வங்கி ஊழியர்களின் சங்கத்தால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதனை ஆராய்ந்த பின்னர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியது என்று சங்கத்தின் செயலாளர் ஏ.கே. பண்டார தெரிவித்தார்.

வழக்கு விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, கடந்த ஆட்சிக் காலத்தில் ஊழியர்கள் அரசியல் ரீதியாக பழிவாங்கப்பட்டனர் என்று கூறி, ஆளும் கட் சிக்கு ஆதரவான ஊழியர்கள் 58 பேருக்கு பதவி உயர்வு வழங்க அமைச்சரவை தீர்மா னம் ஒன்றை எடுத்தது என்று தெரிவித்தார்.

வங்கிச் சட்ட விதிமுறைகளுக்கு அமைய இவ்வாறு பதவி உயர்வுகளை அளிப்பதை அனுமதிக்க முடியாது என்று இலங்கை வங்கி ஊழியர்களின் சங்கம் தெரிவித்தது.

இவ்வாறு பதவி உயர்வுகள் நடைமுறைபடுத்தப்பட்டால் அரசு வங்கி நிர்வாகத்தில் பெரிய சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என்று சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

இந்தக் கருத்துக்களை ஆராய்ந்த நீதிமன்றம் சம்பந்தப்பட்ட பதவி உயர்வுகள் வழங்குவதை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி வரை தடை செய்யும் உத்தரவைப் பிறப்பித்தது.

அன்று இந்த குற்றச்சாட்டு தொடர்பாக விளக்கமளிக்குமாறு பிரதமர் உட்பட அமைச்சரவையின் உறுப்பினர்களுக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஐ.நா.ஆணையாளரது வலியுறுத்தல் நல்லாட்சி அரசின் காதுகளில் ஏறுமா?

★ இலங்கை அரசு, முன்னர் தான் இழைத்த மனித உரிமை மீறல்களை ஈடு செய்வதற்கு, நடுநிலையான, முழுமை நிறைந்த பொறிமுறை ஒன்றை முன்னெடுக்க வேண்டிய தேவை, அவசியம் பரந்து எழுந்து நிற்கிறது.

★ ஆட்சியில் உள்ள அரசு, தனது இராணுவப் படைகளைக் கட்டுப்படுத்துவதும், உள்நாட்டில் இழைக்கப்பட்ட போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதும், சிறுபான்மையினரான தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதும், அவசியத்திலும் அவசியம்.

★ நிலைமாற்று நீதிப்பொறிமுறை ஒன்றின் கீழ், சாட்சிகள் பாதுகாக்கப்படுவதும், முழு அளவில் அவசியமானது.

★ நீதிப் பொறிமுறையைச் செயற்படுத்தும் பொறுப்பு அரசுக்கு உண்டு என்பதோடு, அந்த நீதிப் பொறிமுறையில், அனைத்துலக நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டியதும் இன்றி அமையாதது--என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் சையித் அல் ஹுசைன் வலியுறுத்தி உள்ளார்.

ஜெனிவாவில் தற்போது இடம்பெற்றுவரும் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 32 ஆவது அமர்வில் இலங்கையின் மனித உரிமை மீறல், தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட வாய்மூல அறிக்கையில் மேற்கண்டவாறு சுட்டிக் காட்டியுள்ளார்.

அதேவேளை, இலங்கை அரசுக்கு அதிகளவு அவகாசத்தை வழங்குமாறு, ஆணையாளர் மனித உரிமைகள் சபையிடம் நேற்றைய தினம் கேட்க இருந்தார் என்றும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

மேலும்--

● இதற்கு முன்னர் வலியுறுத்தப்பட்டவாறாக, முன்னையதில் இருந்து வேறு ஒரு நிலைக்குச் செல்லும் நடுநிலையான, பொறிமுறை தவிர்க்க இயலாதது, இனி அவசியமானது என்றும்--

● இதுவரை இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்து, நடுநிலை நின்று உள்ளார்ந்து விவரமாக ஆராயப்பட வேண்டும் என்றும், அல் ஹுசைன் வலியுறுத்தி உள்ளார்.

அந்த நடைமுறை ஊடாக, மீண்டும் மனித உரிமைகளை மீறும் நிலையைத் தடுக்கலாம், இல்லாமற் செய்யலாம் என்றும் அவர் அழுத்திக் கூறியிருப்பதும் அர்த்தம் மிக நிறைந்ததே.

அந்த வகையில்--

இலங்கை அரசுக்கு மேலும் அவகாசம் வழங்கலாம் என்றும் பரிந்துரைத்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

மேலும்--

காணாமற் போனோர் நிலையைக் கையாளும் நிலையம், அலுவலகம், பாதிப்புற்றவர்களின் குடும்பங்களுக்கு, உடனடியாக வேண்டிய வசதிகளை வழங்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும்- மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

படையினரால் சுவீகரிக்கப்பட்ட மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீளக் கையளிப்பதிலும், தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிப்பதிலும், மிக வலுக்குறைந்த வகையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைத் திருத்தி அமைப்பதிலும், சாட்சிகளுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் அரசு செயல் ரீதியாக அக்கறை காட்டிச் செயற்பட வேண்டும் என்றும்--

மனித உரிமைகளை வலிமைப்படுத்தும் வகையிலான செயற்பாடுகளில் அரசு மும்முரமாகப் பணியாற்ற வேண்டும் என்றும்--

தன்னிச்சைப் போக்கான கைதுகளை நிறுத்த வேண்டும் என்றும்--

மேற்போந்தவை குறித்து அரசு, ஆத்மார்த்தமாக, மனம் விரும்பிச் செயற்பட வேண்டும் என்றும்-- அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவை இலங்கை அரசின் காதில் முழுமையாக ஏறி, ஆக்கபூர்வமான பயனைத் தருமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்...!!

# பிளவுபடப் போகிறதா பிரிட்டன்?

எம்.ஐ.முபாறக்

கடந்த ஓரிரு வருடங்களாக முழு உலகின் கவனமும் திரும்பி இருந்தது ஐ.எஸ். அமைப்பினர் மீது தான். ஆனால், அவர்கள் தற்காலிகமாக மறக்கப்பட்டு இப்போது உலகின் முழுக் கவனமும் திரும்பி இருப்பது பிரிட்டனின் மீதுதான்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவது என்ற அதிர்ச்சிக்குரிய முடிவை அந்த நாடு எடுத்திருப்பது தான் இதற்குக் காரணம்.

பிரிட்டன் மக்கள் ஏன் இப்படி ஒரு முடிவை எடுத்தார்கள் என்று கேள்வி கேட்கும் அளவுக்கு இந்த முடிவு அமைந்துள்ளது. இந்த முடிவால் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிதல் என்ற ஒரு பாதகத்தன்மையை மாத்திரம் எதிர்கொள்ளவில்லை.

இந்த முடிவால் பிரிட்டன் பலபக்க விளைவுகளையும் தான் எதிர்கொள்ளப் போகின்றது.

முதலில் பிரிட்டன் மக்கள் ஏன் இப்படியொரு முடிவை எடுத்தார்கள் என்று நாம் பார்க்க வேண்டியுள்ளது. கட்டுக்கடங்காமல் போகும் குடியேற்றவாசிகளின் ஊடுருவல்தான் இதற்கு முதற் காரணம். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகினால் மாத்திரம்தான் அதைக் கட்டுப்படுத்த முடியும் என்ற வழி இருந்ததால்தான் அவர்கள் இந்த முடிவை எடுத்தனர்.

புதுமணப் பெண்களாக அல்லது புதுமாப்பிள்ளைகளாக வருடம் தோறும் 30,000 பேர் பிரிட்டனுக்குள் பின் வழியாக நுழைகின்றனர் என்று புள்ளி விவரம் தெரிவிக்கின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்ட ஏற்பாடுகளே இதற்குக் காரணமாகும். ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறினால் மாத்திரமே இந்தக் குடி வரவைக் கட்டுப்படுத்த முடியும் என்ற நிலை இருக்கின்றது.

ஆனால், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரஜைகளை உறவினர்களாகக்கொண்டவர்களுக்கு இதில் விதிவிலக்கு அளிக்கப்படுகின்றது. இவர்கள் மூன்றாம் தரப்பு நாடுகளின் பிரஜைகள் என அறியப்படுவதோடு, டேவிட் கமரூன் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டது முதல் இவ்வாறான ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 921 பேர் பிரிட்டனுக்குள் நுழைவதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இதனால்தான் பிரிட்டன் மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலகுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால், இந்த முடிவால் ஏற் படப்போகும் பல பாதகமான விளைவுகள் பற்றி அவர்கள் சிந்திக்கவில்லை. தொழில் இழப்பு மற்றும் பொருளாதார வீழ்ச்சி உள்ளிட்ட மேலும் பல பாதகமான விளைவுகளை பிரிட்டன் எதிர் கொள்ளக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.



> பிரிட்டன் மக்கள் ஏன் இப்படி ஒரு முடிவை எடுத்தார்கள் என்று கேள்வி கேட்கும் அளவுக்கு இந்த முடிவு அமைந்துள்ளது. இந்த முடிவால் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிதல் என்ற ஒரு பாதகத் தன்மையை மாத்திரம் எதிர் கொள்ள வில்லை.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியே நின்று தம்மால் முன்னேற முடியும் என்ற பிரிட்டன் மக்களின் தன்னம்பிக்கையை இது காட்டுகிறதா அல்லது அவர், கள் உணர்ச்சிக்கு இடங்கொடுத்து விட்டார்களா என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது.

பிரிட்டன் வெளியேற வேண்டும் என்றொரு தரப்பும் வெளியேறக் கூடாது என்று மற்றொரு தரப்பும் கடந்த நான்கு மாதங்களாக பரப்புரைகளை மேற்கொண்டு வந்தன. பிரிட்டன் வெளியேறுவதை எதிர்த்த தரப்பு அது வெளியேறினால் ஏற்படப் போகும் ஆபத்துக்களைப் பட்டியல் படுத்தி மக்களைத் தெளிவுபடுத்தி வந்தது.

அதில் பொருளாதார வீழ்ச்சி மற்றும் தொழில் இழப்பு என்பவை புள்ளி விவரங்களுடன் முன் வைக்கப்பட்டன.

மறுபுறம், பிரிட்டன் வெளியேற வேண்டும் என்று கூறிய தரப்பு பொருளாதார வீழ்ச்சியை விடவும் குடியேற்றவாசிகள் ஊடுருவலையே மிகப் பெரிய ஆபத்தாகக் காட்டியது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிட்டத்தட்ட அவர்கள் இனவாதத்தையே விதைத்து வந்தனர்.
இறுதியில் பிரிட்டன் மக்கள் இனவாதத்துக்கே அடிபணிந்துள்ளனர். ஆனால், இந்த முடிவு பிரிட்டனைத் துண்டு துண்டுகளாக உடைத்து பல பக்க விளைவுகளைக் கொண்டுவரக்கூடியது என்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.



**ஸ்கொட்லாந்து, அயர்லாந்து பிரிவதற்கு முயற்சி**

பிரிட்டன் என்பது ஸ்கொட்லாந்து, அயர்லாந்து, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றை அதன் பகுதிகளாகக் கொண்ட பெரும் நாடாகும். இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் ஆகியவற்றின் மக்கள் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவதற்குச் சார்பாக வாக்களித்துள்ள அதேவேளை, ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து மற்றும் லண்டன் மக்கள் பிரிட்டன் விலகக்கூடாது என்றே வாக்களித்துள்ளனர்.
இந்த இரண்டு வெவ்வேறு நிலைப்பாடுகள்தான், இப்போது சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. ஸ்கொட்லாந்து மற்றும் வட அயர்லாந்து மக்கள் வழங்கியுள்ள தீர்ப்பை அந்த இரண்டு நாடுகளும் பிரிட்டனில் இருந்து பிரிந்து செல்வதற்கான நிலைப்பாடாக அந்த நாடுகளின் அரசுகள் பார்க்கின்றன. ஸ்கொட்லாந்து இந்த விடயத்தில் மிகவும் தீவிரமாக உள்ளது. தாம் பிரிந்து செல்வதற்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைக்காதா என்று காத்துக் கிடக்கும் ஸ்கொட்லாந்து அரசுக்கு, இந்த நிலைமை பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.
ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதற்காக 2014 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது அந்த நாட்டு மக்கள் தொடர்ந்தும் பிரிட்டனுடன் இணைந்திருக்க ஆதரவாக வாக்களித்திருந்தனர். ஆனால், இந்த முறைத் தேர்தலில் 60 வீதமான ஸ்கொட்லாந்து மக்கள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிராக வாக்களித்ததால் ஸ்கொட்லாந்து மக்கள் பழைய நிலைப்பாட்டில் இருந்து மாறிவிட்டனர் என்றும், அவர்கள் ஸ்கொட்லாந்து தனி நாடாகுவதை ஆதரிக்கின்றனர் என்றும் ஸ்கொட்லாந்து அரசு முடிவு செய்துள்ளது. இந்தச்சூழ்நிலையை சாதகமாகக்கொண்டு பிரிட்டனில் இருந்து பிரிந்து செல்வதற்கான சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவதற்கு ஸ்கொட்லாந்து அரசு தயாராகி வருகின்றது. அந்த நாட்டின் முதலமைச்சர் நிகோலா ஸ்டேஜன் இந்த விவகாரத்தில் தீவிரமாக இறங்கியுள்ளார். தேர்தலுக்கான ஏற்பாடுகளை இப்போதே செய்யத் தொடங்கி விட்டார். மறுபுறம், இந்தத் தேர்தலில் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்திருக்க வேண்டும் என்று லண்டன் மக்களும் வாக்களித்துள்ளதால், லண்டன் சுயாதீன பிராந்தியமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய வேண்டும்; அதற்காக இப்போதே விண்ணப்பிக்க வேண்டும் என்று லண்டன் மக்கள் கோரிக்கை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர்.
இந்தக் கோரிக்கையை உள்ளடக்கிய மனுவில் லண்டன் மக்கள் 65 ஆயிரம்பேர்கையெழுத்திட்டு இலண்டன்மேயர் சாதிக்கானிடம் ஒப்படைத்துள்ளனர்.
இவ்வாறு லண்டனும், ஸ்கொட்லாந்தும், வட அயர்லாந்தும் பிரிட்டனில் இருந்து பிரிந்து சுயாதீனமாகச் செயற்படும் முயற்சியில் இறங்கியுள்ளதால், பிரிட்டன் பெரும் தலையிடியை இப்போது எதிர்நோக்கத் தொடங்கியுள்ளது. பிரச்சினைகள் இவ்வாறெல்லாம் தோன்றும் என்று பிரிட்டன் மக்கள் நினைத்திருக்கவில்லை.

> ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதற்காக 2014 ஆம் ஆண்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது அந்த நாட்டு மக்கள் தொடர்ந்தும் பிரிட்டனுடன் இணைந்திருக்க ஆதரவாக வாக்களித்திருந்தனர். ஆனால், இந்த முறைத் தேர்தலில் 60 வீதமான ஸ்கொட்லாந்து மக்கள் இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் மக்களின் நிலைப்பாட்டுக்கு எதிராக வாக்களித்ததால் அவர்கள் ஸ்கொட்லாந்து தனி நாடாகுவதை ஆதரிக்கின்றனர் என்று ஸ்கொட்லாந்து அரசு முடிவு




**கமரூனின் பதவி விலகல்**

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்தாலும் சரி அதனுடன் இணைந்துள்ள ஏனைய நாடுகள் பிரிட்டனில் இருந்து பிரிந்தாலும் சரி பிரிட்டன் சகல துறைகளிலும் கணிசமான அளவு பலமிழந்துவிடும் என்பது நிச்சயம்.
இவ்வாறான ஒரு மோசமான நிலைமை தனது தலைமையின் கீழ் ஏற்படக்கூடாது என்று விரும்பிய பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் பிரதமர் பதவியில் இருந்து தாம் விலகப் போவதாக அறிவித்துள்ளார்.
பிரிட்டன் தொடர்ந்தும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருப்பதற்கு வாக்களிக்குமாறு கமரூன் விடுத்த கோரிக்கையை மக்கள் நிராகரித்ததால் அவர் விரக்தியடைந்துள்ளார்.
பிரிட்டன் இனி என்ன பாடுபடப் போகின்றது என்று இப்போது முழு உலகமும் உற்றுநோக்கத் தொடங்கியுள்ளது. அடுத்து வருகின்ற பிரதமர் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடுமையாகப் போராட வேண்டி இருக்கும்.
இதேவேளை, இடம்பெற்ற கருத்துக் கணிப்பு வாக்களிப்பு நிராகரிக்கப்பட்டு மீண்டும் புதிதாக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பிரிட்டனுக்குள் இப்போது எழுந்துள்ளதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. என்ன நடக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## ஆலயத்தையும் ஆலயச் சூழலையும் அழகுறப் பேணுவோம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் எழில் கொஞ்சும் இயற்கை வளம் கொண்ட தண்ணீருற்று, ஊற்றங்கரைப் பிள்ளையார் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்த, பல சிறப்புக்களைக் கொண்ட ஆலயமாகும். ஈழத்தில் பல ஆலயங்கள் இருந்தபோதிலும், தலவிருட்சம், தீர்த்தம் என்பவை இயற்கையாகவே அமையப்பெற்ற அற்புத ஆலயம் இது.
இந்த ஆலயத்தின் கிழக்கு வாசலின் முன்புறமாக, இந்த ஆலயத்தின் ஆரம்பகால பூசகராக இருந்த அம்பலவாணர் ஐயாவின் இல்லம் உடைந்து சிதைவடைந்த நிலையில் பற்றைகள் வளர்ந்து, ஆலயத்தின் மெருகைக் கெடுப்பது போன்று காணப்படுகின்றது. அத்தோடு விஷப்பாம்புகளின் உறைவிடமாகவும் காட்சியளிக்கின்றது. எனவே இவற்றைச் சீர்செய்யும் வகையில் இந்த இல்ல உரிமையாளர்கள் இல்லாதவிடத்து ஆலய பரிபாலனசபையினரோ அன்றேல், ஆலயத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் அன்பர்களோ, இந்தக் காணியைத் துப்புரவு செய்து பிள்ளையார் ஆலயத்தின் முன்புறம் அழகாக இருப்பதற்கு ஆவன செய்ய முன்வர வேண்டும். இந்த ஆலயம், ஈழத்திலே சிதம்பரத்தைப்போன்று காட்சியளிக்கும் என இந்தப் பகுதியில் முன்பு வாழ்ந்த சித்தர் விநாசித்தம்பி பெரியவர் கூறியதாக அனேகர் கூறக் கேள்விப்பட்டேன். அத்தகைய சிறப்புடைய இந்த ஆலயத்தின் அழகு மேலும் மேலும் மெருகூட்டப்பட வேண்டும். இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்காக முன்பு பலர் அரும்பாடுபட்டு அமரர்களாகி விட்டார்கள். அவர்களை இந்தக் காலகட்டத்தில் நன்றியுடன் நினைவில் இருத்த வேண்டும்.
இந்த ஆலயத்துக்குச் சமீபமாகவுள்ள முஸ்லிம்பள்ளி வாசலுக்கு அண்மையில் வாழ்ந்த முகாமையாளர் கணபதிப்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, சிதம்பரத்தா என்ற மூதாட்டி, இவரது மகன் தறுமு மற்றும் இராசசேகரம், சி.வி.இராசதுரை, தா.குமாரையா, குலசேகரம், உடையார் அருளம்பலம், தெள்ளுமணி, துரையப்பா, தங்கத்துரை, ஐயாத்துரை ஆகிய அன்பர்களது வழித் தோன்றல்களில் வந்த இளைய தலைமுறையினர். தங்கள் தாய் தந்தையர்களின் வழிகாட்டலில் இந்தப் புண்ணிய கைங்கரியத்தை நிறைவேற்றுவார்களானால் ஆலயச் சூழல் அழகுறச் சிறக்கும். பிள்ளையார் அருளும் பெருகும்.
ஆலய வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட ஏனைய அன்பர்களும் இந்த நற்காரியத்தில் பங்கேற்றல் நன்று என எண்ணத் தோன்றுகிறது. எம்பெருமான் அருள் என்றும் எல்லோருக்கும் கிட்டுவதாக.

வை.நிர்மலானந்தன்

## கம்பவாரிதியை மறக்கலாமா?

செம்மொழியாம் தமிழ் மொழிக்கு வரமளித்தவர் கம்பவாரிதி ஜெயராஜ். தேன் சுவை சொட்டச் சொட்டத் திக்கெட்டும் தமிழ் மணக்க, வான் உயர வாழ்வளித்தவர் ஜெயராஜ் என்றால் தமிழுக்கு அதை விடச் சிறப்பு என்னதான் இருக்க முடியும். கம்பராமாயணம் தொடக்கம் கர்நாடக சங்கீதம் வரை, சம்பந்தர் தொடக்கம் சகல ஆகம பண்டிதர் வரை மிகவும் தெளிவாகவும், துல்லியமாகவும், தாற்பரியமாகவும், தண்ணார்ந்த மொழி நடையில் தமிழன்னையை அலங்கரித்து மகுடம் சூட்டியவர் கம்பவாரிதியே எனத் தைரியமாகக் கூறலாம். தேன் தமிழ் செந்தமிழ், இன்பத் தமிழ், அழகு தமிழ் என்று செம்மொழியாம் தமிழுக்கு உலக அரங்கிலே உயிர்கொடுத்தவர் கம்பவாரிதியாவார். கட்டடங்களைக் கட்டியும், சிமெந்தைக் கொட்டியும் காசைக் கரியாக்கும் நவீன யுகம் சோபிக்கும் உலகின் கண், கன்னித்தமிழைப் பதம் கெடாமல், இதம் கெடாமல், தீர்க்கசுமங்கலியாய் நீடுவாழவழிசமைத்தவர் கம்பவாரிதியே!
ஒரு விழா எப்படி அமைய வேண்டும்? அதில் உரையாட எவருக்கு என்ன தலைப்புக் கொடுக்க வேண்டும், எதை எப்படிப் பேச வேண்டும், எதை எப்படி மறுத்துப் பேச வேண்டும் எதை சமூகத்துக்கு எளிதாகச் சொல்ல வேண்டும். சொல்லியபடி எப்படி தானும் நடந்து காட்டவேண்டும். பட்டிமன்றம், வித்தகம், இசைவேள்வி, ஊடகங்கள் இவற்றின் மூலமாகச் சமூகத்துக்குச் சென்று சேரவேண்டிய செய்தி என்ன? ஆன்மிகத்துக்குச் சொல்லவேண் டிய செய்தி என்ன? அரசியலுக்குச் சொல்ல வேண்டிய செய்தி என்ன? எதைஉரத்துச்சொல்லவேண்டும்? எதைஉறைக்கச்சொல்ல வேண்டும்! இந்த மண்ணையே உணர்ந்து கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்த்து வரும் கம்பவாரிதிக்கு இன்றுவரை அதியுயர்ந்த விருது வழங்கப்படாத பொறுப்புக்கு நாமும் உடந்தையாக இருக்கத்தான் வேண்டுமா? கம்பவாரிதியை மறந்து வாழ தமிழுக்கு முடியுமா?

கே.எஸ்.சிவஞானராஜா

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியேறும் பிரிட்டனால் ஆங்கிலத்துக்கும் சிக்கல்

லண்டன், ஜூன் 30

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறவுள்ளது. அதனால் ஆங்கில மொழிக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அது சர்வதேச மதிப்பை இழக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டனைத் தவிர வேறு எந்த நாடும் ஆங்கிலத்தை தேசிய மொழியாகக் கொண்டிருக்கவில்லை. பிரிட்டன் வெளியேறுவதால் ஆங்கில மொழியையும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஒவ்வொரு நாடும் தமக்கான மொழியைக் கொண்டுள்ளன. பிரிட்டனைத் தவிர மல்ரா, அயர்லாந்து நாடுகளில் ஆங்கிலம் அன்றாட மொழியாகக் காணப்படுகின்றது. ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரிட்டன் இல்லை என்றால் ஆங்கிலமும் தேவையில்லை.- என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்தவரான போலாந்து நாட்டைச் சேர்ந்த டனுடா ஹப்னர் கூறினார் என ஊடகங்கள் தெரிவித்தன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் 24 மொழிகள் அங்கீகாரம் பெற்றுள்ளன. அவற்றில் ஆங்கிலம், பிரெஞ், ஜேர்மன் மொழிகள் பிரபல்யமானவை. ஆங்கில மொழியை அகற்றிவிட்டு பிரெஞ் மொழிக்கு முன்னுரிமை கொடுக்கும் கருத்துகளுக்கு ஜேர்மனி ஆதரவு தெரிவிக்கவில்லை.

நாட்டின் பல பாகங்களில் ஆங்கிலம் பேசும் சமூகத்தினரை நாம் கொண்டுள்ளோம் என்று ஜேர்மனியைச் சேர்ந்து ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் தெரிவித்தார். (ற-ரி4)



# அற்றாரக் விமான நி

# சூடு, மனிதக் குண்டு

## 36 பேர் சாவு; 147 பேர் காயம்

## துருக்கியில் பயங்கரம்

அங்காரா, ஜூன் 30

துருக்கி தலைநகர் இஸ்தான்புல் விமான நிலையத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு மற்றும் மனி தக் குண்டுத் தாக்குதலில் 36 பேர் உயிரிழந்தனர். 147 பேருக்கு மேல் காயமடைந்தனர். நேற்றுமுன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்தது.

உலகின் பெரிய விமான நிலையங்களில் இஸ்தான்புல்லில் உள்ள அற்றாரக் விமான நிலையமும் ஒன்று. வாடகைக் காரில் வந்த 3 பேர் சூடு நடத்தியுள்ளனர். மனிதக் குண்டுத் தாக்குதலையும் நடத்தினர்.

"மக்கள் சிதறி ஓடினர். காயம் பட்டவர்கள் ஆங்காங்கே விழுந்து கிடந்தனர். முதலில் என்ன நடக்கின்றது என்பதே எமக்குப் புரியவில்லை." - என்று அங்கிருந்த ஒருவர் கூறினார். தாக்குதலை அடுத்து விமான நிலையம் உடனடியாக மூடப்பட்டது. விமானங்கள் வேறு நிலையங்களுக்குத் திருப்பப்பட்டன. துருக்கிக்குப் பயணத்தை மேற்கொள்ளவிருந்த அனைத்து அமெரிக்க விமான சேவைகளும் நிறுத்தப்பட்டன.

"தீவிரவாதத்துக்கு எதிராக சர்வதேச நாடுகள் அனைத்தும் இணைந்து தாக்குதல் நடத்த வேண்டும். இந்தச் சம்பவம் அதை உறுதிப்படுத்துகிறது"- என்று துருக்கி ஜனாதிபதி ரையிப் ஏர்டகன் தெரிவித்தார்.

"இந்தத் தாக்குதலில் பின்னணியில் ஐ.எஸ். அமைப்பு இருக்கலாம்".- என்று துருக்கிப் பிரதமர் பினாளி யில்டிரிம் கூறினார்.

"இந்தத் தாக்குதல் ஐ.எஸ். அமைப்பால் அல்லாது அதன் உபகுழுக்களால் நடத்தப்பட்டி... கலாம், தாக்குதல் நடத்தப்பட்ட விதத்தில் இருந்து இதை ஊகிக்க முடிகின்றது. பயன்படுத்திய விதம், வெ... ரிகள் அதை உறுதிப்படுத்... தாக்குதலில் குர்திஷ் அ... பிருக்கலாம்"- என்று அ...





# கீர் இனப் பசுவின் சிறுநீரில் தங்கம்!

## இந்திய ஆய்வாளர்கள் கண்டுபிடிப்பு

புதுடில்லி, ஜூன் 30

பசுவின் சிறுநீரில் தங்கம் இருக்கின்றது என்று இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கண்டுபிடித்துள்ளனர். அங்குள்ள ஜூனாகத் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கீர் இனப் பசுக்களின் சிறுநீரில் தங்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கீர் இனப் பசுக்கள் இந்தியாவுக்கான தனித்துவ இனமாகும். பால் உற்பத்திக்கு இவை சிறந்தவை.

கடந்த 4 ஆண்டுகளாக இந்த இனப் பசுக்கள் 400 சோதனைக்குட்படுத்தப்பட்டன. ஆய்வின் முடிவில் 1 லீற்றர் சிறுநீரில் இருந்து 3 தொடக்கம் 10 மில்லி கிராம் தங்கத்தைப் பெற முடியும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

புராதன குறிப்புகளில் பசுவின் சிறுநீரில் தங்கம் உள்ளது, மருத்துவ குணங்கள் நிறைந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை அது நிரூபிக்கப்படவில்லை. நாம் ஆய்வை மேற்கொண்டோம். 400 பசுக்களின் சிறுநீரில் சோதனை நடத்தப் பட்டது.

பசுவின் சிறுநீரில் 5 ஆயிரத்து 100 மூலகங்கள் உள்ளன. ஆடு, மாடு, ஒட்டகம் என்பவற்றிலும் சோதனை நடத்தப்பட்டன. கீர் இனப் பசுக்கள் தனித்துவம் மிக்கவையாகக் காணப்பட்டன.- என்று ஆய்வுக் குழுவின் தலை வர் கோலாகியா தெரிவித்தார். (ற-ரி4)

## சீன, தென் கொரிய பிரதமர்கள் சந்திப்பு

பீஜிங், ஜூன் 30

தென் கொரிய பிரதமர் ஹவாங் அக்ஷய் ஆன் மற்றும் சீன நாட்டுப் பிரதமர் லி கெக்கியாங் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் தலைநகர் பீஜிங்கில் இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் சீன நாட்டின் அரச தரப்பினரும், ஹவாங் அக்ஷய் ஆனுடன் வருகை தந்துள்ள தென் கொரிய உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

ஹவாங் அக்ஷய், சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய உலக பொருளாதார மன்றத்தில் கலந்து கொள்ளும் நோக்குடன், கடந்த ஞாயிற்றுக்கிழமை சீனா வந்தடைந்தார். இவரது நான்கு நாள்கள் கொண்ட உத்தியோகபூர்வ பயணம் சீனப் பிரதமரின் அழைப்பின் பேரிலே இடம்பெற்றுள்ளது.

## அமெரிக்காவுக்கு ஐ.எஸ். அமைப்பு எச்சரிக்கை

வொஷிங்டன், ஜூன் 30

அமெரிக்காவுக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளது ஐ.எஸ். அமைப்பு. காணொலி மூலம் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது.

அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ, லாஸ்வேகாசில் ஆகிய இடங்களில் தாக்குதல்கள் நடத்தப்படும் என்று அந்தக் காணொலியில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வார இறுதியில் சான்பிரான்சிஸ்கோவில் ஓரினச் சேர்க்கையானர்களின் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. அதனால் நகரம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. ஐ.எஸ். அமைப்பின் மிரட்டலுக்கு இதுவே காரணம் என்று நம்பப்படுகின்றது.

இஸ்லாத்தை நம்பாது, அதற்கு முரணாக நடப்பவர்களைக் கொல்லுங்கள் என்று ஐ.எஸ். அமைப்பின் காணொலியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-ரி4)






## சட்ட திட்டத்தை விளக்கி சர்ச்சையில் சிக்கியது அமெ. செஞ்சிலுவைச் சங்கம்

வொஷிங்டன், ஜூன் 30

நீச்சல் குள சட்டதிட்டங்களை விளக்குவதற்காக வைத்த அறிவிப்பால் சர்ச்சையில் சிக்கியுள்ளது அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம்.

அந்த அறிவிப்பில் கறுப்பின, அமெரிக்க உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கறுப்பினத்தவர்களே சட்ட திட்டங்களை மீறுகின்றனர் என்பது போன்று சித்திரிக்கப்பட்டுள்ளது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இன வேறுபாட்டுடன் தாம் நடந்து கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ள அமெரிக்க செஞ்சிலுவைச் சங்கம், மக்களிடம் மன்னிப்பும் கோரியுள்ளது. மனிதாபிமானத்துக்கான நீண்ட வரலாற்றைக் கொண்டது எமது நாடு. இந்த அறிவிப்பு குறித்து மன்னிப்புக் கோருகின்றோம் என்று தமது ருவீற்றர் பக்கத்தில் மன்னிப்புக் கோரியுள்ளது. (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...நிலையத்தில் ...டு தாக்குதல்



...ன்றது. ஆயுதங்களைப் ...தம், வெடிப்புக்களின் மாதி ...திப்படுத்துகின்றன. இந்தத் ...ஷ் அமைப்புக்கும் தொடர் ...ன்று அமெரிக்க உளவுத் துறை அதிகாரிகள் கூறுகின்றனர்.

இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்புகளும் உடனடியாக உரிமை கோரவில்லை. அந்த நாட்டு அதிகாரிகள் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-ரி4)

# வாய் தடுமாறி கூறியதை வாய்ப்பாக்கினர் மக்கள்!

மொஸ்கோ, ஜூன் 30

ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பெலாரஷ் நாட்டில் ஆடைகளின்றிவேலையில் இறங்கியுள்ளனர் மக்கள்.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறுகின்றது. அந்த நாட்டு நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருகின்றது.

இதையடுத்து பெலாரஷ் நாட்டு ஜனாதிபதி பொருளாதார நிலமைகள் குறித்து நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்தினார்.

நாட்டு மக்கள் ஒருமித்து வேலை செய்ய வேண்டும். நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்று உரையாற்றிய அவர் வாய் தடுமாறி ஆடையின்றி வேலை செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார்.

அங்குள்ள இளைஞர்கள், யுவதிகள் இதை வாய்ப்பாக்கிக் கொண்டுள்ளனர். வேலைத் தலங்களில் ஆடையின்றி வேலை செய்வதோடு ஆடையின்றி வேலை செய்வோம் என்ற வாசகங்களுடன் அந்தப் படங்களை சமூக வலைத் தளங்களிலும் பதிவேற்றியுள்ளனர்.

இது அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.(ற-ரி4)

## ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகக்கூடாது

**பிரிட்டன் மக்கள் கோரிக்கை**

லண்டன், ஜூன் 30

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறக் கூடாது என்று வலியுறுத்தி லண்டன் ரபல்கர் சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடினர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறுவதால் ஏற்படும் மாற்றங்கள் குறித்து முழுமையாக அறியாது தவறிழைத்து விட்டோம் என்று அவர்கள் தெரிவித்தனர். பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

பொய்ப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், தமக்கு இந்த விவகாரத்தில் போதிய விளக்கம் வழங்கப்படவில்லை என்றும் மக்கள் தெரிவித்தனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகுவது குறித்து பிரிட்டன் மக்களுக்கு போதிய விளக்கம் கொடுக்கப்படவில்லை என்று கூகுள் நிறுவனம் தெரிவித்தது. இணையத்தில் விடுக்கப்பட்ட கேள்விகள் மூலம் மக்களின் அறியாமை புலப்பட்டது என்று கூகிள் தெரிவித்துள்ளது. அகதிகளை நாட்டினுள் அனுமதிப்பதை மட்டும் கருத்தில் கொண்டு ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேற பிரிட்டன் மக்கள் முடிவு செய்தனர் என்று கூகிள் தெரிவித்துள்ளது. (ற-ரி4)



# சக்தி வாய்ந்த ரொக்கட் உந்துதல் சோதனை

வொஷிங்டன், ஜூன் 30

நாசா விண்வெளி மையம் இதுவரை இல்லாத அளவு சக்தி வாய்ந்த ரொக்கட் உந்துதலை நேற்றுமுன்தினம் சோதனை செய்தது.

அமெரிக்காவின் ஊட்டா மாகாணத்தில் இந்த சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

எதிர்காலத்தில் இது பூமியில் இருந்து செவ்வாய்க்கு செல்லும் விண்கலத்துக்குப் பயன்படுத்தப்படும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இந்த வகையான பின்னூட்டும் உந்தல் சக்தி விண்வெளிப் பயணத்திற்கு சாதகமான விடயம் எனத் தெரிவிக்கப்பட்டது.

3.6 மில்லியன் பவுண்டுகள் உந்துதல் இடம்பெற்றிருக்லாம். உந்தும் கருவி சுமார் 6 ஆயிரம் டிகிரி வெப்பநிலையை அடைந்திருக்கும். பூமியின் ஈர்ப்புக்கு மீறி விண்வெளியை அடைய 75 சதவீதம் அதிகமான உந்தும்திறன் அவசியம் - என்று நாசாவின் தலைமை அதிகாரி தெரிவித்தார். (ற-ரி4)



நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்த பலூஜா நகர் ஈராக் இராணுவம் மற்றும் அமெரிக்க கூட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டது. கடும் மோத...களால் பலூஜா நகர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அங்குள்ள கட்டடங்கள் பெரும்பாலானவை தரைமட்டமாகியுள்ளதுடன் கடும் சேதங்களுக்கும் உள்ளாகியுள்ளன. (ற-ரி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை பிறந்த எண்ணின் பலன்கள் 8

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 8 குறித்த விவரங்கள் கீழே பிரசுரமாகின்றன.)

**8 ஆம் திகதி பிறந்தவர்கள்**

இவர்கள் மிகுந்த தெய்வ நம்பிக்கை உடையவர்கள். அமைதியான வாழ்க்கை உண்டு. மதப்பற்று அதிகம் உண்டு. இவர்கள் பொருளாதாரத்தில் சிறந்த அறிஞர்களாக இருப்பார்கள். கற்பனைவளம் மிக்கவர்கள். நல்ல சிந்தனையாளர்கள். அடுத்தவர்களைத் தங்களது கருத்துகளுக்கு உட்படுத்தும்திறமைகொண்டவர்கள். சமூக சேவையில் மிகவும் நாட்டம் இருக்கும். கடுமையானஉழைப்பாளிகள். பெரும் சாதனை புரிபவர்கள். நலிவுற்றவர்களைக் கைதூக்கி விடும் நல்ல இயல்பினர். தனித்துச் செயல் புரியும் ஆற்றல் உடையவர்கள்.

**17 ஆம் திகதி பிறந்தவர்கள்**

இவர்கள் மிகுந்த சோதனைகளைச் சந்திப்பவர்கள். சலிக்காமல் உழைக்கும் இயல்பினர். எப்படியும் இறுதியில் பெருமை மிகு வாழ்க்கையை அடைவார்கள். நுண்ணிய அறிவு படைத்தசாமர்த்தியசாலிகள். குற்றங்களை மன்னிக்கும் கருணை மனமும் உண்டு. ஆன்மிகவாழ்க்கையிலும், பொது வாழ்க்கையிலும், அரசியலிலும் நிலையான இடத்தைப் பிடித்து விடுவார்கள். இவர்கள் வறுமையான குடும்பத்தில் பிறந்தாலும், தங்கள் உழைப்பினால் பெரும் செல்வத்தைச் சம்பாதிக்கும் யோகமும் உண்டு. பணம் சேர்ப்பதில் சமர்த்தர். துணிந்து எடுக்கும் சில முடிவுகள் தோல்வியும்அடையும். இருந்தாலும் அதை வெளியே தெரியாமல் வெற்றிக்கு மாற்றும் தைரியம் உண்டு. இவர்களே பெருந் திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செயற்படுத்துவார்கள். தங்களுக்கு வரும் தடைகளையும், சோதனைகளையும் துவம்சம் செய்யும் துணிவு படைத்தவர்கள்.

**26 ஆம் திகதி பிறந்தவர்கள்**

பொருளாதார விடயத்தில் குறைபாடு உடையவர்கள். முன்னோர் சேர்த்து வைத்த சொத்துக்கள் விரயமாகும். பண விரயங்களும் அதிகம் உண்டு. இவர்கள் அடுத்தவர்களால் அடிக்கடி ஏமாற்றம் அடைவார்கள். இருப்பினும் மனோ தைரியம் மிக்கவர்கள். எப்போதும் உயர்வான சிந்தனைகள் நிறைந்தவர்கள். எப்படியும் உயர்ந்த பதவி தொழிலை அடைய வேண்டும் என்று கடுமையாக உழைப்பவர்கள் இவர்கள்தான். பிறரால் அடிக்கடி வீண்பழி சுமத்தப்படுவார்கள். கற்பனைச் சக்தியும், கூர்மையான அறிவும் உண்டு. விதியின் சதியால் அடிக்கடி தோல்விகளைச் சந்திப்பார்கள்.

இருப்பினும் இறுதிக் காலத்தில் பொன்னும், பொருளும், கீர்த்தியும் கிடைத்து விடும். இவர்கள் மக்கள் அனைவரையும் எந்த வித்தியாசமின்றிச் சமமாக நேசிப்பார்கள். காதல் விவகாரங்களில் சிக்கல்கள் ஏற்படும்.

**தொழில்கள்**

இவர்கள் கடின உழைப்பாளிகள். சனி ஆதிக்கம் குறைந்தவர்கள் கடலை, எள்ளு, கம்பு, மலை வாழை, புகையிலை, மூங்கில், கீரைவகைகள், மரம், விறகு, கரி, எண்ணெய் வியாபாரம், உதிரிப்பாகங்கள் விற்பனையும் நன்கு அமையும். தபால் துறை, துப்பறியும்துறை, துப்புரவுத் துறையிலும் நன்கு பிரகாசிக்கலாம். அச்சுத் தொழில் போன்றவையும் நன்கு அமையும்.

பலர் பொறுமைசாலிகள், ஆராய்ச்சியாளர்கள், கணிதம் பூகோளம், நில ஆராய்ச்சி, தத்துவம், பௌதிகம், இரும்புத்தொழில்கள் போன்றவையும் நன்கு அமையும். பிராணிகள் வளர்ப்பு, வைத்திய தொழிலும் பார்க்கலாம். விவசாய முதலாளிகளும், தொழிலாளிகளும் இவர்களே.

போக்குவரத்து தொழில்கள் மூலம் நன்குசம்பாதிக்க முடியும். லொறி, பஸ்கள் நடத்துதல் மூலம் நன்கு பணம் சேர்க்க முடியும். கார், ஓட்டோ ஓட்டுநர்களாகவும் பணிபுரிவார்கள். வெளி நாடுகளில் பணிபுரியும் வாய்ப்பு பலருக்கும் கிடைக்கும்.

இரும்புச்சுரங்கம், நிலத்தடியில் இருக்கும் கற்கள் சுரங்கத் தொழில் போன்றவையும் ஒத்து வரும். நிலம் சம்பந்தப்பட்ட தொழிலும் வெற்றி தரும். கட்டட வேலைகள், பொறியியல் பணிகள் இவர்களுக்குப் பிடித்தமானவை. கடுமையான உழைப்பை எதிர்பார்க்கும் தொழில்கள்போன்றவையும் இவர்களுக்கு நன்கு அமையும்.

# நல்லாட்சியின் சிறப்பியல்புகள்

ப.தர்ஷிகா

போருக்குப் பிந்திய சூழலில் இலங்கையில் நல்லாட்சி காணப்படுகிறதா? என்கின்ற சிந்தனை அனைவரது மனங்களிலும் எழுகின்றது. இலங்கையில் கடந்த ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற எண்ணம் இலங்கையின் பெரும்பான்மையின மக்களிடமும் சிறுபான்மையின மக்களிடமும் காணப்பட்டது. முன்னைய ஆட்சியில் இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டிருந்தனர். குறிப்பாக போர்ச் சூழலால் சிறுபான்மையினத் தமிழ் பேசும் மக்கள் பெரும் உயிர் இழப்புக்களையும், உடைமை இழப்புக்களையும் எதிர்கொண்டனர்.

மனித உரிமைகள் மீறப்பட்டு, போர்க் காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய ஐ.நா. மனித உரிமைகள் சாசனம் மீறப்பட்டு, போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன. இலங்கை நல்லாட்சியின் தத்துவத்தில் இருந்து விடுபட்டதாகவே கொள்ளப்பட்டது.

எனவே இங்கு நல்லாட்சியின் தேவை உணரப்பட்டது. இதற்கு ஆட்சி மாற்றமே ஒரு தீர்வென அனைவராலும் உணரப்பட்டது. எனவே இறுதியாக இடம் பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது நல்லாட்சி தத்துவங்களுக்கு மாறாகச் செயற்பட்ட ஓர் அரசை வீழ்ச்சியுறச் செய்வதில் சிறுபான்மை மக்களின் பங்கு அளப்பரியதாக இருந்துள்ளது. இதன் காரணமாகவே இலங்கையில் ஒரு போதும் இல்லாதவாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சி யும் இணைந்து ஓர் ஆட்சியை ஏற்படுத்தின. ஐக்கிய நாடுகள் சபை நல்லாட்சி தத்துவத்தை பின்வருமாறு வரையறை செய்கிறது.

ஓர் அரசு சமூகத்தின் தேவைகள், செயற்பாடுகள், விவகாரங்களை நிர்வாக பொருளாதார அரசியல் ரீதியாக ஒழுங்குபடுத்தும்போது நல்லாட்சி எனக் குறிப்பிடப்படுகிறது. பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டில் அனைத்து மக்களையும் அரவணைத்துச் செல்ல வேண்டியது ஒரு நல்லாட்சி அரசின் பொறுப்பாகும்.

மேலே கூறப்பட்ட வியாக்கியானங்களை உற்றுநோக்கும்போது அதிகார வர்க்கம் ஆட்சிப்பொறுப்பை ஏற்கின்ற போது மக்கள் பல்வேறு இன்னல்களையும் அனுபவிக்க நேரிடும் என்பதை மறைமுகமாக உணர முடிகின்றது.

இலங்கையில் ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி முறைமை பேணப்படுகின்றபோதிலும் கடந்த அரசினது ஊழல் மோசடிகளும், அதிகார துஷ்பிரயோகமும், குடும்ப ஆட்சியும் இலங்கையில் ஒரு நல்லாட்சி நிலவியது எனக் கூறமுடியாதவாறு தடை போடுகின்றன. எனவேதான் புதிய அரசு தாம் நல்லாட்சியை நோக்கி பயணிப்பதாகக் கூற வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது. சிறுபான்மையின மக்களின் உரிமைகளை வழங்குவதற்கு இலங்கையின் அரசமைப்பு ஒரு தடைக்கல்லாக இருக்கின்றது என உணர்ந்த அரசு அதற்கான முன்மொழிவுகளை இலங்கை மக்களிடம் இருந்தே பெற்றுக் கொண்டுள்ளது.

நல்லாட்சிக்குரிய பண்புகளாகப் பின் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பங்கேற்பு
2. சட்டத்தின் ஆட்சி
3. பொறுப்பு வாய்ந்த தன்மை
4. வெளிப்படைத்தன்மை
5. வளங்களின் வீண்விரயமின்மையும், நியாயமான பங்கீடும்
6. நீதித்துறையின் செயற்பாடுகள் சுதந்திரமாக அமைதல்
7. ஆரோக்கியமான சிவில் சமூகம் காணப்படல்
8. நிறுவன ரீதியான பொறுப்பு வாய்ந்த தன்மை
9. மனித உரிமைகளை மதிப்பதும் பேணுவதும்
10. இலஞ்சம், ஊழல் ஆகியனவற்றைத் தவிர்த்து அதிகாரங்களைத் தவறான முறையில் பயன்படுத்தாமை

மேற்கூறப்பட்டவை நல்லாட்சிக்கு உரிய பண்புகளாகக் காணப்படுகிறது. ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை இத்தகைய பண்புகள் காணப்படுகிறதா? என்பது கேள்விக் குறியாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆட்சியில் மனித உரிமை மீறல் மற்றும் ஊழல் மோசடிக்கான வலுவான ஆதாரங்கள் இருப்பதாக தற்போதைய ஜனாதிபதி சிறிசேனா தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணை செய்யுமாறு உத்தரவு பிறப்பித்தபோது பசில் ராஜபக்ச கைது செய்யப்பட்டார். விசாரணைகள் நடத்தப்பட்டன. இருப் பினும் இவ்வாறான அதிரடி நடவடிக்கைகள் தற்போது தொய்வடைந்து காணப்படுகின்றன.

எனவே இந்தச் செயற்பாடானது நல்லாட்சிக்குரிய பண்பான மனித உரிமைகளைப் பாதுகாத்தல் என்ற நிலையிலிருந்து எதிரானதாகக் காணப்படுவதால், நல்லாட்சி இடம்பெறுகிறது என கூற முடியாத நிலை உண்டு.

இனவாதமற்ற புதிய தேசிய அரசு உதயமான பிறகு தமக்கு நிம்மதி கிடைக்கும் என்றிருக்கும் இடம் பெயர்ந்த மக்கள் இந்த அரசிலும் என்ன செய்வதென்று தெரியாது அங்கலாய்க்கின்றனர்.

25 வருடங்களாக மீள்குடியேற்றப்படுவோம் என்ற எண்ணத்தில் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கும் வடக்கு முஸ்லிம் சமூகம் இன்று முற்றிலும் ஓரங்கட்டப்படும் ஓர் ஏமாற்று அரசியல் கலாசாரத்துக்குள் சிக்குண்டு உதவி செய்ய யாருமற்ற ஒரு சமூகமாகக் காணப்படுகிறது. மைத்திரி விடுத்த வாக்குறுதிகளில் மீள்குடியேற்றமும் ஒன்று. ஆனால் அவர்கள் செய்தது என்ன? தமிழர் பகுதிகளில் பெரும்பான்மையான மக்கள் இன்னமும் குடியேற்றப்படவில்லை. இவ்வாறான பல சூழ்நிலைகளும் இலங்கையில் நல்லாட்சி நிலவுகிறதா என்ற வினாவை எழுப்புகிறது. நல்லாட்சிக்குரிய பண்புகளாக கூறப்பட்டவை இடம்பெறாத போது நல்லாட்சி இடம் பெறுகிறது எனக் கூறமுடியாது.

*கட்டுரையாளர் : மாணவி,*
*மெய்யியல்துறை 3 ஆம் வருடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலவாணர் இராஜரட்ணம்
சைவப்புலவர்,
சைவசித்தாந்த பண்டிதர்



# பிள்ளைகளுக்கான பெரியோரின் நல்லுரைகள்

பிள்ளைகளே இந்தப் பாரினில் நாம் மானிடர்களாகப் பிறந்ததே பெரும் பாக்கியம். ஏனெனில் நாம் இறைவனுக்கு மிக அருகில் வந்துவிட்டோம். இன்னும் சொற்ப காலத்தில் நாம் இறைவனை அடையலாம். அதற்கு இடையில் பெரும் பெரும் தடைகள் உள்ளன. அந்தத் தடைகள் எல்லாவற்றையும் நாம் தாண்டியாக வேண்டும். அது சுலபமான காரியமல்ல. பெரும் தியாகங்களையும் அர்ப்பணிப்புக்களையும் சேவைகளையும் செய்தேயாக வேண்டும். இவற்றுக்கு ஊன்றுகோலாக அமைவது எமது கல்வி அறிவே!

எமது கல்வி அறிவை இளமையிலேயே கற்றுப் பெற்றுக் கொள்ள வேண்டும். இளமைப் பருவத்தில் தான் கல்வியை நாம் கற்பதற்கு பல வாய்ப்புக்கள் இருக்கின்றன. போதிய நேரம், உடல் ஆரோக்கியம், மூளை அபிவிருத்தி என்பன இளமையில்தான் கிடைக்கும். வயது முதிர முதிர பொறுப்புகளும் பிரச்சினைகளும் ஆரோக்கியக் குறைபாடும் மேலெழுகின்றன. அதனால்தான் எம் முதியோர் இளமையில் கல் என்றும் இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்றும் மொழிந்துள்ளார்கள்.

ஆகவே நாம் கணப் பொழுதையும் வீண டிக்காமல் அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப் பதையும் கணினி விளையாட்டுக்களில் ஈடுபடுவதையும் தவிர்த்து கல்வியை கசடறக் கற்று எதிலும் வல்லவனாகி நல்ல உயரிய தொழில்களை யும் பெற முயற்சி செய்ய வேண்டும். உயர் பதவிகள் வகித்தால்தான் நன்றா கப் பணம் சம்பாதிக்க முடியும். போதியளவு பணம் எம் கையில் இருந்தால் தான் நாம் நிம்மதியாகவும் நோய் நொடியின்றி ஆரோக்கியமாகவும் வாழ முடியும். தான தர்மங்க[illegible]ாச் செய்ய முடியும். சிக்கல்களி[illegible]ந் தும் விடுபட முடியும். கல்விய[illegible]வே எமக்கு உறுதுணை புரிகின்[illegible]து. சிறந்த கல்வியறிவைப் பெறு[illegible]து மாத்திரமல்ல நாம் அதன்படி [illegible]ழக வும் வேண்டும். அதனால் [illegible]ன் தெய்வப்புலவர் திருவள்ளு[illegible]ம்.

கற்க கசடறக் கற்பவை கற்ற[illegible]ன்
நிற்க அதற்குத்தக

என்று எமக்கு எடுத்துரைக்கி[illegible]ார். அவர் எம் வாழ்வை வளம்ப[illegible]து வதற்காகத் தமது 1330 இரு வரிக் குறள்களால் எமக்கு அளப்பரிய அறிவுரை பகர்ந்திருக்கிறார். இரு வரிக் குறள்களாகையால் படிப்பதும் அதை மனதில் பதியவைப்பதும் மிகவும் சுலபம்.

தெய்வ அனுக்கிரகம் பெற்ற ஔவைப்பிராட்டியாரும் கூட

அன்னையும் பிதாவும்
முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று

என்று தனது அறிவு நூலான கொன்றை வேந்தனால் 90 க்கு மேற்பட்ட அறிவுரைகளை நான்கு சொற்களைக் கொண்ட வரிகளால் எமக்குப் புரிய வைத்துள்ளார்.

அத்தோடு தமது ஆத்திசூடியில் இவ்விரண்டு சொற்களால் நாம் செய்ய வேண்டிய 108 காரியங்களைச் சொல்லியிருக்கிறார். எம்மை நல்வழிப்படுத்துவதற்காக மூதுரை, நல்வழி என்ற நூல்களையும் எமக்காக வழங்கியிருக்கிறார். இவைகள் யாவும் எமக்குக் கிடைத்த அளப்பரிய பொக்கிசங்களே!

இவர்கள் இருவரினதும் அறிவுரைகளை நாம் தெய்வ வாக்காகக் கற்று மனதினில் நன்கு பதிய வைத்து அதன்படி ஒழுக வேண்டும். அப்படி ஒழுகுவோமானால் நாம் விரைவில் தெய்வனுக்கிரகம் பெற்ற மனிதர்கள் ஆவோம். மோட்சத்தின் வாசற்படியில் நாம் காலடி எடுத்து வைக்க முடியும்.



இன்றைய இளைஞர் சமூகத்தினரில் பலர் தேவாரங்கள், திருவாச கங்கள், திருக்குறள், நல்வழி, கொன்றை வேந்தன் ஆகிய இவற்றாடு ஔவையாரின் ஆத்திசூடி யும், முதியோர்களுக்கானவை என்றும் நவீன ஆத்திசூடியும் நாக்கைக் கொளுவ வைக்கும் அர்த்த மற்ற சினிமாப் பாடல்கள் தான் இளைய வயதினருக்குரியவை என்ற மாயையில் இருக் கின்றனர்.

எது எம்மை வாழவைக்கும். எது எம்மைப் பாதாளத்தில் தள்ளும். நவீனத்தை எவ்வாறு சரியாகப் பயன்படுத்து வது என்பதை தற்போது உணரா விட்டாலும் அனுபவத்தால் உணர் வீர்கள். இவைகள் அன்று காலங் கடந்த ஞானமாகி விடும். எல்லா உயிர்களிடத்தும் அன்பு கருணை காட்ட வேண்டும். தங்கள் வாழ் நாள்களை எமக்காக அர்ப் பணித்து சொல்லொணாத் துன் பங்களை அனுபவித்து எமக்காகவே வாழ்ந்த எம் அன்பிற்குரிய பெற்றோரைத் தினமும் வணங்கி அவர்கள் சொற்படி கேட்டு அவர்களுக்கு வேண்டிய உணவு உடை அளித்து அவர்களுக்குரிய பணிவிடைகளை நன்கு முழுமனத்தோடு செய்ய வேண்டும். பிற்காலத்தில் அவர்களை முதியோர் இல்லத்தில் கொண்டு போய்விடாமல் நாமே அவர்களை நன்கு பாராமரிக்க வேண்டும். அவர்களுக்குச் செய்யும் தொண்டு தெய்வத்துக்குச் செய்யும் தொண்டாகும். அவர்கள் தாம் எமக்கு முன்னறி தெய்வம்.

நாம் எமது கலாசாரத்தையும் சமயத்தையும் பேணிக் காக்க வேண்டும். பூசையறையில் தினமும் காலையும் மாலையும் விளக்கேற்றி ஆசார சீலர்களாக தேவாரங்களால் இறைவன் புகழைப் பாட வேண்டும். கோயிலுக்குச் செல்லும் போது எமது கலாசார உடைகள் அணிந்து செல்ல வேண்டும். இவை யாவற்றையும் தயங்காமல் முன்னின்று செய்வீர்களேயானால் தெய்வத்தின் அருள் உங்களுக்கு நிச்சயம் கிடைக்கும். வாழ்வின் பயனைப் பெறுவீர்கள்!

**எமது கல்வி அறிவை இளமையிலேயே கற்றுப் பெற்றுக் கொள்ள வேண்டும். இளமைப் பருவத்தில் தான் கல்வியை நாம் கற்பதற்கு பல வாய்ப்புக்கள் இருக்கின்றன. போதிய நேரம், உடல் ஆரோக்கியம், மூளை அபிவிருத்தி என்பன இளமையில்தான் கிடைக்கும். வயது முதிர முதிர பொறுப்புகளும் பிரச்சினைகளும் ஆரோக்கியக் குறைபாடும் மேலெழுகின்றன. அதனால்தான் எம் முதியோர் இளமையில் கல் என்றும் இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்றும் மொழிந்துள்ளார்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இன்றைய தினம்

1859 - பிரான்ஸின் சாகச வித்தைக்காரர் சாள்ஸ் புளொண்டின், கயிற்றின்மீது நடந்து நயகாரா நீர்வீழ்ச்சியைக் கடந்தார்.
1882 - அமெரிக்க ஜனாதிபதி ஜேம்ஸ் கார்பீல்டை படுகொலை செய்த குற்றச்சாட்டில் வோஷிங்டனில் சார்ள்ஸ் கே கிஷீ தூக்கிலிடப்பட்டார்.
1886 - கண்டங்களுக்கிடையேயான முதலாவது புகையிரதப் பயணம் கனடா மொன்றியலில் இருந்து பறப்பட்டது.
1937 - உலகின் முதலாவது அவசர தொலைபேசி இலக்கம் 999 லண்டனில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
1959 - அமெரிக்காவின் விமானப்படை விமானம் ஒன்று தொடக்கப்பள்ளி மீது வீழ்ந்ததில் 11 மாணவர்களும் 6 குடியிருப்பாளர்களும் உயிரிழந்தனர்.
1960 - பெல்ஜியத்திடமிருந்து கொங்கோ சுதந்திரம் பெற்றது.
1971 - அமெரிக்காவின் 26ஆவது அரசமைப்புச் சீர்திருத்தமாக வாக்களிக்கும் வயதை 18 வயதாகக் குறைக்கும் சட்டத்தை ஒஹியா மாநிலம் ஏற்றுக் கொண்டது.
1985 - ரிடபிள்யுஏ 847 விமானம் கடத்தப்பட்டு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த அமெரிக்கர்கள் 17 நாள்களின் பின்னர் பெய்ரூட்டில் விடுவிக்கப்பட்டனர்.
1990 - கிழக்கு மற்றும் மேற்கு ஜேர்மனிகள் தமது பொருளாதாரத்தை ஒன்றிணைத்தன.
1997 - ஐக்கிய ராச்சியத்தினால் ஹொங்கொங்கின் இறைமை சீன மக்கள் குடியரசிடம் கையளிக்கப்பட்டது.
2002 - இந்தியத் துணைப்பிரதமராக அத்வானி நியமனம்.
2005 - இலங்கையில் கசையடித் தண்டனை வழங்குவது சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கம். இறுதியாக இந்தத் தண்டனை 1984ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்தது.
2005 - பொதுக் கட்டமைப்பை இலங்கையரசு விரைந்து செயற்படுத்த வேண்டுமென ஆஸ்திரேலியா அரசு வலியுறுத்து.
2010 - மூன்றாம் பெனிஞ்னோ அக்கியுனோ பிலிப்பைன்ஸின் 15ஆவது ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.
2010 - எகிப்தில் மாபெரும் மக்கள் எதிர்ப்பார்பாட்டம் இடம்பெற்றது.
2013 - அரிஷோனா காட்டுத்தீயைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்ட 19 தீயணைப்புப் படைவீரர்கள் உயிரிழப்பு.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

## வானொலிப் பெட்டி

சின்னச் சின்ன வானொலி
சிந்தை கவரும் வானொலி!
எண்ணம் போன்று யாவரும்
இயக்கி மகிழும் வானொலி!

கருத்தைக் கவரும் நாடகம்
காதுக் கினிய பாடல்கள்
மருத்துவரின் ஆலோசனைகள்
மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள்

அள்ளிக் கொடுக்கும் வானொலி
அனைவர் போற்றும் வானொலி
சொல்லிக் கொடுத்துக் கல்வியைச்
சொக்க வைக்கும் வானொலி


நல்ல நல்ல நிகழ்ச்சிகள்
நாளும் வழங்கும் வானொலி
வெல்லம் போல நாளுமே
விருந்து வைக்கும் வானொலி

உழவர் வாழ்வு உயர்ந்திட
உதவி செய்யும் வானொலி!
பழகுதமிழ் வளர்த்திட தினசரி
பாடு படும் நல் வானொலி!

கண்ணை மூடிக் கொண்டாலும்
கவருகின்ற வானொலி
மண்ணில் மக்கள் என்றுமே
மகிழ்ந்து கேட்கும் வானொலி!



# பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்!



ஒருநாள் குருவும் சீடனும் வயல் பாதை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தனர்.

வழியில் ஓரிடத்தில் முயல் ஒன்று துள்ளி விளையாடிக் கொண்டிருப்பதைக் குரு கண்டார்.

உடனே அவர் சிஷ்யனை நோக்கி, "சிஷ்யா! நான் அந்தப் பாழடைந்த கோயிலில் படுத்து ஓய்வு எடுத்துக் கொள்கிறேன். நீ அந்த முயலைப் பிடித்துக் கறி சமை" என்று உத்தரவிட்டார். குரு ஓய்வு எடுக்கப் போனதும் சிஷ்யன் முயலைப் பிடித்துக் கறி சமைத்தான்.

கறி சமைத்த பிறகு, சிஷ்யன் அதை ருசி பார்ப்பதற்காக நாக்கில் ஒரு துளி கறியைப் போட்டுப் பார்த்தான்.

கறி மிகவும் ருசியாக இருந்தது. 'கும்' என்று வீசிய மணம் அவன் நாக்கில் நீர் ஊறச் செய்தது.

முயல் கறியைக் குருவுக்குப் பரிமாறும்போது அவர் தனக்கு ஒன்றும் மிச்சம் வைக்காமல் எல்லாவற்றையும் சாப்பிட்டு விடுவார் என்பதை சிஷ்யன் அனுபவபூர்வமாக உணர்ந்தவன். அதனால் கறியில் கிடந்த முயலின் கால்களில் ஒன்றை எடுத்து சிஷ்யன் தின்றுவிட்டான்.

சாப்பிடும்போது குரு முயலின் கால் ஒன்றைக் காணாது, "சிஷ்யா! முயலின் கால்கள் மூன்று தானே உள்ளன. மற்ற ஒரு கால் எங்கே?" என்று கேட்டார்.

"குரு தேவா! நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான் இருந்தன" என்றான் சிஷ்யன்.

"அதெப்படி? முயலுக்கு நான்கு கால்கள் அல்லவா இருக்கும்?" என்று குரு கேட்டார்.

"முயல்களுக்கு நான்கு கால்கள் இருப்பதுதான் வழக்கம். ஆனால், நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தானே இருந்தன" என்று சிஷ்யன் சாதித்தான்.

குரு சிஷ்யனை அதட்டி-மிரட்டிக் கேட்டுப் பார்த்தார். "நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள்தான்" என்று சிஷ்யன் பிடிவாதமாகத் திரும்பத் திரும்பக் கூறினான். "சிஷ்யா! என்னுடைய குணம் உனக்குத் தெரியும். எனக்குக் கோபம் வந்துவிட்டால் உன்னைச் சாபம் கொடுத்துச் சாம்பலாகுமாறு எரித்துவிடுவேன். உண்மையைச் சொல். அந்த மற்றொரு கால் எங்கே?" என்று கூச்சல் போட்டார் குரு.

"சுவாமி! நான் உண்மையைத்தான் சொல்லுகிறேன். நீங்கள் என்னைச் சபித்து சாம்பலாக்கினால் கூட நான் சொல்லுவது ஒன்றுதான். நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள்தான்" என்றான் சிஷ்யன் பிடிவாதமான குரலில்.

குருவுக்கு சிஷ்யனுடைய பிடிவாதம் குழப்பத்தை அளித்தது.

யோசித்தபோது சிஷ்யன் என்ன செய்திருப்பான் என்று குரு ஓரளவுக்கு யூகித்துக் கொண்டார்.

முயலிடம் காணாமல்போன கால் சிஷ்யனின் வயிற்றுக்குள் இருக்கவேண்டும் என்று தெரிந்து போய்விட்டது.

உடனே அந்த சிஷ்யனை நோக்கி, சிஷ்யா! மிச்சமிருக்கும் முயலின் கால்களில் இரண்டை உனக்குச் சாப்பிடத் தருகிறேன். இப்போதாவது உண்மையைச் சொல்" என்று கேட்டார்.

"குருதேவா! அந்த முயலுக்கு மூன்றே கால்தான் இருந்தன. நான்கு கால்கள் இருந்து அது ஓடி இருந்தால் என்னால் அதைப் பிடித்துக் கறி செய்திருக்க முடியுமா? மூன்று கால்களில் அது ஓடியதால் தான் என்னால் அதைப் பிடிக்க முடிந்தது." என்றான்.

அன்றிலிருந்து ஒரு கருத்தைப் பிடிவாதமாகச் சாதிப்பவர்களைப் பார்த்து "அவன் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள்தான்" என்ற பழமொழி ஏற்பட்டு விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறுகளை உணர்ந்து நடந்தால் மகாத்மாக்களாக மாறிவிடலாம்

இந்திய நாட்டுக்கு அந்நியரிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த மகாத்மா காந்தியை பொய் பேசாத ஒரு வாய்மையாளர் என்ற வகையில் நாம் மதிக்கின்றோம். சுவாமி விவேகானந்தர் துணிச்சலானதும் மனிதகுலத்துக்குத் தேவையானதுமான கருத்துக்களைக் கூறியதால் போற்றப்படுகின்றார். புத்தர் பெருமானை அகிம்சையின் மறு அவதாரமாக இந்த உலகம் மதித்து வணங்குகின்றது. வாடிய பயிரைக் கண்டு தேம்பி அழுத இராமலிங்க வள்ளலார் அவரது இரக்க குணத்துக்காக மதிக்கப் படுகின்றார். அன்னை தெரேசா பொறுமையின் மறு அவதாரமெனப் புகழப்படுகின்றார். இவ்வாறுதான் மகான்களும், பெரியவர்களும் ஏதோவொரு வகையில் மதிக்கப்படுகின்றார்கள் துதிக்கப்படுகின்றார்கள்.

மகாத்மா காந்தி தமது இளமைக் காலத்தில் தீய நண்பர்களுடன் சேர்ந்து, கூடாத செயல்களில் ஈடுபட்டார். தமது குடும்ப மரபுகளுக்கு மாறான புலால் உண்ணல், மது அருந்துதல் ஆகிய தீய பழக்கங்களும் அவரிடம் காணப்பட்டன. அவரது தந்தையாரின் உயிர் பிரியும் வேளையில்கூட காந்தி தந்தைக்கு அருகில் நிற்காது மனைவியுடன் படுக்கை அறையில் காணப்பட்டார். இத்தனை தீய பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்த காந்தி பின்னாளில் தமது திருந்திய, உயர்ந்த நடவடிக்கைகளால் மகாத்மா காந்தியாக உயர்ந்து நின்றார்.

இதற்கு அவரது வாய்மையே காரணமாகும். அவர் தமது வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் அனைத்தையும் மறைக்காது உள்ளதை உள்ளபடியே கூறினார். அவரது சுயசரிதையில் இவை யாவுமே காணப்படுகின்றன.

இராமாயணம் என்னும் அற்புதமான காவியத்தை இந்த உலகுக்குத் தந்த வால்மீகி ஒரு பெரிய கொள்ளையனாக வாழ்ந்தவர். இதையே தமது பிரதான தொழிலாகவும் கொண்டிருந்தார். ஆனால் காலப்போக்கில், தாம் செய்வது தவறென்பதை உணர்ந்து, மனம் திருந்திய வால்மீகி இராமாயணம் என்ற மிகப் பெரிய காவியத்தை உலகுக்குத் தந்தார்.

இன்று தவறு இழைப்பவர்களைக் காண்கிறோம். ஆனால் தாம் செய்த தவறுகளை உணர்ந்து மனம் திருந்துபவர்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றனர். தவறுகளை ஒத்துக்கொள்கின்ற பண்பு அருகிவிட்டது. அவற்றை மூடி மறைப்பதற்கான முயற்சிகளே மேற்கொள்ளப்படுகின்றன. இதனால்தான் தவறு செய்பவர்கள் மேலும் மேலும் அதில் மூழ்கி விடுகின்றனர்.

இலங்கை அரசுகளும் இதற்கு விதி விலக்கல்ல. முன்னைய ஆட்சிக்காலத்தின்போது இடம்பெற்ற இறுதிப்போர் தமிழர்களைப் பொறுத்தவரையில் அவர்களது வாழ்க்கையில் என்றென்றுமே மறக்க முடியாத ஒன்று. ஆனால் ஏழு ஆண்டுகள் கடந்த நிலையிலும் அவர்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. தாமதப்படுகின்ற நீதி மறுக்கப்படுகின்ற நீதிக்குச் சமன் என்ற கூற்றுக்கு இணங்க அவர்கள் நீதி மறுக்கப்பட்ட ஓர் இனமாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். உலகின் எத்தனையோ நாடுகளில் பிரச்சினைகள் தோன்றின. ஆனால் அவை தீர்க்கப்பட்ட வரலாறுகள் நிறையவே உண்டு. இந்த நாட்டில் மட்டும்தான் பல தசாப்தங்களாக முடிவொன்றும் காணாத நிலை தொடர்கின்றது.

ஆட்சியாளர்கள் மகாத்மாக்களாக மாறத்தேவையில்லை, சாதாரண ஆத்மாக்களாக இருந்து நியாய வழி நடந்தாலே போதுமானது. எல்லாமே நல்லதாக நடந்து முடிந்து விடும். ஆனால் அதற்கான அறிகுறிகள்தான் இன்னமும் தெரியவில்லை.




மழை வருவதற்கான அறிகுறியாக வானம் இருண்டு காணப்படும். ஆனால் தமிழர்களின் இருளைப் போக்குவதற்கு நம்பிக்கை என்னும் ஒளிதான் மிளிர வேண்டியுள்ளது. ஒளிருமா?

# தியாகத்துக்குத் தலை வணங்கிப் போற்றுவோம்



தெல்லியூர்த் தேவி

காட்டிலிருந்த சிங்கம் ஒன்று, தானே காட்டு ராஜா என்ற தலைக்கனத்துடன் திரிந்தது. தன்னைவிடப் பலசாலி உலகில் கிடையாது, தன்னைத் தட்டிக் கேட்கவும் எவரும் இல்லை என்ற தலைக்கணம் அதற்கு நிறையவே இருந்தது. போதாக்குறைக்கு காட்டு விலங்குகள் எல்லாம் அந்தச் சிங்கத்தை மிருகங்களுக்கு அரசனாக்கியும் உள்ளன. எனவே அதன் தலைக்கணத்துக்கு மெருகூட்டி விடப்பட்டால் சொல்லவும் வேண்டுமா?

காட்டில் சர்வாதிகார ஆட்சியை நடத்தியது. தன் விருப்பத்துக்கு விலங்குகளைக் கொன்று தின்றது. தனக்குப் பசி இல்லாத போதும் விலங்குகளைக் கொன்று குவித்தது. ஆஹா! விலங்குகளை ஓட ஓட விரட்டி, அவற்றின் மேல் பாய்ந்து நகங்களாலும், பற்களாலும் அவற்றின் உடம்பை நார்நாராகக் கிழிப்பது சிங்கத்துக்கு எத்தனை சுகமாயிருக்கின்றது. இது ஒரு பொழுதுபோக்காகவும் இருக்கின்றது எனத் தனக்குத்தானே சிங்கம் கூறிப் பெருமிதம் அடைந்தது.

இதன் சர்வாதிகாரப் போக்கை உணர்ந்த காட்டு விலங்குகள் அத்தனையும் கதிகலங்கின. ஒருநாள் சிங்கத்துக்கு அடுத்த பலசாலியான புலியிடம் அத்தனை விலங்குகளும் சென்று தங்களைச் சிங்கத்திடம் இருந்து காப்பாற்றும்படி கேட்டுக் கொண்டன. அதற்குப் புலி நாங்கள் இரு வேறு துருவங்கள்தான். ஆனாலும் ஒருவரை ஒருவர் துன்புறுத்துவது இல்லை. எனவே என்னால் முடியாது என்றது.

அடுத்த பலசாலி யார் என வினாவியபோது கரடி ஏன குரங்கு கூறவே எல்லோரும் கரடியிடம் சென்று தங்களுக்கு சிங்கத்தால் ஏற்படும் துன்பங்களைக் கூறி தங்களைக் காப்பாற்றும் படி கேட்டன.

அதற்குக் கரடியும் எனக்குப் பலம் இருப்பது உண்மைதான், ஆனால் சிங்கத்துடன் ஒப்பிடும் அளவுக்கு இல்லை. மேலும் சிங்கம் எனக்கோ எனது குடும்பத்துக்கோ இதுவரை எந்தவித கெடுதலும் செய்யவில்லை. எனவே என்னால் சிங்கத்தை எதிர்க்க முடியாது என்றது. எனவே நீங்கள் வேறு பலசாலியைப் பார்ப்பது நல்லது என்றது. எல்லோருமாக வேறு யார் பலசாலி என்று யோசித்தன. ஏன் யானையிடம் செல்லலாமே என்று கூறியது மான். ஆமாம் யானையை மறந்து விட்டோமே எனக் கூறி எல்லோருமாக யானையிடம் சென்றன. யானை ஒருமுறை ஓசையுடன் பிளிறிவிட்டு இதோ பாருங்கள்! உங்கள் நிலை பரிதாபத்துக்குரியதுதான். ஆனாலும் அவனை எதிர்க்க என்னால் முடியாது என்று பின்வாங்கியது.

யானையும் கைவிட்டுவிட்டது. இனி எங்கள் கதிஅதோகதிதான். சிங்கம் எங்களைச் சீக்கிரம் அழித்துவிடுவான் என்று சொல்லி அழுதது ஆடு.

அப்பொழுது தீவிர யோசனையில் இருந்த மான் மற்ற விலங்குகளை நோக்கி சகோதர சகோதரிகளே! சிங்கத்தைக் கொல்ல பலசாலிகள் வேண்டியதில்லை. நான் ஒருவனே போதும்! அவனை வெழுத்துக்கட்டிவிடுவேன்! என்று ஆவேசத்துடன் கூறியது. என்ன ஆச்சரியம் நீ சிங்கத்தை எதிர்த்து விடுவாயா. அதன் உறுமல் சத்தம் கேட்டாலே பின்னங்கால் பிடரியில் அடிக்க காத தூரம் ஓடும் நீயா சிங்கத்தை அழிப்பாய் எனறு வியந்தது முயல் .

ஆமாம்! அந்தச் சிங்கம் எனது குடும்பத்தையே அழித்துவிட்டான். எங்கள் குடும்பத்தில் மீதியாய் இருப்பது நான் மட்டுமே. அவனால் பாதிக்கப்பட்டவன் நான். ஆக்வே நான் சிங்கத்தை என் உயிரைக் கொடுத்தாவது அழித்துவிடுவேன் என்றது ஆக்ரோசத்துடன். ஏனைய விலங்குகள் குழப்பத்துடன் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. சகோதர. சகோதரிகளே! சிங்கத்தைக் கொல்ல எனக்கு உடல் பலம் இல்லாது இருக்கலாம். ஆனால் எனக்கு மூளை பலமாக உள்ளது. என் உறவினர்கள் போனது போகட்டும். நான் எனது உயிரைக் கொடுத்தாவது உங்களைக் காப்பாற்றுவேன்.

நாளை புதைசேற்றுக் குட்டையின் அருகே நீங்கள் நில்லுங்கள். அதன் பின்பு நடப்பதைப் பாருங்கள் என்று கூறியது. மறு நாள் புதை சேற்றுக் குட்டையின் அருகே சகல விலங்குகளும் புதரின் மறைவிலும் மரங்களின் மேலும் மறைந்திருந்தன. அப்பொழுது மான் புதைசேற்றுச் குட்டையை நோக்கி அசுர வேகத்தில் ஓடிவருவதையும் அதன் பின்னால் அதைத் துரத்திக்கொண்டு சிங்கம் ஓடிவருவதையும் கண்டன.


என்ன நடக்கப் போகின்றதோ என்று பயந்தபடி விலங்குகள் பார்க்கையில் மான் கண் இமைக்கும் நேரத்தில் குட்டையில் தாவ அதைத் தொடர்ந்து வந்த சிங்கமும் அதனை நோக்கித் தாவியது. இருவ்ரும் சேற்றிலே புதையுண்டனர். சிங்கம் முழுமையாக சேற்றிலே மூழ்கி உயிர்பிரிய அதைத் தொடர்ந்து மானும் சேற்றினுள் மூழ்கி உயிர்த்தியாகம் செய்தது. கண்முன்னே நடந்ததை பார்த்த அத்தனை விலங்குகளும் தங்களுக்காக தன் இன்னுயிரைத் தியாகம் செய்த மானை நினைந்து ஐயோ! என்று கதறி அழுதன.

இந்த விடயத்தை அறிந்த வேங்கை, கரடி, சிறுத்தை போன்ற கொடிய விலங்குகளும் இனிமேல் பிற உயிர்களை வதைப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தன. பின்னர் சாதுவான மிருகங்கள் யாவும் அந்தக் காட்டில் நிம்மதியாக வாழ்ந்தன. இந்த நிம்மதியான வாழ்க்கையைப் பெற்றுத் தந்த மானுக்கு காட்டின் நடுவே ஒரு சிலை வைத்து தினமும் அதற்கு மரியாதை செலுத்தி வரலாயின.

இவ்வாறே தமது அரிய உயிர்களைத் தியாகம் செய்து எமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்துள்ளனர் எத்தனையோ வீரர்கள், நாட்டுப் பற்றாளர்கள். அவர்களின் தியாகத்தை மனதில் கொண்டு நாங்களும் செயற்படுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருகிறது சண்டக்கோழி – 2



லிங்குசாமி இயக்கத்தில் விஷால் நடித்த 'சண்டக்கோழி' வெற்றிப் படமாக அமைந்தது. இதில் ராஜ்கிரண், மீரா ஜாஸ்மின் நடித்திருந்தனர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு இதன் 2ஆம் பாகம் உருவாக்குவதற்கான முயற்சியில் லிங்குசாமியும் விஷாலும் ஈடுபட்டனர். சொந்தப் படத் தயாரிப்பு பணி, வேறு படத்தை இயக்கும் வேலையில் லிங்குசாமி பிஸியானதால் 'சண்ட கோழி 2' தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. இதற்கிடையில் விஷால் வேறு படங்களில் நடித்து வந்தார். கடந்த சில மாதங்களுக்குமுன் திடீரென்று 'சண்ட கோழி 2' படத்தை தொடங்குவதாக அறிவித்தார் விஷால். முதல் பாகத்தில் நடித்த நட்சத்திரங்கள் 2ஆம் பாகத்திலும் நடிப்பார்கள் என்று ஒருமுறை லிங்குசாமி கூறி இருந்தார். இடைப்பட்ட காலத்தில் பல மாற்றங்கள் நடந்தன. மீரா ஜாஸ்மின் திருமணம் செய்தார். அவரே இந்தப் படத்தில் மீண்டும் ஹீரோயினாக நடிப்பாரா? அவர் நடிக்கச் சம்மதித்தாலும் அதற்கு விஷால் ஒத்துக்கொள்வாரா என்பது சந்தேகமாக உள்ளதாம்.





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சூழ்நிலை உணர்ந்து செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழிலில் உற்பத்தி, விற் பனை அதிகரிக்கும். ஆதாயம் உயரும். தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** நண்பரின் ஆலோசனையால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பண விடயத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது. வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது அவசியம்.

**மிதுனம்:** மனதில் புத்துணர்வு நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்க அனுகூலம் உண்டு.

**கடகம்:** நண்பருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**சிங்கம்:** சிறிய பணியும் கடினமானதாக தோன்றும். தொழிலில் லாபம் மிதமாக இருக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். புத்திரரின் நற்செயல் பெருமையைத் தேடி தரும்.

**கன்னி:** மனதில் அதிக எதிர்பார்ப்பு உருவாகலாம். தொழில், வியாபார நடைமுறை தாமத கதியில் இயங்கும். இலாபம் சுமார். பணியாளர்கள், பணிச் சுமையைச் சந்திப்பர். பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம்.

**துலாம்:** லட்சிய மனதுடன் பணிபுரிவீர்கள். தொழிலில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணக்கடனில் ஒரு பகுதி செலுத்துவீர்கள். பணியாளர்கள் சலுகைப் பயன் பெற்று மகிழ்வர்.

**விருச்சிகம்:** புதியவர்களின் நட்பால் நன்மை கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உருவாகும். நிலுவைப் பணம் வசூலாகும். புத்திரர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** திட்டமிட்ட பணியில் மாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவைப்படும். லாபம் சுமார். உடல்நலனில் அக்கறை தேவை.

**மகரம்:** பேசுவதில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பெண்கள் செலவுக்கு பணமின்றி திண்டாடுவர். இஷ்ட தெய்வ வழிபாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**கும்பம்:** எதிரியால் பிரச்சினை உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணம் கொடுக்கல், வாங்கலில் நிதானம் தேவை. பெண்களுக்கு ஆன்மிக எண்ணம் மேலோங்கும்..

**மீனம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். மிதமான லாபம் கிடைக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் அவசியம்.



## திருமண விருந்தில்...

**பந்தி பரிமாறுபவர்:** "நீ முதல் பந்தியிலையும் சாப்பிட்டியே! இந்த பந்தியில் மறுபடியும் சாப்பிடுகிறாயே?"

**சாப்பிடுபவர்:** "ஆமாங்க, உங்களுக்கு ஞாபக சக்தி அதிகம். எனக்கு ஜீரண சக்தி அதிகம்'"






**Munzi Mariyam** @Munzi_m

வலிகள் நம்மை வலுப்படுத்தும் பயங்கள் நம்மை தைரியப்படுத்தும். மனக்கஷ்டங்கள் நம்மை புத்திசாலிகளாக மாற்றும்.




## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | 9 | | 4 | | |
| 9 | 7 | | | | | | | |
| | | 2 | | | 8 | 1 | | |
| | 1 | | | 7 | 4 | 2 | | |
| | 6 | | | | | | 4 | |
| | | 5 | 6 | 3 | | | 9 | |
| | | 1 | 5 | | | 3 | | 4 |
| | | | | | | | 2 | 8 |
| | | 4 | | 6 | 3 | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 1 | 5 | 2 | 6 | 9 | 7 |
| 7 | 9 | 1 | 6 | 4 | 8 | 5 | 3 | 2 |
| 6 | 5 | 2 | 7 | 3 | 9 | 8 | 4 | 1 |
| 5 | 1 | 9 | 8 | 2 | 3 | 4 | 7 | 6 |
| 2 | 8 | 6 | 4 | 7 | 1 | 9 | 5 | 3 |
| 4 | 7 | 3 | 9 | 6 | 5 | 2 | 1 | 8 |
| 9 | 6 | 7 | 2 | 1 | 4 | 3 | 8 | 5 |
| 1 | 4 | 5 | 3 | 8 | 6 | 7 | 2 | 9 |
| 3 | 2 | 8 | 5 | 9 | 7 | 1 | 6 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி பரவலாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 600 | 700 | 900 | 700 | 800 |
| நண்டு | 250 | 300 | 300 | 400 | 500 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 700 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 800 | 600 |
| சீலா | 300 | 500 | 400 | 800 | 500 | 400 | 400 |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 500 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 500 | – |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 340 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 300 | 350 |
| சூடை | 150 | 100 | 100 | 200 | 200 | 150 | 100 |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 400 | 200 | 200 |
| மதனம் | 150 | 200 | 180 | – | 450 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 80 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |

# அலங்கார மெழுகுவர்த்தி

அலங்கார மெழுகுவர்த்தி மற்றும் ஸ்ரான்டுகள் அறிமுகமாகியுள்ளன. இவற்றைமேசைஅலங்காரமெழுகுவர்த்தியாகவும்,கேக்மெழுகுவர்த்தியாகவும் பயன்படுத்தமுடியும்.இவற்றின்விலை 300 இல் இருந்து 800 ரூபா வரை.








# தக்காளி ஊறுகாய்

### தேவையானவை

தக்காளி–8 கிராம்
மிளகாய்த்தூள்–ஓரளவு
எண்ணெய்–ஓரளவு
கடுகு, உளுந்தம்பருப்பு, கறிவேப்பிலை – தாளிக்க
வெந்தயப் பொடி–(வெந்தயத்தை வறுத்து அரைத்தது). ஒரு தேக்கரண்டி
உப்பு – தேவையான அளவு

### செய்முறை

தக்காளியைக் கழுவி சிறு துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்.

அடுப்பில் ஒரு பெரிய பாத்திரத்தை வைத்து அதில் எண்ணெயை ஊற்றிக் காயவிடவும். எண்ணெய் காய்ந்ததும் கடுகு, உளுந்தம் பருப்பு போடவும். பொரிந்ததும், கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும். நறுக்கிவைத்த தக்காளியை எண்ணெயில் போடவும். தக்காளித் துண்டுகளை கொஞ்சம் கொஞ்சமாக சேர்க்கவும்.

உப்பு, மிளகாய்த்தூள் சேர்க்கவும். பின்னர் சுவைத்துப் பார்த்து மீதியைச் சேர்த்துக்கொள்ளலாம். தக்காளி கொதிக்க ஆரம்பித்த சிறிது நேரத்திலேயே தானாகவே மசிந்துவிடும். கொதியினால் வெளியில் தெறிக்க ஆரம்பித்தவுடன் அடுப்பைத் தணிக்கவும். ஓரளவு வற்றியவுடன் வெந்தயப் பொடியை சேர்க்கவும். அடிப்பிடிக்காமல் இருக்க அடிக்கடி கிளறிவிடவும். சிலமணி நேரங்கள் கழித்து நன்றாக நீர்ப்பதமே இல்லாமல் வற்றி, எண்ணெயும் தக்காளியும் மட்டுமாக வரும் போது அடுப்பிலிருந்து இறக்கிவிடவும். சூடு ஆறியபின் போத்தல்களில் போட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் கொள்ளவும்.

# சமையல் அறை குறிப்புக்கள்

- மாதுளைச் சாற்றுடன் கற் கண்டைக் கலந்து, அடுப்பில் வைத்துச் சூடாக்கி வடி கட்டி, 15மி.லி குடிக்க, வாந்தி வருவது நிற்கும்.
- இரண்டு கொழுந்து வெற்றிலை, 40 துளசி இலைகள் இரண்டையும், ஒரு லீற்றர் நீரில் கொதிக்கவைத்து, 20 மி.லி. அளவுக்கு விட் டுக் குடித்தால், காய்ச்சல் வெகுவாகக் குறையும்.
- செரிக்கக் கடினமான உணவைச் சாப்பிட்ட பின் வாந்தி வந்தால், மாதுளைச் சாறு, இஞ்சிச் சாறு, எலுமிச்சைச் சாறு மூன்றையும் கலந்து, 15 மி.லி. குடிக்க, செரிக்காமல் தொந்தரவு செய்யும் உணர்வும், வாந்தி உணர்வும் நிற்கும்.

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 100 | – | 80 | 160 | 100 | 60 | – | 60 |
| கத்தரி | 80 | 60 | 80 | 100 | 60 | 100 | – | 40 |
| கரட் | 300 | 250 | 140–300 | 240 | 300 | 250 | – | 160 |
| மரவள்ளி | 100 | 70 | 100 | 80 | 80–90 | 60 | – | 50 |
| பயிற்றை | 80 | 60 | 80 | 70 | 60–80 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 250 | 240 | 140–180 | 120 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 160 | 110 | 120 | 160 | 120–140 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 90 | 80 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 140 | 180 | 140 | 120 | – | 160 |
| பூசணி | 70 | 80 | 80 | 120 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 300 | 250 | 200 | 140 | 240 | 200 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 80 | 80 | 100 | 80 | 60 | – | 40 |
| கீரை | 15 | 30 | 30 | 30 | 20 | 20 | – | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 45 | 20 | 30 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 500 | 500 | 700 | 600 | 800 | – | 500 |
| புடோல் | 50 | 70 | 80 | 120 | 120 | 80 | – | 100 |
| கோவா | 180 | 160 | 150 | 140 | 140 | 150 | – | 140 |
| வெண்டி | 120 | 80 | 100 | 120 | 80 | 120 | – | 80 |
| போஞ்சி | 200 | 200 | 200 | 240 | 220 | 240 | – | 120 |
| லீக்ஸ் | 200 | 160 | 120 | 240 | 180 | 120 | – | 150 |
| தேங்காய் | 40 | 20 | 40 | 35 | 20–30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 80 | – | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 | 250 | 200 | 160 | – | 280 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 200 | 200 | 120 | 240 | 300 | – | – | 200 |
| இராசவள்ளி | 160 | – | – | 160 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 700 | 550 | 600 | 800 | 350–400 | 600 | – | 350 |

# நாளை

ஆனி-17
வெள்ளிக்கிழமை – 01.07.2016
திதி:
துவாதசி மு.இ.11.24 வரை
நட்சத்திரம்:
கார்த்திகை மு.இ.11.21 வரை
ராகுகாலம்:
10.26-11.56 வரை
சுபநேரம்:
05.56-07.26 வரை
கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



| திரு.மயில்வாகனம் ஜெயசுதன் | திரு.சூரியகுமார் சசீதரன் | திரு.சுப்பிரமணியம் புஸ்பராங்கன் |
|---|---|---|
| BA(Hons)MAFE,PGDE | NDT(Maths),B.Ed | Sci.Trd |

எமது பாடசாலை ஆசிரியர்களான திரு.ம.ஜெயசுதன், திரு.சூ.சசீதரன், திரு.சு.புஸ்பராங்கன் ஆகியோர் அதிபர் சேவை தரம் III இற்குப் பதவி உயர்வு பெற்றமையிட்டு மகிழ்ச்சி அடைவதோடு அவர்கள் மேலும் பல பதவிகள் பெற்று உயர்வடைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரி கழகம் - யா/பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் - சுழிபுரம்.

(11,17,18)

INVITATION FOR BIDS

## University of Jaffna

### Provision of Cleaning, Janitorialand Maintenance Services for the University of Jaffna-2016/2017

1. The Chairperson, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up **to 2.00 p.m.** on **18th July, 2016**from the eligible Firms.

| Contract No | Service |
|---|---|
| UJ/MB/2016/ CS/**02** | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Buildings in various Locations in Jaffna, University of Jaffna-2016/2017 |
| UJ/MB/2016/ CS/**03** | Provision of Cleaning, Janitorialand Maintenance Services for the Rented Hostels in Various Locations in Jaffna, University of Jaffna-2016/2017 |
| UJ/MB/2016/ CS/**04** | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Siddha Medicine Unit at Kaithady, University of Jaffna-2016/2017 |
| UJ/MB/2016/ CS/**05** | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the Main Campus at Thirunelvely, Jaffna - 2016/2017 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   - 3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 3.2 Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than **Rs. 1.4Mn for** contracts No UJ/MB/2016/CS/02, 3& 4 each and **Rs. 3.5Mnfor** contract No UJ/MB/2016/CS/05.
   - 3.3 Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least**Rs. 2.0Mn**for Contract No UJ/MB/2016/CS/02, 3& 4 each and **Rs.5.0Mn** for Contract No UJ/MB/2016/CS/05.
   - 3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least **10 employees**for bid No.UJ/MB/2016/CS/02, 3 & 4 and **20 employees** for bid No.UJ/MB/2016/CS/05.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Unit, and University of Jaffna and inspect the bidding documents at the same address on any working day from 9:00hrs to 16:00hrs.

   Contact numbers : Phone. Tel: 021 2219201 Fax: 021 221 9201.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, **until 15.07.2016**from 9:00 hrs to 15:00 hrs upon payment of a **non refundable fee of Rupees one thousand five hundred (Rs. 1,500.00) foreach bid.Bid Security of Rs. 25,000.00 each forcontracts No** UJ/MB/2016/CS/02, 3& 4 **and Rs. 60,000.00 for contract No** UJ/MB/2016/CS/05in Cash or Bank Guarantee valid for 120 days from scheduled bid opening date, obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.
6. Bidders are strongly advised to attend the **pre-bid meeting on 12.07.2016at 10.00 am** in the board room of the University of Jaffna and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Chairperson, Procurement Committee of University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 to reach on or before **14.00 hrs on 18.07.2016or** be deposited in the tender box kept in the Registrar's officeon or before the above date and time. . Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

**Chairperson,**
**Procurement Committee,**
**University of Jaffna, Thirunelvely, Jaffna.**
**29.06.2016**

## வீடு காணி தேவை

நகரை அண்டிய பகுதிகளிலோ/ கொக்குவில் பிரதான வீதியிலோ உள்ள 2பரப்பிற்கு குறை யாத காணி அல்லது வீட்டுடன் கூடிய காணி உடனடியாக விலைக்கு தேவை.
தொடர்பிற்கு: 021 5618653 (திங்கள் முதல் வெள்ளி வரை 9.30Am தொடக் கம் 5.00Pm வரை தொடர்பு கொள்ளவும்)

## பெயர் மாற்றம்

முள்ளியான் கட்டைக்காட்டைச் சேர்ந்த **சிங்கராசா மாக்கறற் அறோணி** ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை **மாகிறேற் ஜெறோணி** என மாற்றம் செய்வதுடன் சகல ஆவணங்களிலும் இவ் வாறு கையொப்பமிடுவேன் எனவும் இத் தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடி யரசின் சட்ட திட்டங்களுக்கமைய சகலருக் கும் தெரியப்படுத்துகின்றேன்.

**சி.மாகிறேற் ஜெறோணி**

## பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை,ஜூன் 30
அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தி யாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில்அதிபர் எஸ்.திவா கரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.(வ)

### வீடு வாடகைக்கு உண்டு

கந்தர்மடத்தில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.

**077 126 7775, 077 215 1699**

### விடுதிப் பராமரிப்பாளர் தேவை

யாழ் நகரப்பகுதியிலுள்ள பிரபலமான விருந்தினர் விடுதி யொன்றிற்கு விடுதிப் பராமரிப்பாளர்கள் தேவை. இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

**077 666 4674**

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகள் நடைபெறும்போது நடமாடும் வாகன உணவகத்துக்கான கேள்வி அறிவித்தல் - 2016

துரையப்பா விளையாட்டு அரங்கத்தில் நிகழ்வுகள் நடைபெறும் போது நடமாடும் வாகன உணவகம் 11.07.2016 ஆம் திகதி முதல் 31.12.2016ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ். மாநகரசபையால் கோரப்படுகின்றன.

நடமாடும் உணவகத்தை விநியோகிப்பவருக்கு யாழ்.நகரப்பகுதியில் அல்லது ஆகக் கூடியதாக நகரத்தின் மையத்திலிருந்து 10KM சுற்று வட்டத்தில் நிரந்தர உணவகம் இருத்தல் வேண்டும்.

- ★ கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 500.00 (வரி நீங்கலாக)
- ★ கேள்விப் படிவம் விநியோகித்தல் - 30.06.2016 - 07.07.2016 முற்பகல் 11 மணிவரை.
- ★ கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 07.07.2016 பிற்பகல் 2.00 மணிவரை.
- ★ கேள்வி திறத்தல் - 07.07.2016 பிற்பகல் 2.30 மணிவரை.
- ★ மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் - ரூபா 5000.00
- ★ ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை - ரூபா 1,25.000.00 (வரி நீங்கலாக)

**மேலதிக விவரங்களை நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(சி/22145) (11,17,18)

பொ.வாகீசன்,
ஆணையாளர், யாழ்.மாநகரசபை.

## Chundikuli Girls' College Jaffna

### Annual Prize Day 2016

Saturday, 02nd July 2016 at 9.00 a.m.

Chief Guest
Eng. Vasantha Nallathamby

Chairperson:
Ven. S. J. Jeyaveerasingan
(Archdeacon of Jaffna)

Parents, old girls & well wishers are cordially invited

Principal, Staff & Students

## வெற்றுப்பொருள் விற்பனைக்கான கூறுவிலை கோரல்

**எமது சங்கத்தில் கீழ்காணும் விவரப்படியான வெற்றுப் பொருள்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இதற்கான தங்களின் கூறுவிலை விவரத்தினை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.**

| தொடர் இல | விவரம் | அளவு |
|---|---|---|
| 01 | அரிசிப்பை 50 கிலோ கிராம் | 1217 தனி |
| 02 | மாவு பை 25 கிலோ கிராம் | 2073 தனி |
| 03 | சீனிப்பை 50 கிலோ கிராம் | 892 தனி |
| 04 | வேறு வகைப்பை | 1844 தனி |
| 05 | சாக்கு பை | 191தனி |

**மேற்படி கூறுவிலைகளை சமர்ப்பிப்பதற்கான முடிவு திகதி 10.07.2016**

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி**
**பொது முகாமையாளர்**
**யாழ்ப்பாணம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்(வ-து)**
**இல. 127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்**

(சி/22145) (12,17,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்ற

றது. இதன் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

"இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்துப் பொறுப்புக்கூறும் பொறிமுறையில் சர்வதேசத்தின் பங்களிப்பு உள்வாங்கப்பட வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசேன், இலங்கை தொடர்பான தனது வாய்மூல அறிக்கையில் வலியுறுத்தினார். "இது குறித்து அரசின் நிலைப்பாடு என்ன?" என்று அமைச்சர்களிடம் கேட்கப்பட்டது.

"ஏன் எமது நீதித்துறைக் கட்டமைப்பில் பிரச்சினை இல்லையே? இலங்கையின் நீதித்துறை சுயாதீனமானதல்ல என்று எவரும் கூறமுடியாது. இலங்கையின் நீதித் துறை சுயாதீனம் குறித்து கடந்த காலங்களில் கேள்வி எழுப்பப்பட்டது. இதன் போதுதான் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டது. இப்போது அவ்வாறான நிலமை இல்லை. புலம்பெயர் தமிழர்கள்தான் இலங்கையின் நீதித்துறை சுயாதீனமில்லை எனக் கூறி வருகின்றனர். அவர்களின் கருத்துடன் நாம் இணங்க முடியாது. எமது நீதித்துறையின் கீழ் விசாரணைகளை முன்னெடுப்பதே அரசின் நிலைப்பாடாகும். நாட்டின் மனித உரிமை நிலமைகள் குறித்து தற்போது வெளியாகிவரும் அறிக்கைகள் சாதகமானதாகவே காணப்படுகின்றன" என்றார்கள் அமைச்சர்கள்.

"குற்றம் சுமத்தப்பட்டுள்ள தரப்பினரே விசாரணை மேற்கொள்ளக்கூடாது என்ற காரணத்தின் அடிப்படையிலும் தானே சர்வதேசத்தின் பங்களிப்பு வலியுறுத்தப்படுகின்றது" என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, "இலங்கை சுயாதீன இராச்சியம். இங்கு அரசியல் பிரச்சினை உருவாகியுள்ளது. அன்று இருந்த அரசு இன்று இல்லை. இலங்கை அரசு ஜனநாயகமானது. ஜனநாயக அரசின் அடிப்படைத்தன்மைதான், தவறைத் திருத்திக் கொண்டு முன்னோக்கிச் செல்வதற்கு இடமளிப்பது. இலங்கையின் நீதித்துறை சுயாதீனமாக்கப்பட்டுள்ளது. அந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டு நாம் முன்னோக்கிச் செல்லவேண்டும் என்பதே தற்போதைய அரசின் நிலைப்பாடாகும்.

ஆணையாளரின் அறிவிப்பு தொடர்பான அரசின் நிலைப்பாடு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்படும். அதற்கிடையில், வெளிநாட்டு நீதிமன்றம் கொண்டுவரப்படும். அது, இது என்று இங்கிருந்து என்னால் குறிப்பிட முடியாது. இதற்கு முன்னர் எவ்வாறான நிலைப்பாட்டில் இருந்ததோ அந்த நிலைப்பாட்டிலேயே அரசு தற்போதும் இருக்கின்றது - என்றனர்.

'முன்னாள் ஜனாதிபதியையும், பாதுகாப்புத் தரப்பினரையும், சர்வதேச நீதிமன்றம், மின்சாரக் கதிரை போன்றவற்றிலிருந்து பாதுகாத்துவிட்டதாக ஜனாதிபதியும், அரசும் கூறுகின்றது. குற்றச்சாட்டு இருப்பதனால்தானே இவ்வாறான கருத்து முன்வைக்கப்படுகின்றது?" என்ற கேள்விக்கு, "அப்படி இல்லையே. அது அவர்கள் நெஞ்சில் அடித்துக் கொண்டு கூறிய விடயம்தானே. என்னை (ஜனாதிபதியாக) நியமியுங்கள். இல்லாவிட்டால் மின்சாரக் கதிரைக்கு கொண்டு செல்வார்கள் எனக் கூறினர். மின்சாரக் கதிரை இல்லையே" என்று பதில் வழங்கினார்கள். (வ-5)

## பொருளாதார

மத்திய நிலையத்தை அனுராதபுரம் மாவட்டத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இது ஒரு சதி என முதலமைச்சர் கண்டித்திருந்தார்.

இந்தப் பின்னணியில் கடந்த திங்கட்கிழமை, வவுனியா உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கத்தினர், வடக்கு மாகாண சபையின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். இதற்குப் போட்டியாக செவ்வாய்க்கிழமை, வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்கள் பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையிலேயே அமைக்க வேண்டும் என்று பேரணி நடத்தின. இப்படி இந்தப் பிரச்சினை அரசியல் இழுபறிக்குள் சிக்கித் தவித்து வருவது குறித்து ஆராய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்கள் நான்கு பேரும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். அதேபோன்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் அழைக்கப்பட்டனர். (வ-5)

## வித்தியா

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று வித்தியா படுகொலை வழக்கு விசாரணக்கு வந்திருந்தது. சந்தேகநபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். குற்றப்புலனாய்வுப் பிரிவின் விசாரணைப் பொறுப்பதிகாரி ஐ.பி.நிசாந்த சில்வாவும் நேற்று மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

வித்தியா வசித்த கிராம அலுவலர் பிரிவில் கொலை இடம் பெறுவதற்கு முன்னரும், பின்னரும் வாழ்ந்த தனிநபர் அல்லது குடும்பங்களின் விவரங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை அடுத்த வழக்குத் தவணையில் சமர்ப்பிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட பிரிவு கிராம அலுவலருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

புங்குடுதீவு மாணவி வித்தியா கடந்த வருடம் மே மாதம் பாடசாலை சென்றுகொண்டிருக்கும்போது கடத்தப்பட்டு கூட்டுவன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டார், பாழடைந்த வீட்டிலிருந்து அவரது சடலம் மீட்கப்பட்டது. இந்த வழக்கில் இதுவரை 12 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மரபணுப் பரிசோதனை அறிக்கையும் நீதிமன்றுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது. வழக்கு விசாரணை எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4)


## மரண அறிவித்தல்

### ஆறுப்பிள்ளை சபாரத்தினசிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர்)



தெல்லிப்பழை, வறுத்தலை விளானைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட வறுத்தலை விளான் அ.மி.த.க பாடசாலையில் ஓய்வுபெற்ற அதிபருமான ஆறுப்பிள்ளை சபாரத்தினசிங்கம் நேற்று (29.06.2016) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - குட்டிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், சிவபாக்கியத்தின் (AUS) அன்புக் கணவரும், ஞானசோதி (U.K), ஞானராஜன் (ஆஸ்திரேலியா), ஞானதீபம் ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேசலிங்கம் (U.K), அருந்ததி (AUS), இராசகாந்தன் ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுகிர்தம்மா, பவளம்மா, செல்வரத்தினம், ஜெயரத்தினசிங்கம், புஷ்பம்மா, செகரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரனும், ரதன் (U.K), ஜெபன் (U.K), சுதா (AUS), சுகிர்தா, சுஜந்தன், அருஜா (AUS), அருஜீன் (AUS) ஆகியோரின் அன்புப் பேரனும், சுஜாத்தா (AUS), ஜெபேஷ் (AUS), சாயித்தியன், சானுகா, சிகானா, அமிலியா (U.K), யோசுவா (U.K) ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் ஆஸ்திரேலியாவில் சனிக்கிழமை இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டு புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு இறுதி ஆராதனை நடைபெறும்.

இலங்கையில் 02.07.2016 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நன்றி செலுத்தும் ஆராதனை தெல்லிப்பழை அமெரிக்கன் மிஷன் திருச்சபை ஆலயத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

யாழ்ப்பாணம்- 077 627 1852, 077 332 9407
ஆஸ்திரேலியா - 0061 2963 44387

## மரண அறிவித்தல்



பிறப்பு
09.11.1944

இறப்பு
28.06.2016

### நடராசா சின்னையா

(காவடி உரிமையாளர் - பளை)

கச்சார்வெளி, பளையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சின்னையா நேற்றுமுன்தினம் (28.06.2016) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - நாகமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கனகசபாபதி - நாகேஸ்வரி தம்பதியரின் மருமகனும், கலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் பார்வதி, பொன்னையா, இராசையா, கிருஸ்ணபிள்ளை, கிருஸ்ணதேவி, நவரத்தினராசா ஆகியோரின் சகோதரனும், மலர்ச்செல்வி, பாலச்சந்திரன், சத்தியேஸ்வரி, நந்தினி(கனடா), ஜெயசந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும்,புவனேஸ்வரி, சாந்தினி, ஈஸ்வரி (லண்டன்), லோகேஸ்வரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - ஊர்காவற்றுறை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீதரன் (சிவா - சாருஷன் பந்தல் சேவை - பளை), தயாபரன் (துயா-அனுசா பந்தல் சேவை இணுவில்), சி.சிவகரன் (கண்ணன்-லண்டன்), லோ.சுகந்தினி (பளை) ஆகியோரின் மாமனாரும், சாளினி, சாருஷன், சாருஷா (கிளி / பளை மத்திய கல்லூரி).விஸ்ணுஜா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி ), விணுசிகா (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை), லதுஷன் (கிளி / இந்து ஆரம்ப பாடசாலை), கபிஷன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2016) வியாழக்கிழமை பளையில் அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒரு மணியளவில் சமாதிக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

**கச்சார்வெளி,பளை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்வரியில்

கிராந்துருகொட்டே பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

அண்மையில் வற்வரி அதிகரிக்கப்பட்டதன் காரணமாக மக்களின் வாழ்க்கைச் செலவு பெரிய அளவில் அதிகரிக்கப்பட்டதுஎன முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, நாட்டின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதனை கவனத்திற்கொண்டு, வற்வரி மீது சில திருத்தங்களை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

இது குறித்து, தான் பிரதமருடன் திங்களன்று முக்கியமாகப் பேசுவார் என்று ஜனாதிபதி தெரிவித்தார். அதன் பின்னர் மக்களுக்கு நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் சம்பந்தப்பட்ட வரித் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றார் ஜனாதிபதி. (வ-5)

## தென்னிலங்கை

துரைத்தார் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் இம்மானுவேல் அடிகளார்.

ஜெனிவாவில் நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத்தொடரில் கலந்து கொண்டுள்ள அமைச்சர் மங்கள சமரவீரவை ஜெனிவா வளாகத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார் இம்மானுவேல் அடிகளார்.

“இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் தென்னிலங்கை மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டியது அவசியமாகும். தென்னிலங்கை மக்களைத் தெளிவுபடுத் தாமல் முன்னெடுக்கப்படும் நல்லிணக்கம் அர்த்தமற்றதாகிப் போகும் அபாயம் உள்ளது. தென்னிலங்கை மக்களைத் தெளிவுபடுத்தாமல் அரசு நல்லிணக்கம் தொடர்பில் சர்வதேசத்திற்கு வாக்குறுதி வழங்குவதில் அர்த்தமில்லை. நாட்டில் நல்லிணக்கம் முன்னெடுக்கப்படுமென நீங்கள் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளிலும் ஐ. நா. சபையிலும் கூறிவருகின்றீர்கள். ஆனால் நாட்டில் அதைச் செய்யத் தவறுகிறீர்கள். இது தொடர்பில் நல்லாட்சி அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும்” என்றார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் மங்கள சமரவீர, “இது தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்கும். 1994ஆம் ஆண்டு வெண்தாமரை இயக்கம் ஊடாக நாட்டின் நல்லிணக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன” என்று சுட்டிக்காட்டினார். (வ-5)

## இலங்கை

கள், வர்த்தக மற்றும் இராணுவ சலுகைகள் தங்கியிருப்பதாக இலங்கை அரசுக்குத் தெளிவான அறிவிப்பை விடுக்க வேண்டும்.

நிலைமாறுகால நீதி, இராணுவத்தினர் தண்டனையில் இருந்து தப்பித்தலுக்கு முடிவு காணல், பாதுகாப்புத் துறை மறுசீரமைப்பு, சட்டத்தின் ஆட்சி, ஐ.நா. தீர்மானத்துக்கு அமைவாக தமிழ் மக்களின் கரிசனைகளுக்குத் தீர்வு காணுதல் ஆகியன தொடர்பாக இலங்கை நம்பகரமான முன்னேற்றங்களை வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறு வெளிப்படுத்தினாலேயே அமெரிக்காவின் உதவிகள் இலங்கைக்குத் தொடரும். இதனை இலங்கை அரசுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

இராணுவம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் உள்ள மூத்த அதிகாரிகள், முக்கியமான குற்றவியல் விசாரணைகளைத் தடுப்பது தொடர்பான ஆதாரங்கள் அதிகரித்து வருகின்றன. இலங்கை அரசு இந்தத் தடுப்பாளர்களைப் பதவி நீக்க அல்லது அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முயற்சிக்கவேண்டும். நீதி மற்றும் பொறுப்புக்கூறல் முயற்சிகளைச் சீர்குலைக்கும் கொள்கை வகுப்பு நிலையில் உள்ள அதிகாரிகளை அகற்ற வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தெளிவான ஆணை, அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அரசுடன் அமெரிக்க இராஜாங்கச் செயலர் தொடர்ந்து பேசவேண்டும்.

நிலைமாறுகால நீதி, பொறுப்புக்கூறல், பாதிக்கப்பட்டவர்களுடன் அர்த்தமுள்ள கலந்துரையாடல், சட்டத்தின் ஆட்சி, சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு, ஏனைய சட்ட மறுசீரமைப்புகள், பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் பொது பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தை நீக்குதல், பாதுகாப்புத்துறை மறுசீரமைப்பு, வடக்கு - கிழக்கில் இராணுவ நீக்கம், இனவிவகாரங்கள், போர் மரபு உள்ளிட்ட விவகாரங்கள் குறித்து இலங்கையுடன் அமெரிக்கா தொடர்ந்து பேச வேண்டும் என இந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (வ-5)

## குற்றத்தை

செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நால்வரையும் நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதன்பின்னர் ஆசிரியரின் தவறினை வெளியிடங்களுக்குத் தெரிவிக்கக்கூடாது எனப் பரப்புரை செய்த பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், உறுப்பினர் ( இவர்கள் வேறு பாடசாலைகளின் ஆசிரியர்கள்) பழைய மாணவர் சங்கச் செயலாளர் மற்றும் குறித்த பாடசாலையின் மற்றொரு ஆசிரியர் ஆகிய நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

குறித்த எட்டுப் பேரும் நாளை நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என எதிர்பார்க்கப்பட்டவேளையில், சட்டத்தரணிகளான செல்வி கு.காயத்திரி மற்றும் நி.கேசாந்த் ஆகியோர் நீதிமன்றில் முன்வைத்த பிணை விண்ணப்பங்கள் நேற்று பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன.

இதில் அதிபர், பிரதி அதிபர் மற்றும் இரண்டு ஆசிரியைகளால் பிணை மனுவில் முன்வைக்கப்பட்ட உறுதிமொழியான நடந்த சம்பவத்தை மறைத்தது தமது தவறு எனவும், இனிமேல் இவ்வாறான தவறுகள் இடம்பெற்றால் உரிய இடங்களுக்கு உடனேயே அறிவிப்போம் என்பதை ஏற்றுக்கொண்ட நீதிவான் மன்றம், அவர்களை தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள்பிணையில் செல்ல உத்தரவிட்டது.

இதன்போது சாவகச்சேரி நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன் வழங்கிய கட்டளையில்:

எழுத்தறிவித்தவன் இறைவனாவான். அதனால்தான் ஆசிரியர்கள் கடவுளுக்கு நிகராக மதிக்கப்படுகின்றனர். ஆனால் கடவுளாக மதிக்கப்படுகின்ற ஆசிரியர்களில் சிலர் காமுகர்களாக இருக்கின்றார்கள். இப்பேர்ப்பட்ட காமுகர்களை ஆசிரியர்கள் என்ற ஸ்தானத்தில் வைத்து வழிபட முடியாது. ஒவ்வொரு பிள்ளைகளினதும் மேற்பாதுகாவலன் அந்தந்த இடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களே.

இந்த நீதிமன்றத்தின் தலையாய கடமை அந்தப் பிள்ளைகளை இப்பேர்ப்பட்ட காமுகர்களிடமிருந்து வருமுன்காப்பதேயாகும். இந்தக் காமுகர்களை வெளியே கொண்டுவராது சட்டத்தின் பிடியிலிருந்து தப்பி வாழ்வதற்காக எவராவது துணைபோவார்களானால் அவர்களும் தண்டிக்கப்படவேண்டிய வர்களே .

இவ்வாறு துணைபோகிறவர்களினால் இத்தகைய காமுகர்கள் தமது லீலைகளை மேன்மேலும் புரிவதுடன், அதனால் தொடர்ந்தும் பாடசாலை மாணவர்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாகுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கின்றது. இதுபோன்ற பாலியல் சேட்டைகளைப் புரிகின்ற காமுகர்களை பாடசாலையில் பல ஆசிரியர்கள் கண்டும் காணாததுபோல பாராமுகமாக நடந்து கொள்வதனால்தான் காமுகர்களின் களம் விரிவடைவதற்கும் ஏதுவாகின்றது.

'பிள்ளைகளின் பாதுகாப்பு ' என்பது பாடசாலை நேரங்களில் அதிபர், ஆசிரியர்களின் கைகளிலேயே உள்ளது. அவ்வாறு இருக்கும்பொழுது அந்தப் பிள்ளைகளின் பாதுகாப்பிற்கு மேற்பாதுகாவலனான நீதிமன்றத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடு உடையவர்கள் அவர்களே.

எனவே மேற்கூறிய விடயங்களில் : பாராமுகமாக ' இருப்பதும் காமுகர்களின் பாலியல் சேட்டைகளுக்கு துணை போவதாகவே கருதமுடியும். பிள்ளைகளின் நலன்களில் அக்கறை கொண்டு செயற்பட்டுவரும் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், பெண்கள் உரிமைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் போன்ற அதிகாரிகள் உட்பட பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் அவர்களது பெற்றோருக்கும் தகாதமுறையில் அறிவுறுத்தல்களை விடுத்தும், நீதிமன்றினை அணுகி நீதி பெற்றுக்கொள்ளாது தடை செய்து வருவதும் இந்த நீதிமன்றத்திற்குத் தெரியவந்துள்ளது.

மேற்சொல்லப்பட்ட காமுகர்களும், அதற்குத் துணை போகின்றவர்களும் சிறுவர் நலன்களில் அக்கறை கொண்டு செயற்பட்டு வரும் உத்தியோகத்தர்களையும் மாணவர்களையும் அவர்களது பெற்றோர்களையும் பயமுறுத்தி பாடசாலைகளில் பிள்ளைகளின் துர்நடத்தைகளை மூடிமறைக்க முனைந்த அனைவரும் இனங்காணப்பட்டு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள் .

மேற்படி துர்நடத்தை தொடர்பில் அறிந்தவர்கள் தெரிந்தவர்கள் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உயரிய நன்மைகருதி அந்தப் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மேன்மேலும் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்காகவும் இதுபோன்று வேறு பல மாணவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவும் சட்டத்தின் முன் அவ்வாறான குற்றம் இழைப்பவர்கள் அல்லது இழைக்க முனைபவர்களை கொண்டுவருவதற்காக ஏற்ற முறைப்பாடுகளை அல்லது தகவல்களை சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஊடாக அல்லது பொலிஸார் ஊடாக நீதிமன்றத்திற்கு தெரிவிப்பதன் மூலம், அவர்கள் இப்பேர்ப்பட்ட வழக்குகளில் சந்தேக நபர்களாக முற்படுத்தப்படுவதைத் தவிர்க்கலாம் என நீதிமன்றம் அபிப்பிராயப்படுகின்றது.

எது எவ்வாறு இருந்தாலும் இன்றைய தினம் செய்யப்பட்ட சமர்ப்பணத்தின் அடிப்படையில் 2 - 5 வரையான சந்தேக நபர்கள் இந்த வழக்கிற்குரிய துர்நடத்தை தொடர்பில் ஏற்ற மேலிடத்திற்கோ அல்லது நீதிமன்றுக்கோ அறிவிப்பதற்கு தவறிய சந்தர்ப்பத்தை தாங்கள் உணர்ந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், இவர்கள் இந்த துர்நடத்தை தொடர்பில் பொலிஸாரின் புலன்விசாரணைக்கு மேற்கொண்டு ஒத்துழைப்பு வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலும், வழக்கின் சாட்சிகளுடன் எந்தவிதமான தலையீடும் செய்யக்கூடாது என்ற நிபந்தனையின அடிப்படையிலும் பிணை வழங்கப்படுகிறது என நீதிவான் குறிப்பிட்டார்.

இந்த வழக்கின் சந்தேக நபர்களினதும் பிணையாளர்களினதும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் கடிதத்தை ஒருவாரத்தினுள் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டுமென நீதிவான் கட்டளையிட்டார். (வ-4,9)

## சர்வதேச

பங்களிப்பை இலங்கை அரசு ஒருபோதும் உதாசீனம் செய்யாது.

இவ்வாறு ஜெனிவா ஐ.நா மனித உரிமைகள் சபையில் நேற்று உறுதியளித்தார் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர.

வெளிநாட்டு நீதிபதிகள் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தெரிவித்து வரும் கருத்துக்கள் இறுதி முடிவல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

போரின் இறுதிக் கட்டத்தில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் கடந்த ஆண்டு தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதில் இலங்கை அரசின் செயற்பாடு குறித்து, நேற்றுமுன்தினம், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹூசேன் வாய்மொழி அறிக்கையை வெளிப்படுத்தினார். ஆணையாளரினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களுக்கு பதிலளித்து, நேற்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உரையாற்றினார்.

இதன்போதே அவர் மேற்கண்ட உறுதிமொழியை வழங்கினார்.

இது தொடர்பில் சபையில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்ததாவது:

சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் நல்லிணக்கம் ஆகியவை ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் வலுப்பெறும் என்று ஜனாதிபதி இந்த ஆண்டு இலங்கை சுதந்திர தின உரையில் கூறியிருந்தார்.

தற்போதைய அரசிலேயே, சர்வதேச நீதிபதிகளை இணைத்துக்கொள்ளக் கூடாது என்று கூறும் தரப்பினரும், இணைத்து கொள்ள வேண்டும் என்றும் கூறும் தரப்பினரும் இருக்கின்றனர்.

இந்த இரண்டு தரப்பினர் மத்தியிலும், அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய மாற்று வழிகள் உள்ளன. பாதிக்கப்பட்ட மக்கள் உள்பட அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக்கொண்டு, பொறுப்புக்கூறல் விடயத்தை நடைமுறைப்படுத்துவதையே நாம் முன்னெடுப்போம்.

இதற்கு புலம்பெயர் தமிழ் மக்களும், சர்வதேச சமூகமும் ஆதரவளிக்க வேண்டும். இந்தப் பணியை இலகுவாக மேற்கொள்வதற்கு ஏதுவாக தற்போது தடைவிதித்துள்ள அமைப்புக்களின் தடைகளை நீக்குவது குறித்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் ஆராயப்படுகிறது.

இலங்கைக்கு எதிராக மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் சுமத்துகின்றன. ஆனால் அவை இனப்படுகொலை தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை.

போரின் போது இடம்பெற்ற விசாரணைகளின் போது, இனப்படுகொலைகள் தொடர்பிலான குற்றங்கள் நிகழ்ந்ததாக தெரியவந்தால், அவை குறித்தும் விசாரணை நடத்துவதற்கும் அரசு தயாராகவுள்ளது.

இலங்கையின் புதிய தேசிய ஒற்றுமை அரசு பதவியேற்ற ஓராண்டுக்குள் நல்லிணக்கம் ஏற்பட பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நல்லாட்சி வழங்குவது, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் நல்லிணக்க வழிமுறையை ஆரம்பித்துள்ளோம்.

இந்த நல்லிணக்கவழிமுறைகளை ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைப்பதற்கான செயலகம் பிரதமர் அலுவலகத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முக்கிய பிரச்சினைகளான, இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பொதுமக்கள் காணிகள் 2018ஆம் ஆண்டுக்குள் ஒப்படைக்கப்படும். நாட்டின் திட்டங்களுக்காகத் தேவைப்படும் காணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டால், அவற்றின் உரிமையாளர்களுக்கு உரிய நியாயமான இழப்பீடு வழங்கப்படும்.

காணாமற்போனோருக்கான அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பது முக்கியமானது. கடந்த காலங்களில் தவறாகப் பயன்படுத்தப்பட்ட பயங்கரவாதத் தடை சட்டத்தை விலக்கிகொண்டு, மனித உரிமைகளை மதிக்கும் அதே சமயத்தில், பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கும் புதிய சட்டம், ஐ.நா. நிபுணர்களின் ஆலோசனைகளுடன் நடைமுறைப்படுத்தப்படும்.

நல்லிணக்கம் என்பது ஓரிரவில் வருவதல்ல. அது கடுமையான உழைப்பாலும், தொடர்ச்சியான நடவடிக்கைகளாலும் தான் பெறமுடியும்.

இலங்கை அரசின் சாதனைகளை மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கை மூலம் ஏற்றுக் கொண்டிருக்கின்றார். அதே சமயத்தில் அவர் கவலை வெளியிட்டிருக்கும் அம்சங்களையும் இலங்கை அரசு கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

இலங்கையில் நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய சமாதானத்தை எட்ட சர்வதேச சமூகத்துடன் தொடர்ந்து இணைந்து செயற்பட இலங்கை தயாராக இருக்கிறது - என்றார்.

(வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார்

னர். இவர்களிடம் மூன்று பெறுமதியான - தொன்மை யான தெய்வச் சிலைகள் காணப்பட்டன.
அந்த மூன்று சிலைகளில் ஒன்று பிள்ளையார் சிலையா கும். இந்தச் சிலைகளைக் கண்ட அதிகாரிகள் சீனவாசி களிடம் விசாரணை மேற்கொண்டனர். இதன்போது அவர்கள் முரணான தகவல்களை வெளியிட்டதனால் கைது செய்யப்பட்டனர்.
சம்பவம் தொடர்பில் சுங்கப் பிரிவினரும், தொல்பொருளியல் திணைக்களத்தினரும் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

(வ-5)

## வற்வரி

கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.
கடையடைப்பினால்பொதுமக்களின் அத்தியாவசிய - அன்றாடத் தேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. கடந்த வாரமும் மாத்திரம் வற்வரி அதிகரிப்பு எதிராக மூன்றுநகரங்களில் போராட்டம் நடத்தப்பட்டது.

(வ-5)

## மரண அறிவித்தல்

திருமதி
**யோகேஸ்வரி கணேசலிங்கம்**



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கம் நேற்று (29.06.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம்-மங்கையர்க்கரசி தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற கணேசலிங்கத்தின் அன்பு மனைவியும் உமையாள்(UK), உமாசங்கர்(ARPICO) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிக்குமார் (UK).சந்தமாலி (KLEENX Limited) ஆகியோரின் அன்பு மாமியாரும் லதீசா(UK), அவநிக்ஷா (UK) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்சாலையில் அஞ்சலிக்காக 30.06.2016 வியாழக்கிழமை வைக்கப்பட்டு 01.07.2016 வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று பி.ப 4.30 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**உமாசங்கர் (மகன்)**
**077 1001390**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1942 | | 2016 |
| 06 | | 06 |
| 24 | | 29 |



திருமதி
**அன்னம்மா குழந்தைவேலு**

அச்சுவேலி தெற்கு, நாவலம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா குழந்தை வேலு நேற்று (29.06.2016) புதன்கிழமை இறை வனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இளையவன்-பாறுவதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குழந்தை வேலுவின் அன்பு மனைவியும், பாலச்சந்திரன் (காவலாளி- வலி கிழக்கு பிரதேச சபை-புத்தூர்) ரவிச்சந்திரன் (அதிபர்- நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயும், வாணி, லதா ஆகியோரின் அன்பு மாமியும், வானதி (பொதுச்சேவை ஆணைக்குழு-வடக்கு மாகாணம்) பிரதீபன் (ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி பருத்தித் துறை) நதியா (ஆசிரியை கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்) முகூர்த்தனா (மாணவி-காமராசர் பல்கலைக் கழகம் - ஆரியகுளம்) ரஜீவன், நிரோஜன் (மாணவர் - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி) அர்ச்சனா (மாணவி- நெல்லியடி மத்திய கல்லூரி) சர்மினி (மாணவி வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) மயூரன் (மாணவன்- யாழ். இந்துக்கல்லூரி) சஜீபா (மாணவி - அச்சுவேலி- புனித தெரேசாள் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2016) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அச்சுவேலி தெற்கு,**
**அச்சுவேலி.**

(C/22153)
(10.17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
**கு.ரவிச்சந்திரன்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி அன்னம்மா குழந்தைவேலு**

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயருறுகிறோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரியர் நலன்புரி கழகமும்-மாணவர்களும்**
**யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி**

## மரண அறிவித்தல்

**பேரின்பராசா ஸ்ரீறஞ்சன்**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 21 | | 28 |
| 05 | | 06 |
| 1980 | | 2016 |



முத்துமாரி அம்மன் கோயிலடி மட்டுவில் வடக்கு , சாவகச்சேரியைச் சேர்ந்த பேரின்பராசா ஸ்ரீரஞ்சன் 28.06.2016 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பேரின்பராசா மற்றும் நாகம்மா தம்பதியின் அன்பு மகனும் ஸ்ரீகாந்தன், ஸ்ரீறஞ்சி, சிவரஞ்சி ஆகியோரின் பாசமிகு சகோத ரருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2016) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் வண்ணாத்திப்பாலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முத்துமாரி அம்மன் கோயிலடி,**
**மட்டுவில் வடக்கு,**
**சாவகச்சேரி**

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | | அம்பிகை அடியில் |
|---|---|---|
| 18 | | 28 |
| 03 | | 06 |
| 1947 | | 2016 |



**நாகமுத்து அருணகிரிநாதன் (நயினாதீவு)**

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தை சொந்த இடமாகவும் 20 B, ஜானகி லேன் , பம்பலப்பிட்டி கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து அருணகிரிநாதன் கடந்த (28.06. 2016) செவ்வாய்க்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து(சின்னப்பு)-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தையா-நாகமுத்து தம்பதியரின் மருமகனும் விமலாம்பிகையின் அன்புக் கணவரும் கவிதா (கனடா), சங்கீதா(கனடா), தர்ஷினி(கனடா), தனுசனன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் உமாகரன் (கனடா), கணேசதாஸ்(கனடா), ரூபன் ( கனடா), மாதுகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் தணிகன், ஜெனனி, இலக்ஷினி, லக்ஷன் , இனிசியா, பேசன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் திருமகள், யோகநாதன் , மணிமேகலை, வைகுந்தவாசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மயில்வாகனம், மாணிக்கவாசகர் மற்றும் பத்மசோதி, உதயமலர்(சுவிஸ்) காலஞ்சென்ற சொர்ணலிங்கம், மாசிலாமணி மற்றும் சிவபாக்கியம் (கனடா) சரஸ்வதி.தனலெட்சுமி, சிவானந்தன்(சுவிஸ்), திரவியநாதன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரஸ்வதி, சோதீஸ்வரி, சுந்தரலிங்கம்(கனடா), காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பரராஜசிங்கம், லலிதாம்பாள் (சுவிஸ்), பிறிகிற்றி (ஜேர்மனி) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.07.2016) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது நயினாதீவு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லபடும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நயினாதீவு-05**

தகவல்: **குடும்பத்தினர்.**
**021 3004056**

## மரண அறிவித்தல்



**ஆறுமுகம் தர்மலிங்கம்**

விளானை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் கடந்த (28.06. 2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நடராசா-சிதம்பரம் தம்பதியரின் மருமகனும் தவநாயகியின் அன்புக் கணவரும் தயானந்தன், சுதாநந்தன் (லண்டன்), ஐங்கரன் (லண்டன்) ஞானகரன் , திவாகரன், ஜனனி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெயதர்சினி (லண்டன்), சுகந்தன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான நடராசா, சண்முகம் மற்றும் செல்வநாயகி, கந்தசாமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவமணி(கனடா), தனராஜசிங்கம், யோகேஸ்வரி, சுந்தரராஜா (லண்டன்)ஆகியோரின் அன்பு மைத்துனரும் வைஸ்ணவி (லண்டன்), வர்ஷா (லண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30. 06.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லபடும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**விளானை, களபூமி,**
**காரைநகர்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 3505881**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஒலிம்பிக் தீபத்தை அணைக்க முயற்சி

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஓகஸ்ட் மாதம் ஒலிம்பிக் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் தீபம் அந்த நாட்டின் பல நகர்கள் வழியாக வலம்வந்துகொண்டிருந்த வேளையில் நபர் ஒருவர் தீபத்தை அணைக்க முயற்சித்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தீபத்தை குறிவைத்து மத்தியூ சில்வா என்பவர் தண்ணீரை ஊற்றியுள்ளார். சுடரை ஏந்திச் சென்றவர் மீது பட்டதால் சுடர் அணையவில்லை. இதனையடுத்து குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.


ஒலிம்பிக் சுடரை அணைக்க முயன்றதற்கு அரசியல் காரணம் ஏதேனும் இருக்குமா? என்பது தொடர்பான விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரசியல் காரணங்களால் தான் குறித்த நடவடிக்கையில் அவர் ஈடுபட்டார் என்பது உறுதியானால் 6 மாதம் முதல் 3 வருடங்கள்வரை சிறைத்தண்டனை கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. (ம)

# மோசமான போர்மில் தவிக்கும் வில்லியர்ஸ்

தென்னாபிரிக்க அணியின் தலைவரான வில்லியர்ஸ் மோசமான போர்மில் சிக்கித்தவித்து வருகிறார்.

தற்போது 32 வயதாகும் வில்லியர்ஸ், 2004ஆம் ஆண்டு தனது 20 ஆவது வயதில் இங்கிலாந்து அணிக்கெதிராக டெஸ்ட் தொடரில் அறிமுகமானார். 2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஒருநாள் தொடரில் அறிமுகமானார். அறிமுகமானதில் இருந்து கிட்டத்தட்ட 4 ஆண்டுகள் கழித்து 2009 ஆம் ஆண்டில் நட்சத்திர வீரராகத் திகழ்ந்தார். 2008 ஆம் ஆண்டுக்குப் பிறகு 3 ஆட்டங்களுக்கு மேல் கொண்ட தொடரில் குறைந்தது ஒரு அரைச் சதமாவது அடித்துவிடுவார். இப்படி பெயர் வாங்கிய வில்லியர்ஸ் தற்போது மோசமான போர்மில் தவிக்கிறார். அண்மையில் முடிவடைந்த முத்தரப்புத் தொடரில் (மேற்கிந்தியத் தீவுகள், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா) அவர் ஒரு அரைச் சதத்தையேனும் பதிவுசெய்யவில்லை. கிட்டத்தட்ட 8 வருடங்களுக்கு பின் வில்லியர்ஸ் ஒரு அரைச் சதத்தையேனும் பதிவுசெய்யாமல் தடுமாறியது இந்தத் தொடரில்தான். (ம)






# வேண்டும் மெஸ்ஸி; வலுக்கும் ஆதரவு

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி பன்னாட்டு ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்றுள்ள நிலையில், அவர் மீண்டும் வரவேண்டும் என்று ஆதரவுக் குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன.

சிலிக்கு எதிரான இறுதியாட்டத்தில் தோல்வியடைந்த பிற்பாடு, ஆர்ஜென்ரீனாவுக்காக இதுவே எனது இறுதியாட்டம் என்று சொல்லிவிட்டுச் சென்றார் மெஸ்ஸி. இது ஆர்ஜென்ரீனா ரசிகர்களுக்கு பேரிடியாக வந்து விழுந்தது. இவ்வளவு ஏன், மெஸ்ஸியின் போட்டியாளராக கருதப்படும் ரொனால்டோகூட இதை எதிர்பார்த்திருக்கமாட்டார். இந்த நிலையில் மெஸ்ஸி மீண்டும் வரவேண்டும் என்று ஆதரவுக் குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன. ஆர்ஜென்ரீனாவுக்கு உலகக் கிண்ணம் வேண்டிக் கொடுத்த முன்னாள் வீரர் மரடோனா, ஆர்ஜென்ரீனா ஜனாதிபதி போன்றோருடன் கால்பந்தாட்ட பிரபலங்கள் பலரும் மெஸ்ஸியைத் தொடர்ந்து விளையாடுமாறு வலியுறுத்தி வருகின்றனர்.

ஆர்ஜென்ரீனா அணியில் மெஸ்ஸி நீடிக்க வேண்டும். ஏனென்றால் அவர் இன்னும் மிகவும் திறமையுடன்தான் இருக்கிறார். 2018 ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெறும் உலகக்கிண்ணத் தொடரில் விளையாட வேண்டும். கிண்ணத்தை வென்று பெருமை சேர்க்க வேண்டும். மெஸ்ஸியை ஓய்வு பெறுமாறு யார் சொன்னது? என மரடோனா தெரிவித்தார்.

மெஸ்ஸி தனது முடிவை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும் என்ற அவசியம் உள்ளது என ஆர்ஜென்ரீன ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மட்டுமல்லாமல் அந்த நாட்டின் ரசிகர்கள், மெஸ்ஸி ஓய்வு பெறக்கூடாது என்ற கருத்தை வலியுறுத்தி கவனவீர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (ம)

# அன்டிமுர்ரே முன்னேற்றம்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் முர்ரே வெற்றிபெற்றார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் இரண்டாம் நிலை வீரரான முர்ரேயை எதிர்த்து 78ஆம் நிலை வீரரான லியாம் ப்ரொடி மோதினார். தனது தரப்படுத்தல் நிலைக்கேற்ற ஆட்டத்தை லியாம் வெளிப்படுத்திய போதிலும் முர்ரேயை வீழ்த்தும் படியாக அமையவில்லை. முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய முர்ரே தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தை தக்க வைத்து அடுத்த இரண்டு செற்களையும் முறையே 6:3, 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் மூலம் முர்ரே இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)



# செரினாவின் மிரட்டல் ஆரம்பம்

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் நேர்செற் வெற்றியைப் பதிவுசெய்துள்ளார் செரினா வில்லியம்ஸ்.

தரப்படுத்தலில் முதலிட வீராங்கனை, விம்பிள்டனின் நடப்புச் சம்பியன் என்ற பெருமைகளுடன் களமிறங்கிய செரினாவை எதிர்த்து மோதினார் தரப்படுத்தலில் முதல் 50 இடங்களுக்குள் இல்லாத சாடி கோவிச். இந்த ஆட்டத்தின் முதல் இரு செற்களையும் முறையே 6:2, 6:4 என்ற செற்கணக்கில் கைப்பற்றிய செரினா 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார். இந்த ஆட்டம் வெறும் 58 நிமிடங்கள் வரையே நீடித்தது. (ம)

# குறுகிய வட்டத்துக்குள் சங்காவின் கனவு அணி

இலங்கை அணியின் முன்னாள் தலைவரான சங்கா, சிறந்த வீரர்களாகத் தான் கருதும் வீரர்களை வைத்துக் கனவு அணியொன்றை அறிவித்துள்ளார். இந்த அணியில் சச்சின், மகேல இருவருக்கும் இடம்கொடுக்கப்படாமை சிறிது அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

லோட்ஸ் நிர்வாகம் ஒவ்வொரு வீரர்களையும் கனவு அணியொன்றைத் தருமாறு கேட்டுள்ளது. இதன்படி பலரும் தமது அணிகளை அறிவித்து வருகின்றனர். சங்கா தன்னுடன் சம காலத்தில் விளையாடிய வீரர்களை வைத்தே அணியை அறிவித்தார். ரிச்சட்ஸ், கவாஸ்கர், கபில்தேவ், ஸ்வோன் போன்ற ஜாம்பவான்கள் காலத்தை அவர் கருத்திற் கொள்ளவில்லை. எனவே சங்காவின் அணித் தெரிவு கடந்த பத்து முதல் இருபது வருடங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே கருதப்படுகிறது.

சங்கா அறிவித்த அணி (துடுப்பாட்ட வரிசையின்படி) – ஹைடன், ராகுல் ராவிட், லாரா, பொண்டிங், அரவிந்த டி சில்வா, கலிஸ், கில்கிறிஸ்ட், வோர்ண், முரளிதரன், அக்ரம், வாஸ். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூவரசன்குளம் பாடசாலை, கனகராயன்குளம் பாடசாலை என்பனவற்றின் மகளிர் கால்பந்தாட்ட அணிக்கு வவுனியா கால்பந்தாட்ட லீக்கினால் கால்பந்தாட்ட உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-23)

# இந்தியா-நியூசிலாந்து செப்ரெம்பரில் தொடர்கள்



இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் டெஸ்ட், ஒருநாள் தொடர்கள் நடைபெறவுள்ளன.

3 டெஸ்ட் ஆட்டங்கள், 5 ஒருநாள் ஆட்டங்கள் கொண்டதாகவே இந்தத் தொடர்கள் நடைபெறவுள்ளன. முதலாவதாக டெஸ்ட் தொடர்கள் நடைபெறவுள்ளன. இதன்படி முதல் டெஸ்ட் ஆட்டம் செப்டெம்பர் 22ஆம் திகதி இந்தோர் மைதானத்திலும், இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் செப்டெம்பர் 30 ஆம் திகதி கான்பூர் மைதானத்திலும், மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் ஒக்டோபர் 8 ஆம் திகதி ஈடன்கார்டன் மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

ஒருநாள் தொடரின் ஆட்டங்கள் முறையே ஒக்டோபர் 16ஆம், 19ஆம், 23ஆம், 26ஆம், 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் அரியாலை காந்தி சன சமூக நிலைய மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதுமடம் வைகறையை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதவுள்ளது. (ம-23)



# இளைஞர் கழக கால்பந்தாட்டம் கிண்ணம் வென்றது சங்கானை

கரணவாய், ஜூன் 30

பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனானது சங்கானை பிரதேச இளைஞர் அணி.

யாழ். மாவட்ட இளைஞர் சம்மேளனம் பிரதேச இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடத்திய மாவட்ட மட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானை இளைஞர் கழக அணி மோதியது. விஷ்ணுவின் வேடிக்கையால் ஆட்டத்துடன் இணைந்து கரவெட்டியின் ஆதிக்கமும் ஆரம்பமானது. வேறெந்த கோல்களும் பதிவாகாத நிலையில் முடிந்தது முதல் பாதி.

கரவெட்டியின் ஆதிக்கத்துடன் இரண்டாம் பாதி நகர்ந்து சென்ற போதிலும் ஆட்டம் நிறைவடைய 3 நிமிடங்கள் இருந்த வேளையில் சங்கானை அணியின் சுஜீவன் பதில் கோலைப் பதிவுசெய்ய 1:1 என்று சமநிலையானது. சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்கும் நிலை ஏற்பட முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் சம்பியனானது சங்கானை பிரதேச இளைஞர் கழக அணி. (ம-108)

## கூடைப்பந்தாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தத் திட்டமிட்ட இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடர் நாளை ஆரம்பமாகிறது.

ஆண்களுக்கான ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும், பெண்களுக்கான ஆட்டங்கள் வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்திலும் நடைபெறவுள்ளன. (ம-422)

## சென். ஹென்றிஸ் தாண்டவம்

கொத்மலை கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மாத்தறை ராகுல கல்லூரியை இலகுவாக வீழ்த்தியது இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி.

சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் மட்டுமே ராகுலவால் ஹென்றிஸுக்கு ஓரளவு ஈடு கொடுக்க முடிந்தது. 39 ஆவது நிமிடத்தில் சென். ஹென்றிஸ் கல்லூரி அணியின் சார்பாக பதிவானது முதல் கோல். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 69 ஆவது நிமிடத்தில் அன்ரனிராஜ், 75 ஆவது நிமிடத்தில் றூபன்ராஜ், 83ஆவது, 86ஆவது நிமிடங்களில் அனோசன் அடுத்தடுத்து ஹென்றிஸின் கோல் கணக்கை உயர்த்த முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் பதற்றமில்லாத வெற்றியைப் பதிவுசெய்தது சென். ஹென்றிஸ். (ம-23)

## டயமன்ஸ் ஹென்றிஸ் அரையிறுதி நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 30

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் டயமன்ஸ், சென். ஹென்றிஸ் அணிகள் நாளை மோதவுள்ளன. இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

## வென்றது வைகறை

யாழ்ப்பாணம், ஜூன் 30

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்தும் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் புதுமடம் வைகறை அணி வெற்றி பெற்றது.

வைகறை அணியை எதிர்த்து அண்ணா வி.கழக அணி மோதிய இந்த ஆட்டத்தில் வைகறை அணி 9:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

# போலந்து- போர்த்துக்கல் காலிறுதி நாளை

ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் நாளை ஆரம்பமாகின்றன. முதலாவது காலிறுதி ஆட்டத்தில் போர்த்துக்கல், போலந்து அணிகள் மோதவுள்ளன[illegible]

போலந்[illegible] அணி தனது லீக் ஆட்டங்களி[illegible] 1:0 என்ற கணக்கில் வடக்கு [illegible]யர்லாந்தையும், 1:0 என்ற க[illegible]க்கில் உக்ரைனையும் வீழ்த்திய[illegible]. பலம்வாய்ந்த ஜேர்மனியை[illegible]மன் செய்தது. சுவிற்சர்லாந்[illegible] சமநிலைத் தவிர்ப்பு உதைக[illegible]் வைத்து 5:4 என்ற கோல் க[illegible]க்கில் வென்றது.

போர்த்[illegible]கல் தனது லீக் ஆட்டத்தில், 1[illegible]ன்ற கோல் கணக்கில் ஐஸ்லா[illegible]தையும், 0:0 என்ற கோல் க[illegible]க்கில் ஆஸ்திரியாவையும், 3:3[illegible]ன்ற கோல் கணக்கில் ஹங்கே[illegible]யையும் சமன் செய்தது. குரோசி[illegible]வை 1:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.





இந்தத் தொடரில் இதுவரையிலுமான முடிவுகள், போர்த்துக்கல்லை விட போலந்து பலமாக உள்ளது என்பதை வெளிப்படுத்துகின்றன. இதே நிலை நாளையும் நீடித்தால் போர்த்துக்கல் தொடரில் இருந்து வெளியேற்றப்பட்டாலும் வியப்பில்லை. அந்த அணியின் நம்பிக்கை நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ றொனால்டோ மீது தான் அதிக எதிர் பார்ப்பு இருக்கிறது. நாளைய ஆட்டத்தில் அவர் தனது திறமையை நிரூபிக்க வேண்டிய [illegible] உள்ளார்.

இரு அணிகளும் [illegible] மோதியுள்ளன. தலா ஒவ்வொரு முறை இரு அணிகளும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

ஏனைய காலிறுதி ஆட்டங்களில் நாளை மறுதினம் சனிக்கிழமை வேல்ஸை எதிர்த்து பெல்ஜியமும், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியை எதிர்த்து இத்தாலியும், திங்கட்கிழமை பிரான்ஸை எதிர்த்து ஐஸ்லாந்தும் மோதவுள்ளன. (ம)

## சென். மேரிஸ் இலகு வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 30

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இம்பெற்ற ஆட்ட மொன்றில் சென்.மேரிஸ் அணி வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சி நிலைய மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதய ராஜா அணி பலப்பரீட்சை நடத்தியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் தனித்து ஆதிக்கம் செலுத்திய நாவாந்துறை சென். மேரிஸ் அணி முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் பட்டமில்லாத வெற்றியைப் பதிவு செய்தது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றமில்லாத தரப்படுத்தல்




சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஒரு நாள் ஆட்டங்களுக்கான துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசைப் பட்டியலை நேற்று வெளியிட்டது. இறுதியாக வெளியிடப்பட்ட பட்டியலில் இடம் பிடித்த வீரர்களே இதிலும் இடம்பிடித்துள்ளனர். இதன்படி வில்லியர்ஸ் முதலிடத்தில் நீடிக்கிறார். 887 புள்ளிகளுடன் தரவரியைப் பட்டியலில் தனித்து ஆதிக்கம் செலுத்துகிறார் வில்லியர்ஸ். அடுத்த இடத்தில் கோக்லி உள்ளார். அவர் 813 புள்ளிகளைப் பெற்றுள்ளார். அம்லா 778 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் உள்ளார். நான்காம் இடத்தில் குப்திலும் ஐந்தாம் இடத்தில் வில்லியம்சனும் உள்ளனர். ஆறு முதல்பத்து இடங்களுக்குள் முறையே ரோகித், டில்சான், தவான், குயின்டன்டிஹொக், ரூட் ஆகியோர் உள்ளனர்.

> 887 புள்ளிகளுடன் தரவரியைப் பட்டியலில் தனித்து ஆதிக்கம் செலுத்துகிறார் வில்லியர்ஸ்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி

பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ்
இயங்குகின்ற ஒரே சர்வதேச நிறுவனம் AF.

யாழில் 40 வருடங்களாக AF இன் பயணம்...

உலகம் முழுவதும் 1000 கிளைகள்.
இலங்கையில் சர்வதேச பிரெஞ் CERTIFICATES ஐ AF மட்டுமே வழங்குகின்றது.

பிரெஞ்சு மொழிபெயர்ப்புக்கள்:
இலவசம்: PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...

பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து...
செல்வோர் : யாழ். வன்னி, பிற மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படிக்கிறார்கள்.

ஆரம்பம்: 02.07.2016. உடன் பதிவு செய்யுங்கள்.
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் —> புகையிரதகடவை —> AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

# தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் இந்திய அணி அறிவிப்பு



இந்தியா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான இந்திய அணி உத்தியோகபூர்வமாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

சிம்பாப்வேக்கு எதிரான ஒரு நாள் மற்றும் ரி-20 தொடர்களுக்கான அணிகள் அறிவிக்கப்பட்ட வேளையே மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான உத்தேச அணி அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த உத்தேச அணியிலிருந்து நேற்று உத்தியோகபூர்வ அணி அறிவிக்கப்பட்டது.

இந்திய அணி விவரம் - விராட் கோக்லி (தலைவர்), ரகானே (துணைத் தலைவர்), தவான், முரளி விஜய், புஜாரா, ரோகித் சர்மா, ரவிந்திர ஜடேஜா, விருத்திமான் சகா, பின்னி, அஸ்வின், அமித் மிஸ்ரா, புவனேஸ்வர் குமார், முகமட் சமி, உமேஸ் யாதேவ், இசாந்த் சர்மா, ராகுல், சர்துல் தாக்கூர். (ம)

VACANCIES

A leading institution in jaffna requesting the following

ASSISTANT ACCOUNTANT

Qualifications :-
- B.Com Accounting or equivalent qualification.
- Holder of CPA Professional Module E or above will be an advantage.
- Must be computer literate and knowledge of Accounting packages will be and added advantage.
- At least 2 years working experience in an Audit firm or Commercial organization.

Key Result areas :-
- To maintain and process Accounting Data, postings etc.
- To prepare periodic performance reports.
- To prepare and analyse periodic financial reports, reconciliations etc.
- Any other relevant duties as may be assigned by head of Accounts
- Internal controls and Checks.
- Stock controls and co-ordination

Salary :-
Attractive remuneration packages will be offered to the right candidates commensurate with qualification and experience.

Mode of Application :
Interested candidates should apply enclosing the following :-
- Detailed curriculum vitae with two passport size photographs.
- Certified copies of relevant academic professional certificates.
- Name and Address of three references.

Application to be sent to:
Add. No: 2334
C/o Uthayan
361, Kasthuriyar Road, Jaffna.
vvacancy2@gmail.com

# பெடரர் அசத்தல் வெற்றி



விம்பிள்டன் ரென்னிஸ் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் பெடரர் வெற்றிபெற்றுள்ளார்.

சுவிற்சர்லாந்தின் முன்னணி வீரரான பெடரரை எதிர்த்து ஆர்ஜென்ரீனாவின் கிடோ பெல்லா மோதினார். முதலிரு செற்களிலும் கடும் நெருக்கடியைச் சந்தித்த போதிலும் 7:6, 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றார் பெடரர். மூன்றாவது செற்றிலும் பெடரர் வெற்றிபெற்றால் நேர் செற் வெற்றியைப் பதவுசெய்யலாம் என்ற நிலையில் அந்த செற்றை அவர் 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டார். (ம)

# முகுருசா திரில் வெற்றி



நடப்பு வருட் விம்பிள்டன் தொடரில் தனது முதலாவது வெற்றியைப் பதிவுசெய்துள்ளார் முகுருசா. கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான விம்பிள்டன் தொடர் லண்டனில் நடைபெற்று வருகிறது. நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவு ஆட்டமொன்றில் ஸ்பெய்னின் முகுருசாவை எதிர்த்து மோதினார் இத்தாலியின் கமிலா. முதல் செற்றை 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் முகுருசா. இரண்டாவது செற்றை 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் கமிலா. இறுதிச் செற்றான மூன்றாவது செற்றில் வெற்றிபெறுபவரே இரண்டாவது சுற்றுக்கு முன்னேறமுடியும் என்ற நிலை ஏற்பட இந்தச் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றார் முகுருசா. (ம)

Galaxy Star
வெற்றி வாரம் 070 திகதி 29.06.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
06 01 08 39 41
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 6,652,140/=

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2778 திகதி 29.06.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
22 44 47 48 M
போனஸ் இல. 15
சனிக்கிழமை ஜக்பொட்
ரூ. 12,766,400/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
2016.07.02 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாவது பசளை நிற டிக்கட்டுக்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.